


விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 28
கதிர் 44

வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 23 திங்கட்கிழமை (09/01/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# ஜெனிவா ஐ.நா. சபைக்கூட்டத் தொடரில் இலங்கையை ஆபிரிக்கா எதிர்க்கும்

## போர்க்குற்ற விசாரணைக்கும் ஆதரவு

டர்பன், ஜனவரி 9

எதிர்வரும் மார்ச் மாதம் சுவிஸ் நாட்டுத் தலைநகர் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை ஆபிரிக்க நாடுகள் எடுக்கும் என்று நம்பப்படுவதாக இங்கு டர்பனில் தகவல்கள் தெரிவிக்கின்றன. சர்வதேச போர்க்குற்ற விசாரணை ஒன்றுக்கும் அவை ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அரசு மீதான போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் குற்றங்கள் குறித்து, ஜெனிவா கூட்டத் தொடரில் மேற்கு நாடுகளால் இலங்கக்கு எதிரான பிரேரணை ஒன்று கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி ஒரு பிரேரணை கொண்டு வரப்பட்டால் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை ஆபிரிக்க நாடுகள் எடுக்கும் என்ற நம்பிக்கையே இங்கு நிலவுகின்றது.

ஆபிரிக்க காங்கிரஸின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்க தென்னாபிரிக்கா வந்துள்ள தமிழ்த் [illegible]க் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவினர் இங்கு ஆபிரிக்கா வந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவினர் இங்கு ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய பின்னர், இந்த நம்பிக்கையை டர்பனில் இராஜதந்திர வட்டாரங்கள் வெளியிட்டன.

கூட்டமைப்பினருக்கும் ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பில், இலங்கை அரசுடனான பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விளக்கி உள்ளனர்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமை குறித்த போராட்டம், தமிழ் மக்கள் கொண்டுள்ள அரசியல் நிலை, தற்போதைய கள நிலவரம் போன்ற பல தரப்பட்ட விடயங்கள் குறித்தும் ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளுடன் கூட்டமைப்பு கலந்துரையாடியுள்ளது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை மற்றும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபை குறித்தும் விரிவாக இரு தரப்பினரும்

» 27

### துணைத் தூதுவர் திருப்பி அழைப்பு

சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதுவர் வடிவேல் இலங்கைத் மூர்த்தியை அரசு திருப்பி அழைத்துள்ளதாக வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இவருக்குப் பதிலாக சென்னையில் உள்ள துணைத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளவரின் பெயர் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. திடீரென சென்னையில் உள்ள துணைத் தூதுவரை அரசு திருப்பி அழைத்துள்ளதற்கான காரணம் ஏதும் உடனடியாகத் தெரியவரவில்லை. (ஓ-10)

### கிளிநொச்சி நகரில் கைகலப்பு

கிளிநொச்சி நகரில் நேற்று மாலை இரு கோஷ்டிகளிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்தது. கரடிப்போக்குச் சந்தியில் ஏற்பட்ட முறுகல் பின்னர் டிப்போச் சந்தியில் கைகலப்பாக மாறியது. கிரிக்கெட் மட்டையால் தாக்கப்பட்டதால் இளைஞர் ஒருவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தால் நகரில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

### புத்தர் சிலை நிறுவும் முயற்சி முறியடிப்பு

திருகோணமலை பஸ் நிலையத்திற்கு அருகில் இருந்த சிறிய புத்தர் சிலைக்கு அருகில் பெரிய புத்தர்சிலை ஒன்றை நிறுவுவதற்கு பெரும்பான்மைஇன மக்கள் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது எனத் திருகோணமலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அங்கிருந்த சிலைக்கு அருகில் பெரிய கொங்கிறீட் தளத்தை பெரும்பான்மை இன மக்கள் அமைத்து பெரிய புத்தர் சிலையொன்றை நிறுவுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர் எனவும் உடனடியாக அப்பகுதி மக்கள் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் புத்தர் சிலை நிறுவும் நடவடிக்கையை தடுத்ததால் அந்த முயற்சி கைவிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புத்த பெருமான் வருகை நினைவுகூர்ந்து முத்திரை

புத்தபெருமான் மஹியங்கனைக்கு விஜயம் செய்து இரண்டாயிரத்து 600 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு விசேட முத்திரை மற்றும் கடித உறை வெளியிடும் நிகழ்வு நேற்று மஹியங்கனை விகாரையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதி விகாரையில் இடம்பெற்ற விசேட ஆராதனைகளிலும் கலந்துகொண்டார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழரின் விடுதலை இயக்கமாக அங்கீகரித்து எம்மை அழைத்தது தென்னாபிரிக்க அரசு

### தமிழ்க் கூட்டமைப்பு தெரிவிப்பு; நூற்றாண்டு விழாவிலும் பங்கேற்றது

டர்பன், ஜன.9

தமிழ் மக்களின் விடுதலைக்காக உழைக்கும் இயக்கமாக தமிழ்க் கூட்டமைப்பை அங்கீகரித்து ஆபிரிக்க தேசியக் காங்கிரஸின் நூற்றாண்டு விழாவுக்கு தென்னாபிரிக்கா அழைப்பை விடுத்திருந்தது - என்று தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க தேசியக் காங்கிரஸின் நூற்றாண்டு விழாவை தென்னாபிரிக்கா நேற்றுக் கொண்டாடியது. ப்ளூம்பொன்டீன் நகரில் நடந்த நூற்றாண்டு விழா நிகழ்வுகளில் பல்லாயிரக் கணக்கான தென்னாபிரிக்கர்கள் கூடியிருந்தார்கள்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டனர்.

புலம்பெயர் தமிழர்கள் அங்கம் வகிக்கும் உலகத் தமிழர்

» 27

## கொழும்பிலிருந்து வைத்தியக் குழு வருகை

கிளிநொச்சி, ஜன.9

கிளிநொச்சி மாவட்டத்தில் வேகமாகப் பரவிவரும் இனந்தெரியாத காய்ச்சல் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ள கொழும்பிலிருந்து விசேட வைத்திய குழுவினர் நேற்றைய தினம் கிளிநொச்சிக்கு வந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வேகமாகப் பரவி வரும் இனந்தெரியாத காய்ச்சலினால் இதுவரையில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நோய் மேலும் பரவாமலிருக்க உடனடி நடவடிக்கையாகவே கொழும்பிலிருந்து மருத்துவக் குழு வருகை தந்துள்ளது.

விசேட நோயியல் கூற்று நிபுணர் தலைமையிலான குழுவினரே வருகை தந்துள்ளனர். இவர்கள் கிளிநொச்சி வைத்திய சாலையின் அறிக்கைகளை ஆராய்ந்த பின்னர் உயிரிழந்தவர்களின் இடங்களுக்கு நேரடியாகச் சென்று ஆய்வுகளை மேற்

» 27

## ஒட்டகப்புலம் காணி அபகரிப்பு; மக்கள் தரப்பில் கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 9

வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலுள்ள ஒட்டகப்புலம் பகுதியைச் சேர்ந்த மக்கள் காணி 20 ஏக்கரையும் கபளீகரம் செய்யப் படையினர் மேற்கொண்டுள்ள முயற்சிக்கு அந்த மக்களிடம் இருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பி உள்ளது.

''செய்தியைப் பார்த்ததும் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந் தோம்'' என்றார் ஒருவர்.

''இத்தனை வருடங்களாக எங்கள் மண்ணுக்குத் திரும்பிப்போவோம் என்ற நம்பிக்கையுடன்தான் காத்திருந்தோம். இப்படி எங்கள் தலையில் இடியை இறக்கி இருக்கிறார்களே'' என்று தெரிவித்தார் பெண்மணி ஒருவர்.

அந்தப் பகுதியிலுள்ள கிறிஸ் தவத் தேவாலயம் சுமார் 6 மாதங்களுக்கு முன்னர், இராணுவத்தின் வடக்கு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவால் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளிடம் கையளிக்கப்பட்டபோது தமது சொந்த மண் திரும்பக் கிடைத்து விடும் என்று தாங்கள் நம்பியிருந்தனர் என்று பி.பி.சே.செல்வநாதன் தெரிவித்தார். ஒட்டகப்புலத்திலுள்ள அமல உற்பவ மக்கள் மன்றத்தின் தலைவர் அவர்.

ஒட்டகப்புலத்தில் வசித்த அனைவருமே விவசாயிகள் என்று கூறும் அவர், கடந்த 20 வருடங்களாக வருமானத்தைப் பெறுவதற்கான தொழில் இன்றிப் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் என்றும் கூறினார்.

''உதயனில் வந்த செய்தியைப்

» 27

## சர்வதேச பிடிக்குள் இலங்கையை சிக்கவைக்க கூட்டமைப்பு சூழ்ச்சி

கொழும்பு, ஜன.9

ஜெனீவா மாநாட்டின்போது இலங்கையை சர்வதேசப் பிடிக்குள் சிக்கவைப்பதற்கான சூழ்ச்சித் திட்டங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீவிரமாக வகுத்து வருகின்றது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

நாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடனடியாகத் தடைசெய்யவேண்டியது காலத்தின் கட்டாயமாக மாறிவிட்டது. எனவே, இனியும் அரசு மௌனம் காத்தால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர கூறியவை வருமாறு:-

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் நூற்றாண்டு விழா அழைப்பை அரசு நிராகரித்துள்ள நிலையில், அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து சிறப்பிப்பதன் உள்நோக்கத்தை நாம் அறிவோம்.

ஜெனிவா மாநாடு நெருங்கி வரும் நிலையில் இலங்கைக்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான சதித் திட்டங்களை கூட்டமைப்பு வகுத்துவருகின்றது. மாநாட்டில் இலங்கையை தவிக்க வைப்பதே அதன் நோக்கமாகவுள்ளது.

நாட்டுக்குத் துரோகமிழைக்

» 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச் சுற்றுலா

இவ்வாறான சுற்றுலாக்கள் மாணவர்களுக்குப் பயனுடையதாக அமையும்.

கிளிநொச்சி, ஜன.9
கிளிநொச்சி மத்திய கல்லூரியின் தரம்-5 மாணவர்களும், ஆசிரியர்களும் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய தரம் 5 மாணவர்களும், ஆசிரியர்களும் இணைந்து 86 பேர் கொண்ட குழுவினராக கல்விச் சுற்றுலா சென்று வந்துள்ளனர். இக்குழுவில் சில பெற்றோர்களும் உள்ளடங்கியிருந்தனர்.

இவர்கள் அனுராதபுரம் மாவட்டத்திற்குச் சென்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்த்து வந்துள்ளனர். குருணாகல் மிகிந்தலைக் குன்று, சிகிரியாக் குன்று, றுவான் வெலிசாய தாதுகோபம், புனித வெள்ளரசு மரம், ஆயிரங்கால் மண்டபம் போன்ற முக்கிய இடங்களை இவர்கள் பார்த்து வந்துள்ளனர்.

இது மாணவர்களின் கல்விக்கு மிகவும் பயனுடையதாக அமைந்ததாக மாணவர்களும் அவர்களது பெற்றோரும் தெரிவித்தனர்.(க-405)

## வேலி அமைக்கும் பெற்றோர்

கிளிநொச்சி, ஜன.9
கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தின் பாதுகாப்பு வேலி பெற்றோர்களால் அமைக்கப்பட்டு வருகின்றது.

இப் பாடசாலை 2011 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இருந்து பிரிந்து தனியான பாடசாலையாக கிளிநொச்சி மத்திய கல்லூரி வளாகத்தின் தென் பகுதியில் இயங்கிவருகிறது. அவ்வாறு பிரிந்த காலத்தில் இருந்து இப்பாடசாலையானது வேலிகள் எதுவுமற்ற திறந்தவெளிப் பாடசாலையாக இயங்கிவந்தது. இதனால் கால்நடைகளின் தொல்லையும், திருடர்களின் தொல்லையும் அதிகரித்துக் காணப்பட்டன.

இதனால் பாடசாலை நிர்வாகத்தினர் பெற்றோரைக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்கள் தாமாகவே முன்வந்து கொங்கிறீற் தூண்களை இட்டு முட்கம்பி வேலி அமைத்துவருகின்றனர். (405)

# இந்திய வீட்டுத் திட்டம்

கண்டாவளைப் பிரதேச செயகப் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் கிராம சேவகர் பிரிவில் 268 பயனாளிகள் இந்திய வீட்டுத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, ஜன.9
கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் கிராம சேவகர் பிரிவில் 268 பயனாளிகள் இந்திய வீட்டுத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களது பெயர்ப் பட்டியல் கிராம அலுவலர் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கிராமத்துக்கென ஒதுக்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை அடிப்படையில் முன்னுரிமை ஒழுங்கில் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

அத்துடன் இவ்வருடத்திற்கென விண்ணப்பித்தவர்களில் இன்னும் 47பேரின் பெயர்கள் இப்பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை எனவும் தெரிய வருகின்றது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களில் அரசு ஊழியர்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஏற்கனவே இக்கிராம அலுவலர் பிரிவில் நேர்ப் திட்டத்தின் கீழ் 136 பயனாளிகளுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் 89 பயனாளிகளுக்கு யூ.என்.கபிற்றாட் நிறுவனத்தின் வீடுகளின் திருத்தத்துக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-405)



வன்னியில் மீள்குடியமர்ந்த மக்கள் அனுபவித்து வரும் அவலங்களில் இதுவுமொன்றாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (6)

## புதிய கட்டடம் திறந்துவைப்பு

கிளிநொச்சி, ஜன.9
கிளிநொச்சி இயக்கச்சி அ.த.க. பாடசாலையின் புதிய கட்டடத் திறப்புவிழா கடந்த 28ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் ஞா.ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, மு.சந்திரகுமார் ஆகியோரும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியும் கலந்துகொண்டு புதிய கட்டடத்தைத் திறந்துவைத்தனர்.

இதில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் மற்றும் வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இக் கட்டடமானது 'என்றிப்' திட்டத்தின் கீழ் 5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டது. இதன் மூலம் பாடசாலையின் வகுப்பறைத் தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாக பாடசாலைச் சமூகத்தினர் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (க-405)

## கௌரவிக்கும் நிகழ்வு

கிளிநொச்சி, ஜன.9
கிளிநொச்சி மாவட்டம் அக்கரயன் பிரதேச மருத்துவமனையில் ஒய்வு பெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வுக்குக் கிளிநொச்சி மாவட்ட தாய், சேய் நலன் மருத்துவர் எஸ்.முரளிகரன் முதன்மை விருந்தினராக் கலந்துகொண்டார்.

இங்கு ஒய்வு பெற்றுச்செல்பவர்களைப் பலரும் பாராட்டி உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் மருத்துவமனையில் கடமையாற்றும் தாதியர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர்.(க-410)

# கல்லூரிக்குப் பெயர்ப்பலகை

கிளிநொச்சி கண்டாவளை கல்விக் கோட்டத் தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றான முரசு மோட்டை முருகானந்தா மகா வித்தியாலயம் கடந்த ஆண்டு கல்லூரியாகத் தரம் உயர்த்துப்பட்டிருந்தது.

கிளிநொச்சி, ஜன.9
கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியின் பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்யும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளை கல்விக் கோட்டத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றான முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயம் கடந்த ஆண்டு கல்லூரியாகத் தரம் உயர்த்தப்பட்டிருந்தது.

இதற்கான பெயர்பலகை திரை நீக்கம் செய்யும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையில் நடைபெற்றுள்ளது.

வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பாடசாலையின் முதல்வர் தி.வரதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வுக்கு முன்னதாக முதன்மை விருந்தினர்களும் சிறப்பு விருந்தினர்களும் முரசுமோட்டை வைரவர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பாண்ட் வாத்திய இசையுடன் பாடசாலை வளாகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கல விளக்கேற்றி வைக்கப்பட்டதையடுத்து சுமார் 75 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கல்லூரியின் பெயர்ப் பலகையை கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சின்னராசா நீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து உரையை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், பிரதிக் கல்விப் பணிப்பாளர் சின்னராசா, ஓய்வு பெற்ற அதிபரும் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான ம.பத்மநாதன், ஊரியான் கமக்கார அமைப்புத்தலைவர் செ.சிவப்பிரகாசம் ஆகியோர் ஆற்றினர்.

கடந்த 1939 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி 30 மாணவர்கள் மற்றும் 07 ஆசிரியர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை பல்வேறு வளர்ச்சி பெற்றுச் சாதனை படைத்துள்ளது. கண்டாவளை பிரதேசத்தில் உள்ள 23 பாடசாலைகளில் கல்லூரிக்கான தரத்தை இந்தப் பாடசாலை மட்டுமே பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# துணுக்காயில் மரண சகாயக் குழு

துணுக்காயில் மரண சகாயக் குழுவை அமைப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் கடந்த 26ஆம் திகதி அனிஞ்சியன்குளம் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

துணுக்காய்ப் பிரதேச செயலர் எஸ்.குணபாலன் இதற்குத் தலைமை தாங்கினார். மல்லாவி காவல்துறையினரின் அனுசரணையுடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு அவர்களின் மரணத்தின் போது எவ்வாறு உதவிபுரியலாம் என்பது தொடர்பாக இங்கு ஆராயப்பட்டது.

மேலும் இங்கு சமுகமளித்திருந்த மூன்று கிராமங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளால் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

வறுமையில் இருக்கும் குடும்பங்களின் ஒருவர் இறந்தால் அனைத்து மரண வீட்டுச் செலவுகளையும் வழங்குவதற்கு மரண சகாயக் குழுவைத் தெரிவு செய்வதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் எதிர்வரும் 12ஆம் திகதி துனுக்காய் பிரதேசத்தில் குழுவுக்கான நிர்வாகிகள் தெரிவுசெய்யப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் துணுக்காய்ப் பிரதேச சபைத் தலைவர் வீ.இராசரத்திணம்,உபதலைவர்எஸ்.செல்வரத்தினம், பிரதேச சபைச் செயலாளர் ம.கிருஸ்ண நவரத்தினராஜா, தனியார் பஸ் சங்கத்தின் துணைத்தலைவர், அனிஞ்சியன் குளம் கிராம அலுவலர் சி.சண்முகநாதன், மல்லாவி வடக்கு கிராம அலுவலகர் ரவீந்திரன், கிராம அலுவலர் தேவதாசன் ஆகியோருடன் கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (க-415)

# அறிவியலாளர்களுக்கு தற்போது பற்றாக்குறை

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல்

கடந்த கால யுத்தம் காரணமாக ஒரு தொகுதி மாணவர் சமூகத்தினை இழந்துள்ளமையால் தற்போது புத்திஜீவிகள் மற்றும் அறிவியலாளர்களுக்கான பற்றாக்குறை காணப்படுகிறது.

கிளிநொச்சி, ஜன.9
கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த கால யுத்தம் காரணமாக ஒரு தொகுதி மாணவர் சமூகத்தினை இழந்துள்ளமையால் தற்போது புத்திஜீவிகள் மற்றும் அறிவியலாளர்களுக்கான பற்றாக்குறை நிலவி வருகின்றது. இவ்வாறு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம் முரசுமோட்டை முருகானந்தா, கல்லூரியின் பெயர்ப் பலகை திரை நீக்கம் செய்யும் நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த கால யுத்தம் காரணமாக எமது மாவட்டத்தில் நல்ல ஒழுக்கமுள்ள கல்வியில் சிறந்து விளங்கிய மாணவர்கள் பலரை இழந்துள்ளோம். இந்த வெற்றிடமானது இன்று எமது பிரதேசத்தில் நிலவுகின்ற பொறியியலாளர்கள், மருத்து வர்கள், புத்திஜீவிகள் என்போருக்கான வெற்றிடங்களுக்குக் காரணமாகியுள்ளது.

இதனால் பல்வேறு சவால்களையும் நெருக்கடிகளையும் நாங்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இனிவரும் மாணவர் சமூகம் நல்லமுறையில் தமது கல்வியை தொடர்ந்து எதிர்காலத்தில் இவ்வாறுள்ள இடைவெளிகளை நிரப்ப வேண்டும் என்றும் அவர் மேலும் [illegible]. (க-06)

## கால் நடைகளுக்கு கொட்டகைகள்

கிளிநொச்சி, ஜன.9
கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் கால்நடைகளுக்குக் கொட்டகைகள் அமைப்பதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 17 பயனாளிகளுக்கு மாடுகள் வளர்ப்பதற்கான கொட்டகை அமைப்பதற்கும், 13 பயனாளிகளுக்கு ஆடுகள் வளர்ப்பதற்குரிய கொட்டகை அமைப்பதற்கும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்தப் பயனாளிகளுக்கு விரைவில் நல்லின மாடுகளும், ஆடுகளும் வழங்கப்படவுள்ளன.

[illegible] நிறுவனத்தின் அனுசரணையுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.(க-405)

# குளம் சீரமைக்கப்படாததால் மானாவாரிப் பயிர்ச்செய்கை

பெரியகுளம் கிராமத்திலுள்ள குளம் புனரமைக்கப்படாமையால் விவசாயச் செய்கைகளுக்கு வானத்தையே நம்பியிருக்க வேண்டிய அவல நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

முல்லைத்தீவு, ஜன.9
முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரியகுளம் கிராமத்திலுள்ள குளம் புனரமைக்கப்படாமையால் விவசாயச் செய்கைகளை மானாவாரியாகவே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இங்குள்ள பெரியகுளம் பல ஆண்டுகளாகப் புனரமைக்கப்படாத நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் மழை காலத்தில் நீரைத் தேக்கி வைக்க முடியாதுள்ளது.

இதனால் விவசாயிகள் வானத்தையே நம்பியிருக்க வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

மேலும், இக்குளத்தின் புனரமைப்பு வேலைகளைப் பொறுப்பெடுத்தவர் எவ்வித அக்கறையுமின்றி இருப்பதால் வேலைகளும் தாமதமடைகின்றன.

மேலும் போதிய மழை பெய்யாவிட்டால் விவசாயம் பாதிக்கப்படும் அவல நிலையும் காணப்படுகின்றது.

இந்த நிலையில் யானைகளும் பயிர்களை அழித்து வரு கின்றன. இங்கு சுமார் 150 ஏக்கருக்கு மேல் விவசாயம் மேற் கொள்ளப்பட்டுள்ளது. (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொறுப்புக் கூறுவதற்கு இணங்குமா அரசு...?

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக, அனைத்துலக விசாரணைப் பொறிமுறையை உருவாக்கும் விடயத்தில் தலையிடுமாறு அமெரிக்காவிடம் கோரப்பட்டுள்ளது.

வெள்ளை மாளிகையின் இணையத்தளம் ஊடாக இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்தக் கோரிக்கை மனுவில் ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் ஒப்பமிட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தக் கோரிக்கைக்கு, அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த உதவிச் செயலாளர் மைக்கல் எஸ்.போஸ்னர், அறிக்கை ஒன்றின் மூலம் பதில் அளித்துள்ளார்.

இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அனைத்துலக விசாரணை ஒன்று அவசியம் என்பதனை அமெரிக்கா ஏற்கனவே தெரிவித்துவிட்டது. அதனை இலங்கை அரசு கவனத்தில் கொண்டு செயற்படுத்தாத பட்சத்தில் - தனது கடமையை நிறைவேற்றாத அல்லது நிறைவேற்ற விரும்பாத பட்சத்தில் - அனைத்துலக விசாரணைப் பொறிமுறையை உருவாக்க முடியும். இவ்வாறு மைக்கல் போஸ்னர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து 2009ஆம் ஆண்டிலும் 2010 ஆம் ஆண்டிலும் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அறிக்கைகளைத் தயாரித்து இருந்தது. குறிப்பிட்ட மனித உரிமை மீறல்களுக்கு, இலங்கை அரசு தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக் கூறவேண்டியது முக்கியம் என்று அந்த அறிக்கைகளில் தெளிவாகச் சுட்டிக்காட்டி இருந்தோம் --

பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்த மோதல்களால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதில், இலங்கையின் சொந்த முயற்சிகளே முன்னேற்றத்தைத் தரும்.

அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுவதில் தமக்குள்ள அடிப்படைக் கடமையை, ''இலங்கை அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டும்.''

அரசாங்கம் ஒன்று தனது கடமையை நிறைவேற்றாத அல்லது நிறைவேற்ற விரும்பாத சூழ்நிலையிலேயே, சர்வதேச பொறுப்புக் கூறும் விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்க முடியும் -- என்று மைக்கல் எஸ்.போஸ்னர் தெரிவித்துள்ளார்.

ஆனால், இலங்கை அரசாங்கம் போர்க் குற்றச்சாட்டுகளுக்குத் தனது சொந்தத்தில் பதில் கூறும் நிலையில் இல்லை. அதனைத் தடுப்பதற்காகவே நல்லிணக்க ஆணைக் குழுவை நியமித்து, போர்க் குற்றச்சாட்டுகளைத் தவிர்த்து விசாரணைகள் நடத்தும் தந்திரமான உத்தியைக் கையாண்டது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட பின்னரும், அதில் தெரிவிக்கப்பட்டுள்ள தனக்குப் பிடித்த, வாய்ப்பான சிபார்சுகளை நடைமுறைப்படுத்தும் ஏற்பாடுகளில் மெதுமெதுவாகக் காலடி எடுத்து வைப்பதற்கான போக்கே அரசிடம் தென்படுகிறது.

போர்க்குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணைகளை நடத்தும் பட்சத்தில், அதற்கான குழுவில் சர்வதேச நீதியாளர்களும் அங்கம் வகிக்க வேண்டும் என்ற அனைத்துலகக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள விரும்பாமல், நல்லிணக்க ஆணைக்குழு அந்தப் பணியைச் செய்யும் என்ற எதிர்பார்ப்புத் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் அந்த எதிர்பார்ப்பு எந்த வகையிலும் நிறைவேற்றப்படவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவினால் சில பயனுள்ள சிபார்சுகள் தெரிவிக்கப்பட்டாலும், அவை உரிய வடிவத்தில் நடைமுறைக்கு வர நீண்ட காலம் எடுக்கும் என்று எதிர்பார்க்கலாம். இலங்கை அரசுகள் காலத்துக்குக் காலம் நியமித்த, நியமிக்கும் விசாரணைக்குழுக்களின் சிபார்சுகள், தேவை அறிந்து குறுகிய காலத்தில் விரைந்து மக்களுக்குப் பயன் தந்ததில்லை!

இத்தகைய பின்புலத்தில், அமெரிக்க அதிகாரி கூறுவதைக் கேட்டுப் போர்க் குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக் கூறுவதற்கென, தனது சொந்தத்தில் பொறி முறை ஒன்றை இலங்கை அரசு உருவாக்கும் என்று கடுகளவும் எதிர்பார்க்க முடியாது. அது அமெரிக்காவின் வெறும் கனவு என்று குறித்துரைக்கப்படக் கூடியதாகும். இல்லையெனில், இதுவிடயத்தில் இலங்கை அரசுடன் தான் ஏன் வீணாகப் பகைத்துக்கொள்ள வேண்டும் என்று பின்வாங்குகிறதோ என்னவோ...? அதிலும் ஓர் உள்நோக்கம் இல்லாமலா போகும்...?

வேண்டுமானால், எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக் குழுவின் அமர்வின் போது தனது நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளுக்கு, வர்ணம் பூசி, மெருகூட்டி, போர்க் குற்றச்சாட்டுகளை மை பூசி அழிக்கவே அரசு தன்னாலான சகல வழிமுறைகளையும் கையில் எடுக்கும் என்று முழுக்க முழுக்க எதிர்பார்க்கலாம்.

அல்லாதுவிடின் மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவரும் அமைச்சருமான மஹிந்த சமரசிங்க, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை வெளியிடப்பட்ட இரண்டு நாள்களின் பின்னர் தெரிவித்த கருத்துக்கு இணங்க-

ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்துப் பரிந்துரைகளையும் அரசு ஏற்கவேண்டியதில்லை என்ற நிலைப்பாட்டையே ஆட்சியாளர் கையில் தூக்குவர் என்று எதிர்பார்க்கலாம்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச நெருக்கடிகள் குழு, சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அமைப்புகள் -

போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தவோ,குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தவோ எந்த வழிகாட்டுதல்களையும் வழங்கவில்லை என்று தெரிவித்த கருத்துக்களைச் சீரணிக்க முடியாமல் சீற்றத்துடன் வெளியிட்ட நிலைப்பாடே இலங்கை அரசினுடையது என்பதனை-

அமெரிக்க அதிகாரி மைக்கல் போஸ்னருக்கு பகுப்பாய்வு (Analytical) வழிமுறை மறந்து போயிற்றோ, என்னவோ என்று எண்ண வைக்கிறது!

# நெடுந்தீவில் இருந்து வெளியிடங்களுக்கு பயணிப்பவர்களுக்கு பொலிஸ் பதிவு

## புதிய நடைமுறையால் மக்கள் சிரமம்

**நேற்று நெடுந்தீவில் இருந்து புறப்பட்டவர்கள் பொலிஸாரிடம் பதிவு செய்த பின்னரே பயணக்க முடிந்தது. இதனால் பயணிகள் பெரும் சிரமத்துக்கு ஆளாகினர்.**

யாழ்ப்பாணம் , ஜன.9

நெடுந்தீவில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வோர் பொலிஸ் பதிவின் பின்னரே பயணிக்க அனுமதிக்கப்பட்டனர். நேற்று முதல் திடீரென நடைமுறைக்கு வந்த இந்தப் பொலிஸ் பதிவால் மக்கள் பெரும் சிரமத்துக்கு ஆளாகினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

நெடுந்தீவில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்காக நெடுந்தீவு துறைமுகத்துக்கு வழக்கம் போல பயணிகள் நேற்றும் வந்தனர்.

எனினும் அவர்கள் அனைவரதும் பெயர், அடையாள அட்டை இலக்கம், அவர்கள் செல்லும் இடம் என்பன பொலிஸாரால் பதிவுசெய்யப்பட்ட பின்னர் படகில் ஏறிப் பயணிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இதனால் காலதாமதம் ஏற்பட்டதால் படகு குறித்த நேரத்துக்கு துறைமுகத்தை விட்டு புறப்பட முடியவில்லை. வழமையை விடவும் தாமதமாகவே குறிகாட்டுவானை படகு வந்தடைந்தது. எனினும் அதற்குள் பஸ்கள் புறப்பட்டு விட்டதால் பயணிகள் பெரும் சிரமத்துக்கு ஆளாகினர்.

''இந்தப் பதிவு நடவடிக்கைகள் வெளியிடங்களில் இருந்து நெடுந்தீவுக்குள் நுழைவோருக்கும் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது. தென்னிலங்கையில் இருந்தும் வேறு மாவட்டங்களில் இருந்தும் வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யவே இந்த நடவடிக்கை கடந்த நான்கு நாள்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எனினும் நெடுந்தீவில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வோர் இவ்வாறு பொலிஸாரிடம் பதிவு செய்யத் தேவையில்லை.''

-என்று ஊர்காவற்றுறைத்துறை பொலிஸார் நெடுந்தீவு பொலிஸ் பதிவு நடவடிக்கை பற்றி உதயனுக்குத் தெரிவித்தார்.

எனினும் நேற்று நெடுந்தீவில் இருந்து புறப்பட்டவர்கள் பொலிஸாரிடம் பதிவு செய்த பின்னரே பயணப்பட முடிந்தது. முன்னரும் இதுபோன்ற பதிவு நடவடிக்கைகள் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டு பின்னர் மூன்று வருடங்களுக்கு முன்னர் கைவிடப்பட்டிருந்தது. இதே பதிவு நடைமுறையை மீண்டும் பொலிஸார் மேற்கொள்வதால் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுவதாகவும் எனவே இதனைக் கைவிட வேண்டும் எனவும் மக்கள் கோரியுள்ளனர். (ந-4-7)

# குறைவு

யாழ்ப்பாணம்,ஜன.9

2010 ஆம் ஆண்டை விடவும் 2011 இல் மது வரிக்குற்றங்கள் குறைவடைந்துள்ளன. எனினும் புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய சுகாதார சபைச் சட்டத்தின் கீழான குற்றங்கள் அதிகரித்துள்ளன.

- இவ்வாறு யாழ். மதுவரிப் பரிசோதகர் என். கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2010 ஆம் ஆண்டு சட்ட விரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 33 பேர் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் கடந்த வருடம் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதாக மூன்று பேர் மாத்திரமே இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, புகையிலை மற்றும் போதைப்பொருள் உற்பத்திகளை 21 வயதுக்கு உட்பட்டோருக்கு விற்பனை செய்த 10 பேர் இனங்காணப்பட்டு அவர்களிடம் இருந்து 19 லட்சத்து 27 ஆயிரத்து 550 ரூபா அபராதமாக அறவிடப்பட்டது. ஆனால் கடந்த வருடம் இந்த எண்ணிக்கை அதிகரித்து குறித்த குற்றத்துக்காக 89 பேர் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு நீதிமன்றில் 11 லட்சத்து 45 ஆயிரத்து 650 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. (ந)

# மேலதிக பணி செய்யமாட்டோம்

## -புற்றுநோய்ப் பிரிவுத் தாதியர்கள்-

யாழ்ப்பாணம் , ஜன.9

யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் பணியாற்றிவந்த தாதியர்கள் தாம் மேலதிகமாக மேற்கொண்டு வந்த மருந்துக் கலவையாளர் பணியிலிருந்து விலகப்போவதாக அறிவித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் தாதியர் மற்றும் மருந்துக் கலவையாளர் பற்றாக்குறை தொடர்ந்தும் காணப்படுகின்றது. எனினும் சேவை நோக்கோடு இங்கு பணியாற்றும் தாதியர்களே தமது பணிக்கு மேலதிகமாக மருந்துக் கலவையாளர் பணியையும் மேற்கொண்டு வந்தனர். இந்த நிலையில் போதனா வைத்தியசாலைக்கு புதிதாக உள்வாங்கப்பட்ட தாதியர்களில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கு நான்கு பேரை நியமிக்கும் படி கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் புதிதாக புற்றுநோய் சிகிச்சை பிரிவுக்கு தாதியர்கள் நியமிக்கப்படாமல் அங்கு ஏற்கனவே கடமையாற்றிய இருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டு விட்டது.

இதனாலேயே தாதியருக்கான வேலைப் பளுவும் நெருக்கடியும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் புதிதாக தாதியர்கள் நியமிக்கப்படாவிட்டால் இருவரையும் தமது பணிக்கு மேலதிகமாக மேற்கொண்டு வந்த மருந்துக் கலவையாளர் பணியில் இருந்து விலகி, தமது பகிஷ்கரிப்பை வெளிப்படுத்தப் போவதாக புற்றுநோய்ப் பிரிவுத் தாதியர்கள் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா கருத்துத் தெரிவிக்கும் போது,

இந்த முறை போதனா வைத்தியசாலைக்கு முன்னரைக் காட்டிலும் அதிகளவான தாதியர்கள் - 92 பேர் - நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை ஏற்கனவே நியமிக்கப்பட்ட 25 தாதியர்களில் 12 பேர் இடமாற்றம் பெற்று வேறு வைத்தியசாலைக்கு சென்றுவிட்டனர். இம்முறை நியமிக்கப்பட்டவர்களை ஒவ்வொரு பிரிவுக்கும் தேவையான அடிப்படையில் ஒதுக்கி உள்ளோம். இதேவேளை புதிதாக மருந்துக் கலவையாளர்களை சுகாதார அமைச்சு போதனா வைத்தியசாலைக்கு இன்னும் நியமிக்கவில்லை. எனவே மருந்துக் கலவையாளருக்கு உள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்வது பற்றி ஆராய்ந்து வருகின்றோம் -என்றார். (ந-4-14)

# 'பிடியுங்கள் அவர்களை'

## உத்தரவிட்டார் கோத்தபாய

கொழும்பு, ஜன.9

பெறுமதிமிக்க காணி நிலங்கள், வீடுகள் மற்றும் சொத்துக்கள் என்பவற்றை அபகரித்துக்கொள்வதற்காக போலி உறுதிகள், ஆவணங்கள் என்பவற்றைத் தயாரித்து மோசடி செய்யும் குழுக்களை ஒடுக்கி விடும் நடவடிக்கையொன்றை முன்னெடுப்பதற்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

நாட்டில் இத்தகைய விசேட நடவடிக்கையொன்று நடைமுறைப் படுத்தப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

கடந்த சில மாத காலத்துக்குள் இவ்விதம் போலி உறுதிகள் மூலம் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள், அவற்றின் உண்மையான உரிமையாளர்களிடமிருந்து அபகரிக்கப்பட்டுள்ளன. இது குறித்து பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்துள்ள தகவல்களையடுத்தே இந்த நடவடிக்கைக்கு கோத்தபாய உத்தரவிட்டுள்ளார்.

பாதாள உலகக் குழுக்களை ஒழித்துவிடும் நடவடிக்கைக்கு சமமானதாக இந்தப் புதிய நடவடிக்கை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

பாதாள உலகத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் போலி ஆவணங்களைத் தயாரிப்போர் என்போரால் இந்த மோசடிச் செயற்பாடு நிகழ்த்தப்படுவதாக அடிப்படை விசாரணைகள் மூலம் வெளிப்பட்டுள்ளது. கொடைவள்ளல் ஒருவரால் அண்மையில் கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட கொழும்பு கறுவாத் தோட்டத்தில் அமைந்துள்ள பல கோடி ரூபா பெறுமதியான காணி மற்றும் வீடு என்பன இவ்விதம் போலியாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. இது போன்ற ஏராளமான முறைப்பாடுகள் பாதுகாப்புப் பிரிவுக்குக் கிடைத்துள்ளன.

போலி உறுதிகள் மூலம் பிறரது காணிகளை அபகரித்து அவற்றை வங்கிகளில் அடமானம் வைத்து கோடிக் கணக்கில் கடன்களும் பெறப்பட்டுள்ளன. இதனால் முன்னணியில் உள்ள வங்களில் பலவும் பாரதூரமான சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளன.

காணிப்பதிவு அலுவலகத்தின் சில உயரதிகாரிகள் மற்றும் சட்டத்தரணிகள் தரப்பொன்றும் இந்த மோசடிச் செயற்பாட்டில் இணைந்துள்ளதாகவும் பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவுகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் அனைவரையும் கூண்டோடு பிடிக்க பாதுகாப்புச் செயலர் உத்தரவிட்டுள்ளார். (ந-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நிறை குறைவு

முல்லைத்தீவு, ஜன. 9
ஒட்டுசுட்டானில் 349 கிராம் நிறையுடைய பாண் 50 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

இது தொடர்பாக மக்கள் புகார் தெரிவித்ததையடுத்துப் பாணின் எடை சரிபார்க்கப்பட்டது. அப்போது இந்த விடயம் அம்பலமாகியது.

உரிய அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-500)

# மன்னார் கைத்தொழில் பேட்டையில் ஆடைத் தொழிற்சாலைக்கு அடிக்கல்

மன்னார், ஜன. 9
மன்னார் கைத்தொழில் பேட்டையில் பிரபல ஆடை உற்பத்தி நிறுவனமான 'டைமெக்ஸ்' மற்றும் 'பெர்கஸ்' நிறுவனம் ஆடைத்தொழிற்சாலையை ஆரம்பிக்கவுள்ளது. அந்த ஆடைத்தொழிற்சாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அமைச்சர் றிஸாட் பதியுதீன் உரையாற்றினார்.

அவர் அங்கு கூறியதாவது:-



வடமாகாணத்தை பொறுத்தவரையில் எமது மாவட்டம் பெரும் இழப்புக்களைச் சந்தித்த மாவட்டமாகும். போர், இயற்கை அழிவு, பொருளாதார ரீதியான பின்னடைவுகள் எமது பின்னடைவுக்கு காரணங்களாகும். அதனை மேம்படுத்தி மக்களது வாழ்வை வளப்படுத்தவேண்டிய தேவை எமக்கிருக்கின்றது. நான் கைத்தொழில் அமைச்சுப் பதவியைப் பொறுப்பெடுத்தபோது எமக்கு வழங்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி இலக்கு 2015ஆம் ஆண்டுவரை 4 பில்லியனாக இருக்கவேண்டும். ஆனால் நாம் 2011ஆம் ஆண்டு முடிவில் 3.2 பில்லியனை ஆடைத்துறை மூலம் எட்டியுள்ளோம்.

ஐரோப்பிய ஒன்றியம் எமக்கு ஜீ.எஸ்.பி.வரிச்சலுகையினை தற்காலிகமாக இடைநிறுத்திய காலத்தில் 47 சதவீதமான வளர்ச்சியை இத்துறையில் ஏற்படுத்தினோம். உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு சர்வதேச சந்தையில் முதல்தர உற்பத்தியாக மாறியுள்ளது.

சுமார் 24 ஏக்கர் நிலப்பரப்பையுடைய மன்னார் கைத்தொழில் பேட்டை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள முதலாவது தொழிற்சாலையாகும். இதுபோன்று இன்னும் எத்தனையோ தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன. - என்றார்.

இந்நிறுவனத்தின தலைவர் அஷ்ரப் சத்தார் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் தொழிலதிபர் எஸ்.கே.பி.அலாவுதீன் உட்பட பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்டனர்.

(ஒ-319)

## அலுமாரிகள் கையளிப்பு

துணுக்காய், ஜன.9
துணுக்காயில் 11 கிராமிய அபிவிருத்திச் சங்கங்களுக்கு அலுமாரிகள் வழங்கப்பட்டுள்ளன.

யூ.என்.டி.பியினால் இவை வழங்கப்பட்டுள்ளன. இதே வேளை உணவுத்திட்டத்தின் கீழான வேலைகளின் கீழ் துணுக்காயின் 13 கிராமங்களில் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதே போன்று மாந்தை கிழக்கின் ஒன்பது கிராமங்களில் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(க-410)

## பற்றாக்குறை

அக்கராயன், ஜன.9
துணுக்காய் கல்வி வலயத்தில் 7 ஆயிரத்து 498 மாணவர்களுக்கு 598 ஆசிரியர்கள் கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது மொத்தமாக 60 பாடசாலைகள் துணுக்காய்க் கல்வி வலயத்தில் இயங்கி வருகின்றன. இவை அநேகமாகக் கிராமப் புறங்களிலேயே அமைந்துள்ளன.

இதனால் முக்கிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் பற்றாக்குறை இங்கு நிலவுகின்றது.

(க-415)

## கசிப்புக்கு முற்றுப்புள்ளி

கிளிநொச்சி, ஜன.9
கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடு நகர் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உடனடியாக கசிப்பு உற்பத்தி, விற்பனை என்பவற்றை நிறுத்துமாறு கிராம பொது அமைப்புக்களும், கிராம சேவையாளரும் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான அறிவித்தல் சுவரொட்டிகள் கிராமத்தின் முக்கிய இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன. அதில் கசிப்பு உற்பத்தி, விற்பனை நடவடிக்கைகளை நிறுத்தத் தவறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக இப்பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதுடன் இதற்கான நீதிமன்ற தண்டப் பணத்தைச் செலுத்திய பின்னர் மீண்டும் அச்செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

(405)

## நகர்ப்புற பாடசாலைகளை நோக்கிய பயணம்

வவுனியா, ஜன.9
வவுனியா இராசேந்திரம் குளம் அ.த.க. பாடசாலை போதிய அடிப்படை வசதிகள் இன்றி இயங்குவதனால் இப்பாடசாலையில் கல்வி கற்று வந்த மாணவர்கள் பலர் நகர்ப்புற பாடசாலைகளை நோக்கிச் செல்வதைக் காணமுடிகின்றது.

வவுனியா இராசேந்திரம் குளம் அ.த.க பாடசாலையில் போதிய ஆளணி மற்றும் பௌதீக வளங்கள் இல்லாததால் இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

**வசதி படைத்த குடும்பங்கள் தமது பிள்ளைகளை வவுனியா நகரப் பாடசாலைகளில் இணைத்து வருகின்றனர்.**

இந் நிலையில் ஓரளவு வசதி, படைத்த குடும்பங்கள் தமது பிள்ளைகளை வவுனியா நகரப் பாடசாலைகளில் இணைத்து வருகின்றனர்.

இதன் காரணமாக மாணவர்களின் எண்ணிக்கை இப்பாடசாலையில் குறைவடைந்து காணப்படுவதுடன் பின் தங்கிய வறிய மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டு வருகின்றது. (க-6)

## பாடசாலைக் காணியை இராணுவத்தினர் ஒப்படைப்பு

கிளிநொச்சி, ஜன.9
கிளிநொச்சியில் பாடசாலையொன்றுக்குரிய காணியின் ஒரு பகுதியை இராணுவத்தினர் பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

கிளிநொச்சி பாரதிபுரம் ஆரம்ப வித்தியாலயத்துக்குரிய காணியின் ஒரு பகுதியே இவ்வாறு நேற்று முன்தினம் 7 ஆம் திகதி இராணுவத்தினரால் பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகும்.

கிளிநொச்சி, பாரதிபுரம் மகா வித்தியாலயம், இந்த ஆண்டு ஆயிரம் பாடசாலைகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டு அதன் ஆரம்பப் பிரிவு தனியாக இயங்கவுள்ளது. இதற்கான காணியைப் பெற்றுக் கொள்வதற்கு பாடசாலை அதிபர் மற்றும் பிரதேச நலன்விரும்பிகள் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்.

**இராணுவத்தினர் தமது பயன்பாட்டில் இருந்த காணியின் ஒரு பகுதியை அவர்கள் கையளித்தனர்.**

இந்த நிலையில் இராணுவத்தி னரின் பயன்பாட்டில் இருந்த காணியின் ஒரு பகுதியை அவர்கள் நேற்று முன்தினம் பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

இதனையடுத்து நேற்று இக் காணியை இப்பிரதேச மக்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இச்சிரமதான நிகழ்வில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 150 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

(க-6)

## விபத்துக்கள்

கிளிநொச்சி, ஜன.9
கிளிநொச்சி ஏ-9 வீதியில் மத்திய ஆரம்ப வித்தியாலயத்துக்கு முன்னால் அடிக்கடி வீதி விபத்துக்கள் இடம் பெறுகின்றன. இதில் பாடசாலை மாணவர்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

கடந்த 3 ஆம் திகதி காலை தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவியைத் துவிச்சக்கர வண்டியில் அவரது தாயார் ஏற்றி வந்தபோது, மோட்டார் சைக்கிளுடன் மோதி இவர்கள் விபத்துக்குள்ளாகியுள்ளனர். தாயும், மகளும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

இந்தப் பகுதியில் மஞ்சள் கோடு இல்லாமையும், இடையிடையே வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபடாமையும் இந்த விபத்துக்கள் அதிகம் ஏற்படக் காரணமெனப் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

(க-405)

## உவராகும் கிராமம்

அக்கராயன், ஜன.9
பூநகரி முக்கொம்பன் கிராமம் உவராகும் ஆபத்தில் உள்ளது.

1972 ஆம் ஆண்டு இந்தக் கிராமத்தில் மக்கள் குடியமர்ந்தனர். பூநகரியின் பல கிராமங்கள் உவரடைந்து வரும் நிலையில் முக்கொம்பன் கிராமமும் உவராகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

இந்தக் கிராமத்தின் வட பகுதியில் காடுகள் இருப்பதன் காரணமாக உவராகும் தன்மை குறைந்து காணப்பட்டாலும் இந்தக் கிராமத்தின் வடபகுதிக்காடு மக்களின் விறகுத் தேவைக்காக அழிக்கப்படும் நிலையில் முக்கொம்பன் கிராமம் உவராகும் அபாயம் தவிர்க்க முடியாததாகும்.

450 குடும்பங்கள் வாழும் இந்தக் கிராமத்தின் வட பகுதிக் காட்டைப் பாதுகாக்க வேண்டும் என்பது இங்குள்ள அனைவரதும் விருப்பமாகும்.

(க-410)

## ஆரம்ப சுகாதார நிலையம்

கிளிநொச்சி, ஜன.9
கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தை அமைப்பதற்காக "என்றிப்" திட்டத்தின் கீழ் 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் ஏற்பாட்டில் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும்,, இதற்கான ஒப்பந்தத்தில் கல்மடு நகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஒப்பமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-405)

## மக்கள் விழிப்புணர்வு

அக்கராயன், ஜன.9
மீள் எழுச்சித் திட்டத்தில் மக்களின் பங்களிப்பு முக்கியமானது என மீள் எழுச்சித் திட்டத்தின் வடமாகாகண மேலதிக திட்டப் பணிப்பாளர் எ.வி. வினோதராஜா தெரிவித்தார்.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் மேற்கு பொது மண்டப திறப்பு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குக் கடந்த காலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது . ஆனால், இன்றைய நிலை அப்படியல்ல. இன்று பல தொழில்களை உருவாக்க முடியும். எல்லாமே மக்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. மீள் எழுச்சித் திட்டத்தைப் பொறுத்தவரையில் கிராம மக்கள் [illegible] வேண்டும்.

(க-410)

## பெறுபேறுகளில் வீழ்ச்சி

முல்லைத்தீவு, ஜன.9
க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகளில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் வீழ்ச்சி கண்டுள்ளது.

இதனையிட்டு மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் விசனம் அடைந்துள்ளனர்.

பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கிய இந்தப் பாடசாலை உயர்தரப் பரீட்சையில் வீழ்ச்சி கண்டுள்ளமை இங்குள்ள கல்விச் சமூகத்தினரிடையே கவலையைத் தோற்றுவித்துள்ளது.

இவை தொடர்பாகப் பாடசாலை அதிபர் ந.கருணாகரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்தப் பாடசாலையின் மாணவர்கள் முகாம்களிலிருந்து இறுதியாக வந்தவர்கள்; இவர்களால் பரீட்சைக்குத் தம்மைத் தயார்ப்படுத்த முடியவில்லை. மேலும் அவர்களின் குடும்பச் சுமை, கவலை என்பனவும் பெறுபேறுகளின் வீழ்ச்சிக்கு வித்திட்டுள்ளது.

எனினும் எமது மாணவர்கள் சளைத்தவர்களல்ல. இனிவரும் பரீட்சைகளில் இவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வார்கள் என்று தெரிவித்தார்.

(க - 500)

## 18 முன்பள்ளி மாணவர்கள் தரம் 1 இல் இணைவு



துணுக்காய், ஜன.9
துணுக்காய் தேறாங்கண்டல் கிராமத்தில் முன்பள்ளியில் பயின்ற 18 மாணவர்கள் தரம் 1 வகுப்பில் இணைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள தேறாங்கண்டல் கிராமத்தில் அமைந்துள்ள கலைமகள் முன்பள்ளியில் ஆரம்பக் கல்வி பயின்ற 18 மாணவர்களைத் தரம் 01 இல் இணைக்கும் நிகழ்வு, கடந்த 5 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தேறாங்கண்டல் கலைமகள் முன்பள்ளியில் சிறப்பாக இடம் பெற்றுள்ளது. முன்பள்ளி ஆசிரியை சு.விஜயலலிதா தலைமையில் மேற்படி நிகழ்வு இடம் பெற்றது.

நிகழ்வுக்கு முன்னதாக மாணவர்கள் முன்பள்ளியில் வைத்துக் கௌரவிக்கப்பட்டனர். பரிசில்களும் வழங்கப்பட்டன. வரவேற்புரையை ஆசிரியை ம.விமலாதேவி நிகழ்த்தினார். ஆசியுரையை சு.புஸ்பராணி நிகழ்த்தினார். பின்னர் மாணவர்கள் தேறாங்கண்டல் அ.த.க பாடசாலைக்கு வீதி வழியாக ஊர்வலமாகச் சென்றனர். பாடசாலை அதிபர் திருமதி ஜெ.இந்திராணி மாணவர்களை வரவேற்று தரம் 01 வகுப்புக்கு அழைத்துச் சென்று அமரவைத்துப் பாடங்களைக் கற்பித்தார்.

இந்த நிகழ்வில் மாணவர்களின் பெற்றோர்கள் உட்பட முன்பள்ளி ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினர், கிராம மக்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(க - 415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலத்தில் மீள்குடியமர அனுமதியை வழங்குங்கள்

## பளைப் பிரதேச மக்கள் கோரிக்கை

பளை, ஜன.9

பளைப் பிரதேசத்தில் மீள்குடியமர்வு இடம் பெறும் போது கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அனைத்துக் குடியிருப்பாளர்களையும் சம காலத்தில் மீள்குடியமர அனுமதிக்குமாறு கோரப்படவுள்ளது.

பளைப் பிரதேசத்தில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் இரண்டுக்கு மேற்பட்ட கிராமங்கள் உள்ளன.

மீள்குடியமர்வுக்கு ஒரு கிராம மக்கள் மட்டும் அனுமதிக்கப்படுவதால் அந்தப் பிரிவில் உள்ள ஏனைய கிராம மக்கள் மீள்குடியமர்த்தப்படும் வேளையில் உதவிகள் ஏதும் பெற முடியாத நிலைய ஏற்படலாம்.

வெளிநாட்டு நிறுவனங்கள் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்படும் வேளையில் மீள்குடியமர்ந்த ஒரு பகுதி மக்களே உதவிகளைப் பெற முடியும்.

காலந் தாழ்த்தி மீள் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு உதவிகள் கிடைக்காத நிலையும் உருவாகலாம்.

பளைப் பிரதேசத்தில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படும் வேளையில் ஒரு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களை ஒட்டு மொத்தமாக ஒரே நாளில் மீள்குடியமர்த்துமாறு இடம்பெயர்ந்துள்ள மக்கள் கோரியுள்ளனர்.

பிரதேசத்தைச் சேர்ந்த கிளாலி, அரசர்கேணி ஆகிய பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட வேளையில் அனுமதிக்கப்படாத பகுதிகளுக்கு மக்கள் செல்ல முடியாததால் இந்த குடியிருப்பாளர்களுக்கு எந்தவொரு உதவியும் கிடைக்க முடியாத நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவித்தனர்.

பளைப் பிரதேசத்தில் மீள்குடியமர அனுமதிக்கப்படாத முகமாலை, வேம்பொடுகேணி, இத்தாவில் ஆகிய கிராம அலுவலர் பகுதிகளில் வெடிபொருள்கள் அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அந்தந்த கிராம அலுவலர் பிரிவு ரீதியாக அல்லது மூன்று கிராம அலுவலர் பிரிவு மக்களையும் ஒரே நேரத்தில் மீள்குடியமர்த்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரியுள்ளனர். (ம-207)

## புதிய மின்இணைப்பு வழங்க நடவடிக்கை

தென்மராட்சி, ஜன.9

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்தில் புதிய மின் இணைப்பு வழங்குவதற்கான படிவங்கள் நாளை தொடக்கம் விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏற்கனவே படிவங்கள் சமர்ப்பித்தவர்களிடம் பணம் அறவிடலும் நாளை ஆரம்பமாகவுள்ளது. மின் இணைப்பு வழங்குவதற்கான கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தில் கடந்த டிசெம்பர் மாதம் தொடக்கம் மின்னிணைப்பு படிவங்கள் விநியோகமும் அதற்குரிய பணம் அறவிடுவதும் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-207)



சிறுவர் பூங்கா முன்பள்ளியில் அண்மையில் பெண்களுக்கான செயல மர்வு இடம்பெற்றது. சங்கீதத் துறை கல்வியியலாளர் திருமதி வி.நடேந்திரா செயலமர்வை நடத்துகிறார். அருகில் பணிப்பாளர் வா.தனபாலனும் உள்ளார்.

## குளிரூட்டப்பட்ட மாட்டிறைச்சி அழிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ். பொது சுகாதாரப் பரிசோதகர் குழுவினரின் திடீர் பாய்ச்சலில் சிக்கியது மாட்டிறைச்சி. போயா தினமான நேற்று ஞாயிற்றுக் கிழமை சின்னக் கடை மரக்கறி விற்பனைப் பகுதியில் குளிரூட்டப்பட்ட நிலையில் 20 கிலோ மாட்டிறைச்சி விற்பனை செய்யப்பட்டது.

அவ்விடத்துக்குச் சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினர் விற்பனை செய்யப்பட்ட இறைச்சியைக் கைப்பற்றி அழித்ததுடன் இறைச்சி விற்பனை செய்தோரை எச்சரிக்கை செய்தும் விடுவித்தனர். (ம-23)

# இ.போ.ச.சேவையில் தளர்வு நிலைமை

### மக்கள் அசௌகரியம்

வலி.வடக்கு,ஜன.9

காங்கேசன் துறை வீதியில் காலை 7 மணி தொடக்கம் முற்பகல் 10 மணிவரை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்கள் சேவையில் ஈடுபடாமையால் பொது மக்கள் பெரும் சிரமங்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

அதிகாலையில் இந்தப் பாதையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் சேவையில் ஈடுபட்டாலும் கூட காலையில் இந்தச் சேவை நிறுத்தப்பட்டு விடுகின்றது.

காலையில் பாடசாலை மாணவர்களின் சேவை மட்டும் நடைபெறுகின்றது. அலுவலகங்கள், வைத்தியசாலை மற்றும் தனிப்பட்ட அலுவலர்களுக்கான சேவை இடம்பெறுவதில்லை. இதனால் அவர்கள் சிரமம் அடைவதாகக் கூறப்படுகிறது.

இந்த நேரத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் மினிபஸ்களில்அளவுக்குஅதிகமான பயணிகளை ஏற்றி துன்புறுத்தும் நிலைமையும் தொடர் கதையாகவே காணப்படுகின்றது. இதனால் குறிப்பிட்ட இடங்களில் பயணிகள் இறங்க முடியாதநிலைமை ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

தனியார் பஸ்களில் , நொந்து, நூலாகி நொம்பலப்பட்டு மக்கள் பயணம் தொடர்கிறது...

இவ்வாறான நெருக்கடிகளுக்கு மத்தியில் பயணிக்கும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மக்கள் பிரச்சினைக்குத் தீர்வு தருவது யார் என்று பாதிக்கப்பட்டோர் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-86)

# உரிமையாளருக்கு தெரியாமலே விற்கப்பட்டது அவரது காணி

யாழ்ப்பாணம் , ஜன.9

காணி ஒன்றை, அதன் உரிமையாளருக்குத் தெரியாது, இன்னொருவர், மூன்றாவது நபருக்கு விற்று மோசடி செய்தமை கண்டறியப்பட்டதனால்,அவருக்கு எதிராக மூன்றாவது நபர் தாக்கல் செய்திருந்த நம்பிக்கை மோசடி வழக்கு அடுத்த மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அந்த வழக்கு யாழ். நீதிமன்ற நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மோசடி விற்பனை குரு நகரில் 6 மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த அந்தப் பகுதியில் பின்னர் காணிகளைச் சென்று பார்வையிட, படையினர் அனுமதித்திருந்த நிலையிலேயே இது இடம்பெற்றுள்ளது.

உரிமையாளருக்குத் தெரியாது இன்னொருவர் மூன்றாவது நபரான பெண் ஒருவருக்கு விற்றுள்ளார். தற்போது அங்கு மீள்குடி யேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் அந்தக் காணியை வாங்கிய பெண் அதனைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இந்த நிலையில் அங்கு சென்ற காணி உரிமையாளர் அது பற்றி தட்டிக் கேட்டதனாலேயே உண்மை வெளிப்பட்டது. உடனடியாகவே அந்தப் பெண் யாழ்.பொலிஸில் நம்பிக்கை மோசடி வழக்குப் பதிவு செய்திருந்தார். இந்த வழக்கு நீதிமன்ற விசாரணையில் இருந்து வெள்ளிக்கிழமை விசாரணைக்கென எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரிகள் சார்பில் மோசடியில் ஈடுபட்ட உறவினர்கள் இருவருடன் அதற்கு உடந்தையாக இருந்து உறுதி எழுதிக் கொடுத்த தரகர் ஒருவரையும் பொலிஸார் மன்றில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் இந்த வழக்கு அடுத்த மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (த-4)

# ஆபத்தைத் தரும் வகையில் இடிகுண்டு நீர்த் தேக்கம்

200 வருட பழைமை வாய்ந்த கட்டுடை இடி குண்டு அபிவிருத்தி இன்றி உள்ளது

யாழ்ப்பாணம், ஜன.9

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கட்டுடை இடி குண்டு நீர்த்தேக்கத் திட்டம் ஆபத்தான நீர் நிலையாக மாறி விட்டது.

200 வருட பழைமை வாய்ந்த கட்டுடை இடி குண்டு அபிவிருத்தியின்றி உள்ளது என்று மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளன தலைவர் சி.பொ.வ. மா.க. முதலியார் கவலை தெரிவித்துள்ளார்.

வடக்கின் வசந்தத்தின் கீழ் பல அபிவிருத்திகள், முன்மொழிகள் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

கட்டுடை இடிகுண்டு நீர்த்தேக்கத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கி அபிவிருத்தி செய்யுமாறு முன்னாள் அரச அதிபர் சி.பத்மநாதன் காலத்தில் இருந்து கோருகின்றோம்.

மானிப்பாய் பிரதேச சபை இந்த விடயத்தைப் பலமுறை முன்னகர்த்த முயன்றபோதும் நிதி கிடைக்கவில்லை.

தற்போது மிக ஆபத்தான நீர் நிலையாக இது மாறிவிட்டது. இதனுடன் சம்பந்தப்பட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் (வடக்கு), தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் யாழ். பிராந்திய நிலையம், பிரதேச சபை மானிப்பாய், பிரதேச செயலகம் சண்டிலிப்பாய், யாழ்.அரச அதிபர், யாழ்.-கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டப் பணிப்பாளர் ஆகியோர் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டில் இடிகுண்டு புத்துயிர்பெற்று அப்பகுதி விவசாயிகளுக்கும், அந்தப் பகுதியூடாகப் பயணிப்போருக்கும் நன்மை கிடைக்கும் என்று மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த டிசம்பர் மாதம் யாழ்.அரச அதிபர் 'யுனிசெவ்' நிதி உதவியுடன் இதனைப் புனரமைத் துத் தருவதாகக் கூறியி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# புதிய இடத்துக்குச் செல்லவுள்ள சேவை

வலி.வடக்கு, ஜன.9

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய அருகில் இயங்கும் ஆயுள்வேத வைத்தியசாலை வெகு விரைவில் புதிய இடத்தில் இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இயங்கிய கூட்டுறவு வைத்திய சாலைக் கட்டடத்தில் ஒரு பகுதியில் இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலை இதுவரை காலமும் வெளி நோயாளர்களின் பிரிவுடன் இயங்கி வந்த போதும் அடுத்து வரும் மாதங்களில் உள்ளக நோயாளர்களை அனுமதிக்கும் விடுதி வசதிகளைக் கொண்ட முறையில் இயங்கவுள்ளது.

இந்த வைத்தியசாலை புதிய இடத்தில் விடுதி வசதிகளுடன் இயங்கச் செய்வதற்கான நடவடிக் கைகளை யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் திணைக் களம் மேற்கொண்டுள்ளது. (ம-86)

## வீதித் தொழிலாளியை மோதியது வாகனம்

தென்மராட்சி,ஜன.9

வீதி அகலிப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளி வேகமாக வந்த வாகனமொன்றினால் மோதி காயப்படுத்திய சம்பவம் வெள்ளிக்கிழமை பளை ஏ-9 வீதியில் இடம் பெற்றது.

பளை மாகா வீதி நிர்மாண நிறுவனத்தில் பணிபுரியும் பீ.தர்மரட்ண (வயது 47) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ம-207)

# குறைவடைந்தன படகுச் சேவைகள்

சுற்றுலாப் பயணிகளின் வருகை சடுதியாகக் குறைவடைந்ததால் படகுச் சேவையும் குறைந்தது

யாழ்ப்பாணம், ஜன.9

பயணிகள் வருகை திடீரெனக் குறைந்ததை அடுத்து குறிகாட்டுவான் துறைக்கும் நயினாதீவு இறங்கு துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த படகுகளின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்து காணப்படுகின்றது. தற்போது தினமும் பத்துப் படகுகளே இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த வாரத்தில் 25 படகுகள் வரை தினமும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

இந்த வாரத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்ததை அடுத்தே படகுகளின் சேவையும் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த டிசெம்பர் மாதத்தில் பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் நயினாதீவுக்கு வருகை தந்திருந்தனர்.

பாடசாலை விடுமுறை மற்றும் சனி, ஞாயிறு பொது விடுமுறைகளைப் பயன்படுத்தி அதிகளவிலான பயணிகள் அங்கு வருகை தந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டு அதிகளவான படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலி, சங்கானை குடியேற்ற மக்கள் பிரச்சினை தீரவில்லை

யாழ்ப்பாணம்,ஜன.9

சகல ஆவணங்களும் தயார் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் முழுமை பெற்ற போதும் அராலி-சங்கானை குடியேற்ற மக்களின் பிரச்சினை தீரவில்லை.

வடக்கு மாகாண முன்னாள் ஆளுநரின் செயலாளர் சி.இரங்கராஜன் கடந்த வருடம் ஜனவரி 18 ஆம் திகதி அராலி ஊரத்தியில் உள்ள 35 குடும்பங்களுக்கும் சங்கானை மத்தியில் உள்ள 35 குடும்பங்களுக்குமான வலி.மேற்கு பிரதேச சபையின்காணிகளைபகிர்ந்து வழங்குமாறும், அதற்கான சட்டரீதியான உறுதிகளை வழங்குமாறும் கோரியிருந்தார்.

ஆனால் இன்னும் பத்து நாள்களில் ஒரு வருடம் பூர்த்தியடையவுள்ள நிலையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் கடந்த 50 வருடங்களாக குடியிருக்கும் 70 குடும்பங்களும் நிரந்தர அபிவிருத்தியின்றி மிகவும் அல்லல்படுவதாக வலி.மேற்கு பிரதேச செயலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். வலிகாமம் மேற்கில்உள்ளூராட்சிசபைபொறுப்பேற்றதும் தமக்கு விமோசனம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தும், சபைத் தலைவரும், அதன் உறுப்பினர்களும் பாராமுகமாக இருப்பதாக அராலி சங்கானைப் பிரதேச சபையின் காணி யில் உள்ளவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ம)

# மீள்குடியமர்வு பகுதிகளில் பாதைகளால் சிக்கல்

யாழ்ப்பாணம், ஜன.9

மீள்குடியமர்வு செய்யப்பட்ட பிரதேசங்களில் பொது மக்களின் போக்குவரத்துக்கு தடையாகவுள்ள பாதைகளைச் சீர்ப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

இது தற்போது மீள்குடியமர்வு செய்யப்பட்ட பிரதேசங்களில் பெரிய பிரச்சினையாகவுள்ளதால் அதனை உடனடியாக சீர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு தெரிவித் தார் வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன்.

வடமாகாண கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்த பௌர்ணமி நாள் கலைவிழா நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தி னராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது தெரிவித்ததாவது:

கல்வியில் ஏற்படும் வளர்ச்சி மட்டும். முழுமையான ஒரு சமுதாயத்தை உருவாக்கிவிடாது. கலை, விளையாட்டு, கல்வி இவை மூன்றையும் துறைசார்ந்தவர்கள் மாணவர்கள் மத்தியில் கற்றுக்கொடுக்க வேண்டும்.

இதற்கு பாடசாலைகள் தோறும் கலை மன்றங்கள் உருவாக்கப்படுவதுடன் கிராமங்கள் ரீதியாகவும் உருவாக்கி அவற்றைக் கல்வித் திணைக்களங்கள் திட்டமிட்டுச் செயற் படுத்தவேண்டும்.

கடந்த காலங்களில் எமது கலைகளைத் தொலைய விட்டாலும் இனிவரும் காலங்களிலாவது அதனை மீள உருவாக்கி அவற்றை மேம்படுத்தவேண்டும் - என்றார். (ம-313)

## 'பறக்கும் மினி பஸ்கள்'

யாழ்ப்பாணம்,ஜன.9

தெல்லிப்பழை, குப்பிளான்-புன்னாலைக்கட்டுவன் போன்ற இடங்களிலிருந்து காங்கேசன்துறை வீதி ஊடாகப் பயணிகளை ஏற்றிவரும் மினி பஸ்களில் மக்களின் நெரிசல் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் தாவடிச் சந்தி, கொக்குவில் சந்திகளுக்கு அப்பால் வயோதிபர்கள், பொருள்களோடு நிற்பவர்களை விடுத்து இளையவர்கள் நின்றால் அவர்களை மட்டும் ஏற்றிக்கொண்டு மினிபஸ்கள் பறக்கின்றன.

காரணம் வயோதிபர்கள் ஏறுவதற்கு சற்று நேரம் எடுக்கும். அதைவிட ஏற்கனவே நெரிபட்டு மூச்சு விடத் திண்டாடிக்கொண்டு இருப்பவர்களோடு அவர்களை ஏற்றினால் நிற்கவோ, பிடிக்கவோ இடமில்லை.

வாகனத்தில் ஏறி நிற்பவர்கள் கூட கால் வைக்க, கைபிடிக்க இடமில்லை என்றால் பொருள்களோடு எப்படி ஆள்களை ஏற்றுவது?

பெரும்பாலான முதியவர்கள் வைத்தியசாலைக்கு, கிளினிக்குகளுக்கு, ஓய்வூதியம் எடுக்க என அத்தியாவசியத் தேவைகளுக்குத்தான் பயணிப்பார்கள். 'அடுத்த மினி பஸ்ஸில் வாங்கோ, அடுத்த மினி பஸ்ஸில் வாங்கோ' என்று எல்லோரும் சொன்னால் அவர்களின் நிலை என்ன...? இவ்வாறான சம்பவத்தில் நேரடியாகச் சம்பந்தப் பட்ட ஒரு முதியவர் மிகுந்த மன வேதனையோடு எம்மிடம் தெரிவித்தார்.

''காலை 9 மணிக்கு வைத்தியசாலைக்குப் போக வேண்டிய நான் மூன்று மினி பஸ்கள் ஏற்றாமல் சென்றதால் அடுத்து 10 மணி இ.போ.ச.பஸ்ஸுக்காகக் காத்திருந்தேன்.

இந்தப் பிரச்சினை இன்று மட்டும் எனக்கு ஏற்பட்டதல்ல. இப்படிப் பல தடவைகள் ஏற்பட்டன. பஸ்ஸுக்குக் காத்திருந்து சென்றதால், குறித்த நேரம் கிளினிக்குக்குச் செல்ல முடியாது போனது'' என்றார்.

அதுமட்டுமின்றி ஒரு முறை கிளிநொச்சியில் பெறும் தனது ஓய்வூதியத்தைக்கூட குறித்த நேரத்தில் எடுக்கத் தவறியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனவே இந்த வயோதிபர்களின் போக்குவரத்துச் சம்பந்தப்பட்ட பிரச்சினையை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுப்பார்களா என்று பாதிக்கப்பட்ட அந்த முதியவர் மேலும் கேட்டுக்கொண்டார். (ம-5)

## குடிதண்ணீர் வழங்கல் விஸ்தரிப்பாகும்

யாழ்ப்பாணம்,ஜன.9

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட குழாய் மூலமான குடிதண்ணீர் அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிட்டதுடன்- விஸ்தரிப்பு குறித்தும் மக்களுடன் கலந்துரையாடினார் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் பா.தபேந்திரகுமார்.

சுன்னாகத்தில் இருந்து கந்தரோடை சங்குவேலி-கட்டுடை ஊடாக நவாலி கொத்துக்கட்டி வரை குடிதண்ணீர் சேவை காலை மாலை என இரு நேரம் முழுமையாக வழங்கப்படுகிறது.

சுன்னாகத்தில் இருந்து வரும் குழாய் மூலமான குடிதண்ணீர் நவாலி மக்களுக்கு போதுமானதா என்று நவாலி வடக்கு மக்களுடன் யாழ்.தேசிய நீர்வழங்கல் சபையின் எந்திரி பா.தபேந்திரகுமார் கலந்துரையாடினார்.

இதேவேளை, நவாலி சி.பி.எம்.வீதியூடாக வரும் குடிதண்ணீரை மேலும் வழங்க இன்னுமொரு பொதுத் தொட்டியை அமைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன்- வலி.மேற்கு பிரதேச சபை வருமான மேற்பார்வை அதிகாரி ரி.சிறிகாந்தனின் கோரிக்கைக்கு ஏற்ப விரைவில் சங்கரத்தை ஆலய முகப்பில் இருந்து குழாய்மூலம் கலட்டி பகுதிக்கு குடிதண்ணீர் கொண்டு செல்லவும் எந்திரி பா.தபேந்திரகுமார் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை-கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் சங்கரத்தை-கலட்டி பகுதிக்கான இடத்தைப் பார்வையிட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## செயற்பட ஆரம்பித்த 'எக்ஸ்ரே' இயந்திரம்

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்.போதனா வைத்தியசாலைக்குப் புதிதாகக் கொண்டுவரப்பட்ட 'எக்ஸ்ரே' இயந்திரம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் செயற்பட ஆரம்பித்துள்ளது.

இந்த எக்ஸ்ரே இயந்திரம் கடந்த நான்கு நாள்களாகப் பொருத்தப்பட்டு சீர் செய்யப்பட்டு வந்தது. இந்தப் பணிகள் நிறைவு பெற்றதும் நேற்று செயற்பட ஆரம்பமாகியது இடம்பெற்றது.

தற்போது வைத்தியசாலையில் மொத்தமாக மூன்று 'எக்ஸ்ரே' படப்பிடிப்பு இயந்திரங்கள் செயற்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் ஏற்பட்ட தாமதம், சிரமங்கள் முற்று முழுதாக தவிர்க்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது வைத்தியசாலையில் உள்ள மூன்று 'எக்ஸ்ரே' இயந்திரம் மூலமும் 'எக்ஸ்ரே' படப்பிடிப்புக்கள் நேற்று முதல் தாமதம் இன்றி சீராக எடுக்கப்பட்டு வருகின்றன. (ம-17)

## துப்புரவுப் பணிகள்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.கோட்டை கடற்கரை வீதிப் பகுதிகளில் உள்ள பற்றைகள் வெட்டித் துப்புரவாக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. யாழ்.மாநகர வளாகத்துக்குப் பின்புறமாகவுள்ள கடற்கரைப் பக்கமாகவுள்ள பகுதிகளில் அடர்ந்து வ்ளர்ந்திருக்கும் பற்றைகளே இவ்வாறு அழிக்கப்பட்டு வருகின்றன. மாநகர சபையின் தொழிலாளலர்களே இந்தத் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை- முனிஸ்வரன் சுற்றாடல், நூல்நிலையச் சுற்றாடல், சுப்பிரமணியம் பூங்கா சுற்றாடல் போன்ற பகுதிகளும் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (ம-17)

## கடலுணவுகளின் விலைகள் இந்த வாரத்தில் சரிவு

யாழ்ப்பாணம்,ஜன.9

தீவுப்படுதியில் கடலுணவுகளின் விலைகள் இந்த வாரத்தில் மேலும் குறைவடைந்து காணப்படுகின்றன.

இந்தப் பகுதிக் கடலில் பெருமளவிலான கடலுணவுகள் இந்த வாரத்தில் மீனவர்களின் வலையில் சிக்குவதாகவும் கடற்றொழிலாளர் கூறுகின்றனர்.

கடந்த காலங்களைவிட இந்த வாரத்தில் மீன்களின் வருகை சந்தையில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

தீவுப் பகுதியில் சிறிய மீன் வகைகள் கிலோ 150 ரூபாவாகவும் பெரிய அளவிலான மீன்கள் கிலோ 350 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த மீன் விலைச் சரிவை அடுத்து ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மீன் வியாபாரிகளும் இந்தப் பகுதிகளுக்குச் சென்று மீன்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

வியாபாரிகளின் இந்த படையெடுப்பால் அங்கு மீன்களின் விலையில் சற்று தளம்பல் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதேவேளை யாழ். நகரில் கொட்டடி, குருநகர், பாஷையூர் போன்ற மீன் வாடிகளிலும் மீன்களின் விலை சற்றுக் குறைவடைந்து காணப்படுகின்றது. (ம-17)

## 'முழுநிலா முத்து' பௌர்ணமி நாள் கலைவிழா





வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'முழுநிலா முத்து' பௌர்ணமிநாள் கலை விழா நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

மங்கல விளக்கேற்றலுடன் இனிதே ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் எமது கலாசாரத்தை வெளிப்படுத்தும் முகமாக மங்கல இசையினை தாவடி புகழ் இசைக் குழுவினர் வழங்கினர். அதனைத் தொடர்ந்து யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் தமிழ்த்தாய் வாழ்த்து இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வரவேற்பு நடனத்தை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்களும், வரவேற்புரையை வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதகிருஷ்ணனும் நிகழ்த்தினர்.

வடமாகாணத்தைச் சேர்ந்த 12 கல்வி வலயங்களிலும் கடந்த 12 மாதங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளின் தொகுப்பு நிகழ்வாக 13 ஆவது விழாவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் 12 கல்வி வலயங்களையும் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்களம் ஆகிய மூவின மாணவர்களினதும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

கலை நிகழ்வுகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவியின் நடன ஆற்றுகை, முல்லைத்தீவு கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை மாணவர்களின் நாட்டார் பாடல், வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த விசேட தேவையுடைய மாணவர்களின் பட்டாம்பூச்சி நடனம், வவுனியா வடக்கு தரணிக்குளம் பாடசாலை மாணவர்களின் பியானோ இசை, வவுனியா வடக்கு கனிஷ்ட உயர்தர பாடசாலை ஆசிரியரின் குச்சுப்புடி நடனம், தீவக வலயம் காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மாணவர்களின் ஒயிலாட்டம், வடமராட்சி வலய மெதடிஸ்த பெண்கள் பாடசாலை மாணவிகளின் குழுப் பாடல், கிளிநொச்சி வலய புனித தெரேசா பெண்கள் கல்லூரி மாணவிகளின் புத்தாக்க நடனம், வவுனியா மடுக்கந்த மகா வித்தியாலய மாணவர்களின் கண்டிய நடனம், மன்னார் அல் அஸ்ஹர் மகா வித்தியாலய மாணவிகளின் கோலாட்டம், மன்னார் காக்கையன் குளம் முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களின் பாம்பு நடனம், தென்மராட்சி வலய விக்னேஸ்வரா கல்லூரி மாணவியின் தில்லானா போன்றவை இடம் பெற்றன.

இந்த நிகழ்வின் விசேட நிகழ்வாக 'முழு நிலா முத்து' தொகுப்பு நூலும் வெளியிடப்பட்டது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொண்டார்.

வடமாகாணத்தைச் சேர்ந்த கல்வி வலயங்களின் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் இந்த் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்பளம் அமைக்க காணி சுவீகரிப்பு

**தமிழ், முஸ்லிம் ஏழை மீனவக் குடும்பங்களின் வாழ்வோடு விளையாடும் அபிவிருத்தி எமது மக்களையே வெகுவாகப் பாதிக்கும் என்று திருகோணமலை நகரசபை உறுப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளார்**

மூதூர், ஜன.9

திருகோணமலை, கும்புறுப்பிட்டி பகுதியில் பிரபல்யமிக்க நிறுவனமொன்று உப்பளம் அமைப்பதற்கு 1,803 ஹெக்ரேயர் பிரதேசத்தைக் கையகப்படுத்தியுள்ளது. இதனால் இந்தப் பிரதேச இறால், நண்டு, மீன் ஆகிய வற்றைப் பிடிக்கும் ஏழை தமிழ், முஸ்லிம் மீனவக் குடும்பங்கள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டிருப்பதாகத் திருமலை நகரசபை உறுப்பினர் நந்தகுமார் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத் துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

இந்தப் பகுதியில் உப்பளம் அமைக்கப்படுவதால் கோடை காலங்களில் நன்னீராகவும், மழை காலங்களில் உவர்நீராகவும் மாறும். இதனால் நண்டு, இறால் வளர்வதற்கான இயற்கைச் சூழலும், கண்டல் தாவர வர்க்கமும் அழிவடையும். நன்னீர் நிலைகள் உவர் நீராக மாறும் வாய்ப்பும் கடலரிப்பைத் தடுப்பதற்கான இயற்கையான பாதுகாப்புச் சூழலும் அகற்றப்படுவதோடு எதிர்காலத்தில் இவ்விடத்தில் உள்ள நிலப் பகுதி கடலுக்குள் உள்வாங்கப்படும் அபாயமும் தோன்றும்.

முதலீட்டுச் சபையின் எல்லைப் பரப்பு இறக் கண்டியுடன் முடிவடையும் நிலை உள்ளபோது முதலீட்டுச் சபை தனது எல்லைப் பரப்புக்கு அப்பால் உள்ள கும்புறுப்பிட்டி யில் உப்பளம் அமைப்பதற்கு நிறுவனமொன்றுக்கு எவ்வாறு அனுமதியளிக்கமுடியும்? இறால், நண்டு பிடித்து ஜீவனோபாயத்தை நடத்தும் 500 இற்கு மேற்பட்ட தமிழ், முஸ்லிம் ஏழை மீனவ குடும்பங்களின் வாழ்வோடு விளையாடும் அபிவிருத்தி எமது மக்களையே வெகுவாகப் பாதிக்கும். இந்த விடயத்துக்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய கிழக்கு மாகாண சபை நிர்வாகம் கைகட்டி நின்று வேடிக்கை பார்ப்பது கவலைக்குரிய விடயமாகும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# நிபந்தனையை எதிர்த்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

பொலவந்தலாவ,ஜன.9

பொகவந்தலாவை கெம்பயன் மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு, ஆல்டி கீழ்ப்பிரிவு ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 600 தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரு நாள் அடிப்படைச் சம்பளத்துக்காக 18 கிலோ கொழுந்து பறிக்க வேண்டும் என்ற தோட்ட நிருவாகத்தின் நிபந்தனைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தத் தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஒரு நாள் அடிப்படைச் சம்பளத்துக்காக இதுவரை காலமும் 16 கிலோ தேயிலைக் கொழுந்து பறித்து வந்தனர். இதேவேளை, கொழுந்து குறைவாகவுள்ள காலங்களில் 14 கிலோ தொடக்கம் 15 கிலோ தேயிலைக் கொழுந்து பறித்தபோதும் ஒரு நாள் சம்பளம் வழங்கப்பட்டது.

கடந்த மாதம் 8ஆம் திகதி முதல் ஒரு நாள் சம்பளத்துக்காக 18 கிலோ தேயிலைக் கொழுந்து பறிக்கப்பட வேண்டு மென்ற தோட்ட நிருவாகத்தின் தன்னிச்சையான இந்த நிபந்தனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிபந்தனைக் கேற்ப இந்த மாதக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதால் இந்தச் சம்பளத்தினைத் தாம் பெற்றுக் கொள்ளப் போவதில்லை என்று தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (ச)


# கஞ்சா சேனை முற்றுகை

மொனராகலை,ஜன.9

மொனராகலைக்கும் பொதுவிலுக்கும் இடைப்பட்ட யால வனப் பகுதியில் சியம்பலாண்டு அத்திமலைப் பிரதேசத்தைச் சுற்றி வளைத்தகலால் அதிகாரிகள் அரை ஏக்கர் நிரப்பரப்பில் பயிரிடப்பட்ட கஞ்சா சேனை ஒன்றைக் கண்டுபிடித்தனர்.

அதில் காவல் புரிந்த சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்த அதிகாரிகள் மூன்று கட்டுத்துவக்குகளையும் கைப்பற்றியுள்ளனர் என்று சியம்பலாண்டுவ பொலிஸார் தெரிவித்தனர். நீண்டகாலமாக கஞ்சா செய்கையில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் தொடர்பாக மொனராகலை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே அங்கு அதிகாரிகள் சென்றனர்.

இந்தக் கஞ்சாசேனை தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் மொனராகலை மாவட்ட சூழல் பாதுகாப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி சமிந்த உள்ளிட்ட பொலிஸ் குழு விசாரணைகளை நடத்தி வருகின்றது. (ச)



திருகோணமலை மாவட்ட சாரணர் சங்கம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திருகோணமலை நகரில் நடை பவனியை மேற்கொண்டனர்.

# கிழக்கு கிராமங்களில் விசேட அபிவிருத்தி

மூதூர், ஜன.9

கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட கிராமங்களில் அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மேற்கொண்டு வருகின்றார்.

விசேட கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டிற்காக கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களில் இருந்து தலா இரண்டு கிராமங்கள் இந்தத் திட்டதுக்காகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு கிராமமும், வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் நீலாக்கேணி, நல்லூர் கிராமம் ஆகியனவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு கிராமங்களும் பல் வேறு அனர்த்தங்களுக்கு முகம்கொடுக்கின்ற கிராமங் களாகும்.

மீள்குடியேற்றக் கிராமங்களான இக்கிராமங்களில் அடிப்படை வசதிகள் மற்றும் அங்குள்ள மக்களின் வாழ்வாதாரம், கல்வி, தொழில் வாய்ப்பு, போக்குவரத்து, சுகாதார வசதி, மின்சாரம், குடிதண்ணீர், சுயதொழில் உதவி என்பவற்றை ஏற்படுத்துவதற்கான திட்டங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. (ச)

# சந்தேக நபருக்கு கடூழியச் சிறை

பேருவளை, ஜன.9

தோட்டமொன்றினுள் புகுந்து பொருள்கள் திருடிய சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றவாளிக்கு மத்துகம நீதிவான் நிலுபுலி லங்காபுர 4 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார். பெபிலியவத்த பகுதியைச் சேர்ந்த கே.யு. குணவர்தன என்பவருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை நடைபெற்ற சமயங்களில் இவர் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்காததால் நீதிமன்றம் இவருக்கு பிடிவிறாந்து பிறப்பித்தது. இதையடுத்து சந்தேகநபர் தொடங்கொட பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத் தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் இவருக்கு தொடர்பு உள்ளதென விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. (ச)

# அபிவிருத்திக்கு அதிகளவு நிதி

மஸ்கெலிய, ஜன.9

மலையகப் பிரதேசங்களின் அபிவிருத்தி வேலைகளுக்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸால் அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று இ.தொ. காவின் உதவிச் செயலாளர் செல்லையா சிவசுந்தரம் தெரிவித்தார்.

சாமிமலை, கிங்கோரா தோட்டத்தில் நடைபெற்ற நீர் விநியோக வேலைத் திட்ட வைபவத்தில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சியின் பொதுச்செயலாளரும், கால்நடை அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானின் பண்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்தும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் முத்துசிவலிங்கம் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் ஒதுக்கிய நிதியிலிருந்து மலையகத்தில் 90 சதவீதமான வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பல தோட்டங்களில் மக்களின் அடிப்படைத் தேவைகளான மின்சாரவசதி, பாதை அபிவிருத்திகள் போன்றவை செய்துமுடிக்கப்பட்டுள்ளன. இவற்றை யாராலும் மறுக்க முடியாது.

எமது கட்சிக்கும் அதன் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமானுக்கும் எமது மக்களின் எதிர்கால நலன்கருதி திட்டமிட்டு செயற்படவேண்டிய பொறுப்புள்ளது- என்றார். (ச)

# தங்கச் சங்கிலி அபகரிப்பு

பேருவளை,ஜன.9

பேருவளை, புளத்சிங்கள தியகட பகுதியில் உள்ள கடையொன்றினுள் புகுந்த இளைஞர்கள் அங்கிருந்த பெண்ணை கத்திமுனையில் பயமுறுத்தி 80,000 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

வர்த்தக நிலையத்துக்கு வந்துள்ள இருவரும் டொபி, சுவிங்கம் வாங்கிய பின்னர் [illegible] கொண்டுவிட்டு மோட்டார் [illegible] ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக புளத் சிங்கள பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ச)

# வேலைக்கு அமர்த்தப்படும் சிறுவர்கள் பாடசாலைக்கு



கல்முனை,ஜன.9

கல்முனைப் பிரதேசத்தில் பாடசாலை செல்லும் 14-17 வயதிற்கு இடைப்பட்ட 23 சிறுவர்கள் தனியார் கடைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாண்டிருப்பு அகரம் சமூக சேவை அமையத்தின் கல்வி நடவடிக்கைப் பிரிவினர் பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஆய்வொன்றினை மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போதே இந்த விடயம் தெரிய வந்துள்ளதாக பாண்டிருப்பு அகரம் சமூக சேவை அமையத்தின் தலைவர் எஸ்.துஸ்யந்தன் தெரிவித்தார்.

இந்த அமைப்பினர் மேற்கொண்ட ஆய்வின்படி கல்முனைப் பிரதேசத்திலுள்ள நகைக்கடை, தேனீர்க்கடை, பலசரக்குக்கடை, பொதுச் சந்தை என்பவற்றிலேயே சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்து அவர்களது கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்குரிய அனைத்து வேலைத் திட்டங்களையும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் உதவியுடன் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தாழங்குடா சமுர்த்தி வங்கியில் திருட்டு முயற்சி

ஆரையம்பதி,ஜன.9

ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்ட தாழங்குடா சமுர்த்தி வங்கி நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை திருடுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

தாழங்குடா சமுர்த்தி வங்கி இனந்தெரியாத சிலரினால் நேற்றுமுன்தினம் உடைக்கப்பட்டு திருடுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் குறித்த வங்கியிலிருந்து எந்த பொருளும் திருடப்படவில்லை என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சமுர்த்தி வங்கி கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரும் உடைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட விஸ்வ பிரம்மனே நமஹ

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து





தாவடி வடக்கு, காளிகோயிலடியைச் சேர்ந்த
பிரசாத்-நிரோஜா
தம்பதியரின்
செல்வப் புதல்வன்
செல்வன்
சேனுஷாத்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று
(09.01.2012) திங்கட்கிழமை தனது இல்லத்தில்
வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா,
ஜேர்மனியில் வசிக்கும் அத்தை, மாமா, மச்சாள்மார்,
பிரான்ஸில் வசிக்கும் சித்தப்பா மற்றும் உற்றார் , உறவினர்,
நண்பர்கள் அனைவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று தாவடி
ஸ்ரீகாளிகாம்பாள் அருள் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

காளி கோயிலடி,
தாவடி வடக்கு, கொக்குவில்.

செ.இராசரத்தினம்,
(அப்பப்பா) SRP Pump.



After O/L or A/L

அனைவருக்கும் 75% வரை கட்டணக்கழிவு



DMI COMPUTER EDUCATION

veta®
Spoken English

- Diploma in Information Technology
- Diploma in PC Application
- Diploma in Microsoft Office
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip.in Web Designing & Development
- Dip. in Computerized Accounting
- Diplima in Video Production & Multimedia
- AutoCAD Java C++ Tally

புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு III - 09/01/2012 9.30 am அல்லது
பிரிவு IV - 18/01/2012 3.30 pm

முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
| --- | --- | --- | --- |
| No.113, கன்னாதிட்டி வீதி, | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) | No.174, கண்டி வீதி. ப.நோ.கூ.சங்கம் . | KKS வீதி, ஜெட் மோட்டோஸ். கட்டிடம் NSB அருகில். |
| Tel.: 021-222 4403 | Tel. : 021-226 2470 | Tel. :021-227 0243 | Tel. :021-224 1970 |


# செய்தித்துளிகள்

### விபத்தில் இருவர் பலி

வவுனியா ஹொரப்பொத்தான பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் 4 வயதுச் சிறுமி உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார்சைக்கிள் ஒன்றும் டிரக்டர் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவருமே உயிரிழந்துள்ளனர்.

டிரக்டர் சாரதியை பொலிஸார் கைதுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### ஊடகரை பின்தொடர்ந்தவர் கைது

சண்டே லீடர் பத்திரிகையின் ஊடகவியலாளர் பிரட்ரிகா ஜேன்ஸ் பயணித்த காரை பின்தொடர்ந்து சென்றார் எனக் கூறப்படும் ஒருவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

ஊடகவியலாளர் பிரட்ரிகா ஜேன்ஸ் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமையவே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் மாதிவெல பகுதியைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது.


கோழிக்குஞ்சு விநியோகம்
BAHIRA No.1 புறொயிலர் குஞ்சுகள் 12.01.2012 மு.ப. 10 மணிக்கு விநியோகிக்கப் படும்.
தொடர்பு:
செபஸ்ரியாம்பிள்ளை,
அல்வாய் மேற்கு,
திக்கம் சந்தி.
T.P.:
0776090926


### அரசாங்கப் பெறுகை அறிவித்தல்
### சமூகசேவைகள் திணைக்களம்-வடமாகாணம்
### ஒப்பந்த அடிப்படையில் சேவையைப் பெற்றுக்கொள்ளல்-2012

2012 ஆம் ஆண்டுக்கு வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் 01.02.2012 தொடக்கம் 31.01.2013 வரையான காலப்பகுதிக்கு கீழ் வரும் சேவைகளை வழங்குவதற்கான பெறுகைகள் கோரப்படுகின்றன. விருப்பமுள்ள கேள்விதாரர்கள் ஒவ்வொரு பெறுகைப் பத்திரத்திற்கும் ரூபா 200 வீதம் பணம் செலுத்தி 25.01.2012 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி வரை எமது திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி பெறுகைப் பத்திரங்கள் யாவும் 26.01.2012 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும்.

1. நாளாந்த உணவு பொருள்கள் மற்றும் நாளாந்த பாவனைப் பொருள்கள் வழங்கல்
2. சுத்திகரிப்பு சேவை
3. சிகையலங்காரம் மற்றும் முகச்சவரம் செய்தல்
4. சலவை செய்தல்
5. தினசரி பத்திரிகை வழங்கல்
6. தினசரி பால் வழங்கல்

கேள்விப் பத்திரங்களையும், மேலதிக விவரங்களையும் அலுவலக நேரத்தில் எமது திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் நிர்ணயிக்கப்பட்ட விலை வீதங்களுக்கு மேலாக கேட்கப்படும் பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

*ந.இன்பராஜ்,*
*பணிப்பாளர்,*
*சமூகசேவைகள் திணைக்களம்,*
*வடமாகாணம்.*

(C/7513)(5,6,7)

## சமய, சமூகத் தொண்டர் அமரர் பொன்னர் இராசரெத்தினம் அவர்களின்

# 27 ஆம் நாள் நினைவஞ்சலியும்
# நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருநீற்றின் முக்குறியும் நெற்றி தன்னில்
திகழ்கின்ற சந்தனத்தின் கமழும் பொட்டும்
பருநூலின் வெள்ளுடையும் சால்வைத் தோளும்
பாங்குடைய கைக்குடையும் வாய்ச்சுருட்டும்
ஒரு சீற்றம் இல்லாத உவகைப் பேச்சும்
உள்ளத்தை வெளிக்காட்டி உணர்த்தும் பண்பும்
வருவோர்க்கு இன்னமுதம் வழங்கும் கையும்
வரித்தவராய் இரத்தினத்தார் வாழ்ந்தே நின்றார்

காந்தமாய் மற்றவரைக் கவரும் பேச்சும்
கருமமதை சமூகத்திற் காட்டும் பண்பும் கொண்டு
சாந்தமுடன் உறவுகளை அணைத்து நின்று
சான்றோனாய் வாழ்ந்திட்டார் சவாரிக்குஞ்சி
ஏந்தலே உம்முடைய வாழ்வே போதும்
இருப்போர்க்கு இதுவே நற்பாடமாகும்.
மாந்தரிலே மரித்த பின்பும் வாழ்வோர் பேற்றில்
மகத்தான இடமுண்டு மறுப்பாரில்லை

பிரணவனார் கோயில் அறங்காவலராகி
பெரும் பங்கு ஆற்றி நிற்கும் பேறு பெற்றீர்
சரணம் என வருவோர்க்கு பசியைத் தீர்க்க
சளைப்பின்றி அன்னதானத் தொண்டை
அமுதசுரபி என்ற மண்டபத்தில் துணிந்து செய்தீர்
கருணை உள்ளம் கொண்டவரே - சமூகம்
உம்மை கல்லறையாய் நெஞ்சத்தில் காவுமையா.

நாட்டில் உள்ளோர் நலம் பேணும் வாழ்வுக்காக
நம்மவர்கள் மெச்சுகின்ற வண்ணம் நின்று
மாட்டுழவும் வண்டியுமாய் இம்மண்ணில் வாழ்ந்து
மக்களுக்கு உணவளித்து தாகம் தீர்த்தீர்

தேட்டமில்லா வாழ்வுதனை மக்களுக்காய்
தியாகமுடன் அர்ப்பணித்து நின்றீர் ஐயா
கேட்டாலும் கிடைக்காத மரண வாழ்வு
கிடைத்ததுவோ உந்தனுக்கு கிடைக்காப் பேறாய்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

*கடந்த 14.12.2011 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் பொன்னர் இராசரெத்தினம் அவர்களின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.01.2012) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் கலந்து அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைக்கு சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்தி மலர்வளையம் சாத்தியோருக்கும் சகலருக்கும் மனமார்ந்த நன்றிகள்.*

அன்னை மடியில் 06.04.1937

அம்பிகை அடியில் 14.12.2011

*6 ஆம் வட்டாரம், நயினாதீவு.*

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜப்பான் அணு உலைகளுக்கு சமாதி

டோக்கியோ,ஜன.9

ஜப்பான் நாட்டில் உள்ள புகுஷிமா உள்ளிட்ட 5 இற்கும் மேற்பட்ட அணு உலைகளைஅழிப்பதற்குஅந்நாட்டு அரசு முடிவெடுத்துள்ளது.

ஜப்பானில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் நில நடுக்கமும், சுனாமியும் ஏற்பட்டது. இதையடுத்து புகுஷிமா டச்சி அணு உலை வெடித்தது.

இதனால் அங்கிருந்து கதிர்வீச்சு பரவி ஆபத்தை ஏற்படுத்தியதால், உலகம் முழுவதும் அணு உலை மீதான சர்ச்சை எழுந்தது. எனவே ஜப்பான் அணு உலைக் கொள்கையில் மாற்றம் செய்துள்ளது.

சுனாமியால் சேதம் அடைந்த புகுஷிமா அணு உலை 1967ம் ஆண்டு கட்டப்பட்டது. மத்திய ஜப்பானில் உள்ள பிருகா மற்றும் மிகாமா உலைகள் 1970ம் ஆண்டு தொடங்கப்பட்டவை.

இவை தங்கள் உற்பத்தியை தொடங்கி 40 ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே இவற்றின் உற்பத்தியை நிறுத்தி விட்டு அணு உலைகளை அழிக்க ஜப்பான் அரசு முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.

இந்த முடிவை மேற்கொள்ளும் பட்சத்தில் 54க்கும் மேற்பட்ட அணு உலைகளின் உற்பத்தி நிறுத்தப்பட்டு அழிக்கப்படும். எனினும் பல பரிசோதனைகளுக்கு பிறகு மிகவும் சக்தி வாய்ந்த பழமையான அணு உலைகள் சிலவற்றை மீண்டும் இயக்கும் திட்டமும் ஜப்பானிடம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

எனினும் பாதகமான விளைவுகளைத் தடுப்பதற்காக உடனடியாக மூன்று அணு உலைகள் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் சர்ச்சைக்குரிய புகுஷிமா அணு உலையும் ஒன்றெனக் கூறப்படுகின்றது. (ங)

## சிரியாவில் 26 பேர் சிதறினர்



டமாஸ்கஸ்,ஜன.9

சிரியா நாட்டின் தலைநகர் டமாஸ்கஸில் உள்ள பாடசாலை ஒன்றின் அருகில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலில் 26 பேர் உடல் சிதறி உயிரிழந்தார்கள். மேலும் 63 பேர் படுகாயமடைந்தனர்.

**சிரியாவின் டமாஸ்கஸ் நகரில் கிறிஸ்தவ மக்கள் அதிகம் வாழும் பகுதியிலேயே இந்தத் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது**

உயிரிழந்தவர்களில் 11 பேரின் சலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏனைய சடலங்கள் உருத் தெரியாத அளவுக்கு சிதைந்து விட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த டிசெம் பர் மாதம் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 44 பேர் இறந்தனர். தற்போது அங்கு மூன்றாவது குண்டு வெடிப்பு நடந்துள்ளது. இந்த தாக்குதலை அடுத்து தீவிரவாதிகளுக்கு சிரியா அரசு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சிரிய உள்துறை அமைச்சர் இப்ராகில் அல்ஷார் கூறுகையில், மக்களுக்கும் நாட்டின் பாதுகாப்புக்கும் எதிராக செயல்படும் சக்திகள் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

சிரியாவில் அரசுக்கு எதிராக மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். இதன் பின்னணியில் மேற்கு நாடுகளே இருப்பதாக சிரியா குற்றஞ்சாட்டி வருகிறது. எகிப்து, லிபியா வரிசை யில் சிரியாவின் ஆட்சியை யும் தன் கைப்பிடிக்குள் கொண்டுவர அமெரிக்கா உள்ளிட்ட சக்திகள் முனை வதாகவும் எனினும் அந்த முயற்சிகள் எப்போதுமே பகல் கனவாகவே இருக்கும் என்றும் சிரியா தெரி வித்துள்ளது.

தற்கொலைத் தாக்குதல் நடத்தும் அளவுக்கு கிளர்ச்சிக்காரர்களிடம் ஆயுத பலம் இருக்கவில்லை என்றும் இத்தகைய குண்டுவெடிப்புகளையும் ஏதோ ஒரு வெளிநாட்டு சக்தியே நிகழ்த்துவதாகவும் குற்றம் சாட்டியுள்ள சிரியா, மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைக்காக என்ன விலை கொடுக்கவும் தாம் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளது. (ங)

## சதி!



புதுடில்லி,ஜன.9

திபெத் நாட்டு மக்களின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவைக் கொலை செய்யும் நோக்கத்துடன் சீனத் தீவிரவாதிகள் 6 பேர் இந்தியாவில் ஊடுருவி இருப்பதை இந்திய மத்திய உளவுத் துறை கண்டுபிடித்துள்ளது. அந்த தீவிரவாதிகளில் ஒருவன் பெயர் தசிபன் டோஸ்க் என்றும் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து .உளவுத் துறையினர் மும்பை மாநகர காவல்துறையினருக்குத் தகவல் கொடுத்து எச்சரித்துள்ளனர். இதன் எதிரொலியாக மும்பை மாநகர பொலிஸார் திபெத் முகாம் அமைப்பாளர்களை சந்தித்து தலாய்லாமாவின் பயணத் திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி, பாதுகாப்பையும் பலப்படுத்தியுள்ளனர்.

சீனாவில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் காரணமாக திபெத் நாட்டு மக்களின் ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ங)

## ஒஸ்ரியாவில் பனிப்பொழிவு போக்குவரத்துப் பாதிப்பு




ஒஸ்ரியாவில் வரலாறு காணாத பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதால் அங்கு இயல்பு வாழ்வு பாதிப்படைந்துள்ளது.

இதனால் பிரதான நகரங்களுக்கான ரயில் சேவையும் காலவரையறையின்றி நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

ரயில் பாதைகளை மூடி மறைத்தபடி பனிக் கட்டிகள் இருப்பதால் விபத்துகள் நேரும் என்பதாலேயே ஒஸ்திரிய அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

ஒஸ்ரியாவின் ரைரோஸ், புளூடென், ஒயிட் ஸ்லஸ் போன்ற பகுதிகளிலேயே அதிகளவான பனிப்பொழிவு இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதிகளில் 1.2 மீற்றர் உயரத்துக்கு பனிக் கட்டிகள் படிந்துபோய் உள்ளன. ஏறக்குறைய 2 ஆயிரம் வீடுகள் பனியால் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனரக வாகனங்கள் மூலமும் பனிக்கட்டிகளை அகற்றுவதற்கு இன்னும் ஒரு வார காலம் பிடிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ங)

## பாரசீக வளைகுடாவில் பதற்றம்

பாரசீக வளைகுடாப் பகுதியில் அடுத்தடுத்து ஈரான் மேற்கொண்ட ஏவுகணைச் சோதனைகளால் அப்பகுதியில் பதற்ற நிலை தோன்றியுள்ளது.

கடந்த வாரம் போர்க் கப்பல்கள் மூலம் இந்த ஏவுகணைப் பரி சோதனைகளை ஈரான் வெற்றிகரமாக மேற்கொண்டது.

இதனையடுத்து வளைகுடாப் பகுதியை ஈரான் அச்சுறுத்தலான பிரதேசமாக மாற்றினால் தகுந்த பதிலடி கொடுப்போம் என்று பிரிட் டன் அறிவித்துள்ளது.

இதற்கு ஒரு படி மேலே போய் அமெரிக்கா தன்னுடைய போர்க் கப்பல்களை அவசரமாக பாரசீக வளைகுடாவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

இனியும் ஏவுகணைப் பரிசோதனைகளை ஈரான் நடத்துமானால் அது ஈரான் தன்னுடைய அழிவுக்கு தானே வித்திடும் செயலாகவே இருக்கும் என்று அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகன் எச்சரித்துள்ளது. எனினும் எந்தவோர் அச்சுறுத்தலுக்கும் அடிபணியப் போவதில்லை என்று பதிலுக்கு ஈரான் தெரிவித்துள்ளது. (ங)

## பாலியல் இதழ்கள் பறிமுதல் சீன அதிகாரிகள் அதிரடி

பீஜிங், ஜன.09

சீனாவில் சட்டவிரோதமாக அறிவுசார் சொத்துக்களை திருடி வெளியிடுபவர்கள், சட்டவிரோதமாக புத்தகங்கள் வெளியிடுபவர்கள், ஆபாச இதழ்களை வெளியிடுவோர் ஆகியோர் அதிகாரிகளால் அவ்வப்போது கண்டுபிடிக்கப்பட்டு அவர்களிடமுள்ள புத்தகங்களும் பறிமுதல்செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறு 2011ம் ஆண்டில் மொத்தம் 5.2 கோடி சட்டவிரோத இதழ்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவற்றில் திருடப்பட்ட செய்திகள், ஆபாச புத்தகங்கள் என்பனவும் அடங்கும்.இதுதொடர்பாக 18 ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதேபோல் இணையத்தில் 18 லட்சம் ஆபாச செய்திகள், படங்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக ஓடியோ, வீடியோக்களும் ஏராளமாகக் கைப்பற்றப்பட்டுள்ளன. 2010ம் ஆண்டில் 4.40 கோடி புத்தகங்கள், வீடியோக்கள் தான் கைப்பற்றப்பட்டன. ஆனால் கடந்த ஆண்டு அதை விட அதிகமான சட்டவிரோதப் புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று சீனா அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இனி வரும் காலங்களில் இத்தகைய குற்றங்களுக்கான தண்டனையைக் கடுமையாக்குவது பற்றி சீனா ஆலோசித்து வருகின்றது. (ங)

## கொமாண்டோ நாய்கள்



எதிர்காலத்தில் அமெரிக்க கொமாண்டோப் படையணியில் எதிரிகளோடு போரிட நாய்களும் இணைக்கப்படவுள்ளன. தரைச் சண்டையில் மத்திரமன்றி விமானங்களில் இருந்து பரசூட்டில் குதித்து எதிரிகளின் இலக்கை அழிப்பதற்கு நாய்களுக்கான விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஈராக் போரில் காயமடைந்த லீ என்ற நாய் ஹெலி ஒன்றில் இருந்து பரசூட் மூலம் தன் பயிற்சியாளருடன் கடலில் குதித்து பயிற்சி பெறுகிறது.

## சூடான் ஜனாதிபதி லிபியா பயணம்

லிபியாவின் சர்வாதிகாரி கேணல் கடாபியின் ஆட்சி முடிவுக்கு வந்த பின்னர் முதல் முறையாக சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பஷீர் அங்கு பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். இந்தப் பயணத்தின் போது அவர் போர் நடைபெற்ற இடங்களைப் பார்வையிட்டார்.

அத்தோடு போருக்குப் பின்னான லிபியாவைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளையும் அவர் கண்காணித்ததோடு, அது தொடர்பான கலந்துரையாடல்களிலும் பங்குபற்றினார்.

''உண்மையிலேயே இப்போதுதான் லிபியாவில் மக்கள் சுதந்திரமாக உலா வர முடிகிறது. அவர்கள் உலகத்தில் உன்னத குடிமக்களாக உயர்வதற்கு உரிய காலம் கனிந்துவிட்டது.

எப்போதுமே அதிகாரம் நிலைத்திருக்க முடியாது என்பதற்கு லிபியாவின் சர்வாதிகார ஆட்சி வீழ்த்தப்பட்டது உலகுக்கு நல்ல தொரு உதாரணம்'' என்று இந்தப் பயணத்தின் போது சூடான் ஜனாதிபதி கருத்துத் தெரிவித்துள்ளார். (ங)

## அறுவைச் சிகிச்சையால் அபாயம் நீங்கியது



ஆர்ஜென்ரீனா ஜனாதிபதி கிறிஸ்ரினா பெர்னான்டோஸ் டீ கிளிஸ்னருக்கு புற்றுநோய் ஏற்பட்டதாக சந்தேகிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவருக்கு புற்றுநோயைக் கண்டறிவதற்காக அறுவைச் சிகிச்சைகள் மேற் கொள்ளப்பட்டன.

இதன்பின்னர் அரச தொலைக்காட்சியில் தோன்றிய ஜனாதிபதி ''வெற்றிகரமாக சிகிச்சை முடிவுற்று [illegible] இதன் பின்னர் எனக்கு புற்றுநோய் ஏற்படவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

மிகவும் சந்தோசமான கணம் ஒன்றில் உங்களுக்கு இந்தச் செய்தியை கூறுகிறேன்'' என்று தெரிவித்தார். அவருக்கு ஏற்பட்டது சாதாரண இரத்தக் கட்டிகள் தான் புற்றுநோய் அல்ல என்பதை ஆர்ஜென்ரீனா மருத்துவர்களும் உறுதியாகக் கூறியுள்ளனர். ஜனாதி பதியின் இந்த அறிவிப்பால் கடந்த ஒருவாரமாக ஆர்ஜென்ரீனாவில் நிலவி வந்த குழப்ப நிலை முடிவுக்கு வந்துள்ளது. (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் தீவிரவாதிகள் தாக்குதல்; 25 பேர் சாவு



இரு தேவாலயங்களில் நடைபெற்ற வழிபாட்டின் போது தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட கொடூரம்.

நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள மாகாணத்தில் இருவேறு இடங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 25 பேர் உயிரிழந்தனர்.

இந்தச்சம்பவங்களுக்கு போகோ ஹராம் என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. நைஜீரியாவின் வடப குதியில் முஸ்லிம்களும், தென் பகுதியில் கிறிஸ்தவர்கள் மற்றும் பழங்குடி யினத்தோரும் பெரும்பான்மையாக உள்ளனர்.

வட பகுதியில் ஷரியத் சட்டத்தை அமுல்படுத்தக் கோரி போகோ ஹராம் என்ற பயங்கரவாத அமைப்பு கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வன்முறை களில் ஈடுபட்டு வருகின்றது. நாட்டின் வடபகுதியில் உள்ள இரு மாகாணங்களில் கடந்த நத்தார் தினத்தன்று இந்த அமைப்பு நடத்திய தாக்குதலில் 50இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்தநிலையில் நாட்டின் வடபகுதியில் உள்ள கிறிஸ்தவர்கள் அனைவரும் இன்னும் மூன்று நாள்களில் தென் பகுதிக்குச் சென்றுவிட வேண்டும் என்றும், இல்லையெனில் தாக்குதல்கள் தொடரும் என்றும் போகோ ஹராம் அமைப்பு அண்மையில் எச்சரித்திருந்தது.

இதையடுத்து நேற்று முன்தினம் ஆதம் ஆவா மாகாணத்தில் முபி என்ற பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றில் வழிபாடு நடந்து கொண்டிருந்த போது மர்மநபர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தினார். இதில் 17 பேர் உயிரிழந்தனர்.

மேலும் யோலா என்ற இடத்தில் உள்ள தேவாலயத்தில் நடந்த தாக்குதலில் 8 பேர் பலியாகினர். இதையடுத்து ஆதம் ஆவா மாகாணத்தில் அரசு, அவசர நிலை உத்தரவு பிறப்பித்துள்ளது.

# பாக்., சிறைகளிலுள்ள இந்தியர்கள் விடுதலை

இஸ்லாமாபாத், ஜன.9

பாகிஸ்தான் சிறைகளில் இருந்து 185 இந்தியர்கள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தியா - பாகிஸ்தான் எல்லையைக் கடந்து பாகிஸ்தானுக்குள் சென்ற குற்றத்திற்காக, அந்த நாட்டுச் சிறைகளில் வாடுவோரை விடுவிக்க, இருதரப்புப் பேச்சு நடைபெற்றது. அதன் அடிப்படையில், 179 இந்திய மீனவர்கள், இந்திய குடிமக்கள் 6 பேர் என, மொத்தம்185 பேர் நேற்று கராச்சி சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு, லாகூருக்கும், பின், அங்கிருந்து பஸ் மூலமாக வாகா எல்லைக்கும் அனுப்பப்பட்டனர்.

இவர்கள் வாகா எல்லையைக் கடந்து இந்தியாவுக்குள் வரவுள்ளனர். இதற்கான சட்டபூர்வமான அனைத்து ஏற்பாடுகளையும் பாகிஸ்தானில் உள்ள இந்தியத் தூதரகம் மேற்கொண்டுள்ளது.

# நாடு திரும்பினால் கைதாவார் முஷாரப்



பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் நாடு திரும்பினால் கைது செய்யப்படுவார் என்று அரசுத் தரப்பு சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 25 அல்லது 27ஆம் திகதி பாகிஸ்தான் திரும்பப் போவதாக முஷாரப் அறிவித்தார்.

முன்னாள் பிரதமர் பெனசிர் புட்டோ கொலை வழக்கில் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் அவர் நாடு திரும்பினால் கைது செய்யப்படலாம் என்று தகவல்கள் வெளியாகின. இதையடுத்து தன்மீதான கைது நடவடிக்கையைத் தவிர்ப்பதற்காக அவர் எதிர்வரும் 19 ஆம் திகதியில் சவூதி அரேபியாவுக்குச் சென்று மன்னர் அப்துல்லாவைச் சந்தித்துப் பேச உள்ளார்.

பெனசிர் கொலை வழக்கில் முஷாரப் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் நாடு திரும்பினால் அவர் கைது செய்யப்படுவார் என்று அரசுத் தரப்பு சட்டத்தரணி சவுத்ரி ஜூல்பிகர் அலி தெரிவித்துள்ளார்.

# பெண்களைத் துன்புறுத்திய பொலிஸ்

குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட பெண்களின் வழக்கு விவரங்களை அறிந்து, அவர்களை கைது செய்யாமல் இருக்க துன்புறுத்தியதாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பொலிஸார் மீது முறைப்பாடு எழுந்துள்ளது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் ஜஸ்பிர் சிங் தாண்டா (வயது 52). இவர் பொலிஸ் அதிகாரியாகப் பணியாற்றுகிறார்.

டெர்பிஷைர் பொலிஸ் நிலையத்தில் 7 ஆண்டுகள் பணியாற்றியபோது, அந்த நகரில் குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட இளம்பெண்களின் விவரங்களைத் தெரிந்து கொண்டுள்ளார்.

அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, வழக்கில் கைது செய்யாமல் இருக்க துன்பு றுத்தியதாக தற்போது முறைப்பாடு எழுந்துள்ளது. இதையடுத்து ஜஸ்பிர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஆனால் இந்த குற்றச்சாட்டுகளை ஜஸ்பிர் சிங் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

இதுகுறித்த வழக்கு நாட்டிங்ஹாம் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அப்போது அரசு தரப்பு சட்டத்தரணி நீல்மூர் வாதிடுகையில், ஜஸ்பிர் அரசு விவரங்களைத் தவறாக பயன்படுத்தி இருக்கிறார்.

பெண்கள் மூவரிடம் அவர் தவறாக நடந்து கொண்டுள்ளார்.

3 பெண்களும் குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளதால், பொலிஸில் முறைப்பாடு தெரிவிக்க மாட்டார்கள் என்று ஜஸ்பிர் நினைத்துள்ளார் - என்றார்.

(வ)

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை (மல்லாகம்)
## டெங்கு கட்டுப்படுத்தல் தொடர்பான முக்கிய அறிவித்தல்

*2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நுளம்புப்பெருக்கத் தடுப்புச்சட்டம்*

நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதற்காகவும் நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதற்காகவும் அவற்றுடன் தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம் இதுவாகும்.

டெங்குக்காய்ச்சல் மற்றும் டெங்கு இரத்தப்போக்குக் காய்ச்சல் தொற்றுக் குள்ளாகிப் பாதிக்கப்பட்டோரினதும் இந்நோயினால் இறப்பவர் களினதும் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்து வருவதையடுத்து இந்நோய் இலங்கையில் பொதுமக்களிடையே பெரிய சுகாதாரப் பிரச்சினையாகவுள்ளது. இத்தீவிர நோயைத் தடுப்பதற்கான தடுப்பு மருந்துகளோ அல்லது இந்நோயை குணமாக்கக்கூடிய ஏதேனும் குறிப்பிட்ட சிகிச்சை முறைகளோ தற்போது இல்லாததாலும் அத்துடன் இந் நோய் பரவுவதைத் தடுப்பதற்கும் கட்டுப் படுத்துவதற்குமான ஒரே ஒரு வழிமுறை இந்நோய் பரவுகின்ற நுளம்பு பெரு கும் இடங்களை அழித்தொழிப்பதே ஆகும்.

நுளம்பின் பெருக்கத்தை அதிகரிக்கக்கூடிய தாவரங்கள், பற்றைகளை அகற்றல், பிடுங்கல் அல்லது அழித்தல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் இவ்வறிவுறுத்தலை மீறும் காணி உரிமையாளர்கள் மீது நீதி மன்றத்தால் தீர்ப்பளிக்கப்படும் போது ஆயிரம் ரூபாவிற்குக் குறையாததும் இரு பத்தையாயிரம் ரூபாவிற்கு மேற்படாத துமான குற்றப்பணத்தினை செலுத்து தல் வேண்டும். மேலும் நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் காணப் பட்டால் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபா குற்றப் பணத்தினை செலுத்துதல் வேண்டும்.

உரிமை கோரப்படாத காணிகள் வலி வடக்கு பிரதேசசபையால் பொறுப்பேற்கப்பட்டு திருத்தம் செய்யப்படவுள்ளது. பொறுப்பேற்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் உரிமை கோருமிடத்து காணி திருத்தம் செய்யப்பட்ட செலவுகளுடன் தண்டமும் பராமரிப்புச்செலவும் சேர்த்து உரிமை கோருபவர்களிடமிருந்து அறவிடப்பட்டு, அவர்களது காணிகள் கையளிக் கப்படும். மேலும் இத்திருத்தங்களைச் செய்யத் தவறும் காணி உரிமையாளர்கள் மீது 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நுளம்புப் பெருக்கத் தடுப்புச் சட்டம் மூலம் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

குறிப்பு: வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் டெங்கு அபாய நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).

(சி/7505) (45-6-7)

MBBS/MD
Lugansk State Medical University
UKRAINE -EAST EUROPE
Recognized by SRI LANKA MEDICAL COUNCIL
With A/Ls 6 years
Minimum : 2C + 1S in Biology, Chemistry and Physics
எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, நுவரெலியா, மாத்தளை மாணவர்கள் தற்பொழுது Ukraineல் கல்வி கற்கின்றனர்.
www.lugmedi.org
Tel : (தமிழில்) 0777 767 818 / 4512591
Scholars Information Centre
No.01, Vaverset Place, Colombo 06.

கட்டடம் வாடகைக்கு
உரும்பிராய்ச்சந்தி பலாலி வீதியில் சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்ட புதிய கடைத்தொகுதி வாடகைக்கு விடப்படும்.
நீளம் :- 80 அடி
அகலம்:- 47 அடி
மொத்த சதுரஅடி :- 3760 சதுரஅடி
கட்டடம் முன்பாக 2000 சதுரஅடி பின்புறமாக 2500 சதுரஅடி அளவுடைய வாகன தரிப்பிடங்களும் உண்டு.
வங்கிகள் நிறுவனங்கள் என்பனவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
நிறுவன வசதிக்கேற்ப கடைத் தொகுதிகள் பிரித்து வழங்கப்படும்.
தொடர்புகளிற்கு :- 0774297551

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

கரவருஷம் மார்கழி மாதம் 15 ஆம் நாள் (01.01.2012) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சிவபதமடைந்த எமது அன்புத் தந்தை



### பிரம்மஸ்ரீ கணபதீஸ்வரக்குருக்கள் சிவசுப்பிரமணியசர்மா

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளதால் அக்கிரியைகளில் தாங்களும் குடும்ப சமேதராகக் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| மார்கழி 25 ஆம் திகதி | (10.01.2012) | செவ்வாய்க்கிழமை | மு.ப. 10.00 மணி | தசாகம் (கல்லெடுப்பு) |
| 26 ஆம் திகதி | (11.01.2012) | புதன்கிழமை | மு.ப. 10.00 மணி | ஏகோதிஷ்டம் (மாசிகம்) |
| 27 ஆம் திகதி | (12.01.2012) | வியாழக்கிழமை | மு.ப. 10.00 மணி | சபிண்டீகரணம் |
| 28 ஆம் திகதி | (13.01.2012 | வெள்ளிக்கிழமை | மு.ப. 10.00 மணி | கிருஹயக்ஞம் |
| | | | நண்பகல் 12 மணி | சமாராதனை |

குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஞானியார் கோயில்,
அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.

மனைவி, பிள்ளைகள்.

(1255)(5,6,7)


விற்பனையாகிறது
❖ "புதிய பொது அறிவு-2012"
(சகல போட்டிப் பரீட்சைகளுக்கும் ஏற்றது)
ஆக்கம்: V.தபேந்திரன்
விலை: 350/=
❖ "மனைப் பொருளியல் உணவும் போசணையும்"
(உயர்தர வகுப்புகளுக்கு உரியது)
ஆக்கம்: K.பத்மாசனி-விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்
விலை: 750/=
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
(ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.)
தொடர்புகளுக்கு: லங்கா புத்தகசாலை,
[illegible] ஸ் பிளேஸ்,
[illegible], கொழும்பு-12.
T.P.: 0112 341942

வாடகைக்கு
திருநெல்வேலி சந்திக்கு அருகில் 72/9, பனிக்கர் ஒழுங்கையில் 4 அறைகள் உள்ள சகல வசதிகளுமுடைய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், காரியாலயங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0212223086

கட்டடம் விற்பனைக்குண்டு
ஆஸ்பத்திரி வீதியில், யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக கட்டடம் ஒன்று விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0779603600

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பரத்துக்கு எதிரான ஆவணங்கள் சமர்ப்பிப்பு



நிதி அமைச்சராக இருந்த சிதம்பரம் பிரதமருக்கு எழுதிய கடிதம் உள்ளிட்ட ஆவணங்களை சுப்பிரமணியம் சுவாமி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

டில்லி, ஜன.9

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீட்டு ஊழல் வழக்கில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தின் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரி டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்திடம் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி தாக்கல் செய்த வழக்கில் நீதிமன்றத்திடம் ஆதாரங்களை முன்வைத்துள்ளார்.

இந்த மனு மீதான விவாதங்கள் வரும் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊழல் நடந்த வேளையில் நிதி அமைச்சராக இருந்த ப.சிதம்பரம் ஊழல் பற்றி அறிந்திருந்தார், ஒப்புதல் வழங்கியிருந்தார், உடந்தையாக இருந்தார் என்பனவற்றை தான் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் காட்டுவதாக சுவாமி தெரிவித்துள்ளார்.

அலைக்கற்றை ஒதுக்கீட்டுக்கான விலையை நிர்ணயித்ததிலும், ஸ்வான், யூனிடெக் ஆகிய இரண்டு நிறுவனங்கள் தமது பங்குகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்க அனுமதிக்கப்பட்டிருந்ததிலும், அப்போதைய தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசாவின் செயல்களுக்கு சிதம்பரம் உடந்தையாக இருந்ததாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். நிதி அமைச்சராக சிதம்பரம் பிரதமருக்கு எழுதிய கடிதம் உள்ளிட்ட ஆவணங்களை அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். (வ)

# 5 வருட சிறைவாசம் ஆரம்பித்தார் சுக்ராம்

டில்லி,ஜன.9

தொலைத் தொடர்புத் துறையில் லஞ்சம் வாங்கிய மத்திய முன்னாள் அமைச்சர் சுக்ராம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவில் கடந்த 1996 ஆம் ஆண்டு தொலைத்தொடர்புத்துறை அமைச்சராக இருந்த சுக்ராம், தொலைத்தொடர்புத்துறைக்கான உதிரிப் பாகங்களை வாங்குவதற்காக தனியார் நிறுவனத்திடம் ரூ.3 லட்சத்தை லஞ்சமாக வாங்கிக் கொண்டு அவர்களுக்கு ஒப்பந்தம் அளித்துள்ளார்.

இந்த வழக்கை விசாரித்த டில்லி கீழ் நீதிமன்றம் சுக்ராமுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்த நிலையில் இதயக் கோளாறு காரணமாக பிணையில் இருந்த அவரை மீண்டும் சிறைக்கு செல்ல டில்லி கீழ் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து டில்லி கீழ் நீதிமன்றத்துக்கு அவசர ஊர்தியில் வந்த சுக்ராம் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

மேலும் இந்த வழக்கில் குற்றவாளி களாக அறிவிக்கப்பட்டிருந்த சுக்ராம் மற்றும் ஹைதராபாத்தைச் சேர்ந்த ஏ.ஆர்.எம். நிர்வாக இயக்குநர் பி.ராமராவ் ஆகியோருக்கு தலா 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், தொலைதொடர்புத்துறை துணை இயக்குநர் ஜெனரல் ருனு கோஷுக்கு 2 ஆண்டு கடும் தண்டனையும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருந்தது.

இதனையடுத்து மூவரும் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். ஆனால் அவர்களுடைய மேல்முறையீட்டை பி.சதாசிவம், ஜெ.செலமேஸ்வர் ஆகியோர் கொண்ட அமர்வு விசாரிக்க மறுத்துச் சிறைக்குச் செல்ல உத்தரவிட்டது. (வ)

# கருணாநிதி கண்டனம்



சென்னை,ஜன.9

நக்கீரன் பத்திரிகை எரிப்பு மற்றும் அலுவலகம் மீது அ.தி.மு.கவினர் தாக்குதல் நடத்தியதற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி கண்டனம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவித்ததாவது:

ஜெயலலிதா குறித்து அவதூறுக் கட்டுரை வெளியிட்டதாகக் கூறி நக்கீரன் பத்திரிகை பிரதிகளை எரித்து ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர் அ.தி.மு.கவினர்.

அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் இதில் ஈடுபட்டுள்ளனர். முதல்வர் ஜெயலலிதா இதுகுறித்து எதுவும் வெளிப்படையாகக் கருத்துக் கூறவில்லை.

இந்த நிலையில், நக்கீரன் அலுவலகத்தின் மீது நேற்றுமுன்தினம் அ.தி.மு.கவினர் தாக்குதல் நடத்தினர். கற்களை வீசியும், நக்கீரன் பிரதிகளைத் தீயிட்டுக் கொள்ளுத்தியும் வன்முறையில் ஈடுபட்டனர்.

அ.தி.மு.கவினரின் இந்தச் செயலுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக நாட்டில் இத்தகைய தாக்குதல்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. கண்டிக்கத்தக்கது. எதிர்ப்பைச் சட்ட பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும். அரசு இதுபோன்ற செயல்களை வேடிக்கை பார்க்கக் கூடாது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# மாயாவதியை மூடுங்கள்

லக்னோ,ஜன.9

உத்தரப் பிரதேச மாநிலம் முழுவதும் உள்ள மாயாவதி மற்றும் யானை சிலைகளை உடனடியாக மூடவேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வந்துள்ளதை அடுத்து ஆணையம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் 7 கட்டங்களாக சட்டசபைத் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் முறைகேடுகளைத் தடுக்க, தலைமை தேர்தல் கமிஷன் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்த நிலையில் உத்தரப் பிரதேசம் மாநிலம் முழுவதும் உள்ள மாயாவதி சிலைகள் மற்றும் பகுஜன் சமாஜ் கட்சியின் சின்னமான யானை சிலைகளை அகற்றவேண்டும் என்று முறைப்பாடுகள் எழுந்தன.

இதையடுத்து இந்த யானை சிலைகளையும், மாயாவதி உருவச்சிலைகளையும் மூட தலைமை தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பு முதலமைச்சர் மாயவதியை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. ஏனெனில் தேர்தலுக்கு வாக்கு சேகரிக்க இந்த சிலைகளையே மாயாவதி அதிகம் நம்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)



குஜராத் மாநிலம் அகமதாபாத் நகருக்கு வருகை தந்த துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரியை மாநில ஆளுநர் கம்லாபெனிவால் மற்றும் முதல்வர் நரேந்திர மோடி வரவேற்றனர். (வ)

## ஈழ அகதிகள் சிறையில்
# சீமான் கண்டனம்



ஜகதாபட்டினம் கடற்கரையில் அகதிகளாகச் சென்ற ஈழத் தமிழர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி சிறையில் அடைத்திருப்பது மனிதாபிமானமற்ற, கொடூரமான நடவடிக்கை என்று நாம் தமிழர் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நாம் தமிழர் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது:

பிள்ளைகளுடன் உயிர் பிழைக்க தமிழ்நாட்டுக்கு வந்தவர்களை நீதிமன்றத்தில் நிறுத்திய தமிழகப் பொலிஸாரின் நடவடிக்கை நாகரிகமற்றது, இரக்கமற்றது என்பது மட்டுமின்றி, பன்னாட்டு மனித உரிமைப் பிரகடனங்களுக்கும் எதிரானதாகும்.

இலங்கையில் இன்றுவரை தொடரும் சிங்கள பௌத்த இனவெறி அரசின் கொடு மைகளுக்கு எதிராகப் போராடக் கூடத் தெம்பின்றி, சர்வதேசம் தலையிடாத காரணத்தால் மௌன வலியுடன் எல்லா அடக்குமுறைகளையும் சகித்துக் கொண்டு எமது சொந்தங்கள் ஒவ்வொரு நாளும் செத்துக் கொண்டிருக்கின்றன.

அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு, உண்மையை அறிந்த பின்னரும் அவர்களை ஏதாவது ஒரு அகதிகள் முகாமுக்குக் கொண்டு சென்று மனிதாபிமான உதவிகளைச் செய்யாமல், நீதிமன்றத்தில் நிறுத்தி, குடும்பத்தினரைப் பிரித்து சிறையில் அடைக் கிறது தமிழக பொலிஸ் என்றால், அது அகதிகளைக் கையாளும் பன்னாட்டுப் பிரகடனங்களை அவமதிக்கிறது என்றல்லவா கருத்து.

தமிழகப் பொலிஸின் இந்தக் கொடூரமான, நாகரிகமற்ற நடவடிக்கையை தமிழக அரசு தடுத்தி நிறுத்தி, சிறையில் அடைக்கப்பட்ட நம் சொந்தங்கள் 8 பேரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி வேண்டுகோள் விடுக்கிறது. அவர்கள் விடுதலை செய்யப்படவில்லையென்றால், நாம் தமிழர் கட்சி போராடும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## காங்கிரஸ் மீது குற்றச்சாட்டுகிறார் மம்தா

இந்தியாவில் திரிணாமூல் கட்சியின் தலைவர் மம்தா பானர்ஜி தனது கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் தங்களுக்கு எதிராகச் செயற்படுவதாக குற்றம்சாட்டியுள்ளார்.

இந்தியாவில் அன்னிய முதலீடு மற்றும் பெற்றோல் விலை உயர்வை எதிர்ப்பதால் காங்கிரஸ் கட்சி எங்களை பற்றித் தவறான கருத்துக்களை வெளியிட்டு வருகிறது.

மேற்கு வங்க அரசுக்கு எதிராக இடது சாரியுடன் இணைந்து காங்கிரஸ் செயற்பட்டு வருவதாகவும் மம்தா பானர்ஜி குற்றம் சாட்டியுள்ளார்.

காங்கிரஸுக்கு கம்யூனிஸ்ட்டுக் கட்சி மட்டும் போதும் என்றால் நாம் எங்கள் தனி வழியில் செல்வோம் என்றும் உத்தர பிரதேசம் மற்றும் மணிப்பூரில் நடைபெறும் தேர்தலில் நாங்கள் போட்டியிடுவது காங்கிரசுக்கு விருப்பம் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

# சிலுவையில் அறையப்பட்ட பெண்

யேசு கிறிஸ்து தன்னுடைய கனவில் வந்து சொல்லியதாக, இந்திய மாநிலமான ஆந்திராவில் ஒரு கிராமத்தில் பெண் ஒருவர் சிலுவையில் அறையப்பட்ட சம்பவம் மக்களிடையே மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டம் குஞ்சான் பள்ளி கிராமத்தை சேர்ந்த வெங்காயம்மா சில ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்தவ மதத்துக்கு மாறியுள்ளார்.

அதன் பின்பு வெங்காயம்மா தனது பெயரை தேவகுமாரி என்று மாற்றிக் கொண்டார். கடந்த சில மாதங்களாகவே தனது கனவில் தினமும் யேசு கிறிஸ்து வருவதாக தேவகுமாரி தனது உறவினர்களிடம் கூறி வந்தார். இதை அறிந்து அந்தப் பகுதி மக்கள் அவரிடம் திரண்டு சென்று ஜெபம் செய்து ஆசி பெற்று வந்தனர்.

இந்த நிலையில் சில நாள்களுக்கு முன்பு தேவகுமாரி கணவர் மற்றும் சகோதரர்கள் சந்திரசேகர், ரமேஷ் ஆகியோரிடம் யேசு கிறிஸ்து தனது கனவில் தோன்றி "மகளே நீ என்னிடம் வர விரும்பினால் உன்னை உயிருடன் சிலுவையில் அறைய ஒப்புக் கொடுக்க வேண்டும்" என்று கூறியதாகத் தெரிவித்துள்ளார்.

இதை கேட்டதும் அவரது குடும்பத்தினர் அதிர்ச்சி அடைந்தாலும் தேவகுமாரி சிலுவையில் அறைய வேண் டும் என்று தொடர்ந்து பிடிவாதம் பிடித்ததால் கணவர், சகோதரர்கள் ஒன்றாகச் சேர்ந்து தேவகுமாரியை கடந்த வெள்ளிக்கிழமை அன்று யேசு கிறிஸ்துவைப் போல சிலுவையில் அறையத் திட்டமிட்டனர். தேவகுமாரி யேசு கிறிஸ்து போல் வெள்ளை உடை, சிகப்பு சால்வை அணிந்து சிறிது நேரம் சிலுவை முன்பு நின்று பைபிள் வசனங்களை வாசித்து அங்கு திரண்டிருந்த மக்களிடம் போதனை செய்துள்ளார்.

இதையடுத்து தேவகுமாரியை கணவரும் சகோதரர்களும் சிலுவையின் மீது படுக்க வைத்து இடது கையில் ஆணி அறைந்தனர். அப்போது ரத்தம் கொட்டினாலும் தேவகுமாரி துடிக்காமல் அமைதியாக இருந்துள்ளார். பின்னர் அவரது இரு கைகளையும் கயிற்றால் கட்டி சிலுவையைத் தூக்கி நிறுத்தினர். இயேசு கிறிஸ்துவுக்கு அணிவிக்கப்பட்டது போல் தேவகுமாரிக்கும் முள் கிரீடம் தலையில் சூட்டப்பட்டது. சம்பவம் பற்றி கேள்வியுற்ற பொலிஸார் தேவகுமாரியை மீட்டெடுத்து வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வா பெண்ணே....

# பட்டம் ஆள்! சட்டம் செய்!



'பெண்கள் நாட்டின் கண்கள்' என்று பெரும் பான்மை இடங்களில் கூறக் கேட்கின்ற அனுபவம் பலருக்கும் உண்டு. ஆனால் நிஜத்தில் அவ்வாறு இருப்பதில்லை. இதோ மறுபடியும் ஒரு மகளிர் தினம்...

யுனிசெஃப் (UNICEF) வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையின்படியாக இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1.2 கோடி பெண் குழந்தைகள் பிறக்கின்ற இத்தனை குழந்தைகளில் எத்தனை பேர் நலமோடு வாழ்கிறார்கள் என்பது சுதந்திர இந்தியாவின் பலமான கேள்விதான்.

அதேபோல ஒரு கணக்கெடுப்பு பிறக்கின்ற 1.2 கோடி பெண் குழந்தைகளில் 25% குழந்தைகள் தங்களின் 15ஆவது வயதை எட்டும் முன்பாகவே இறந்து விடுகிறார்கள் என்று கூறுகிறது. சரி! ஏன் பிறந்த குழந்தைகள் அதுவும் பெண் குழந்தைகள் மட்டும் 25% பேர் 15ஆவது வயதை எட்டும்முன் இறக்க நேரிடுகிறது?

பெண் சிசுக்கொலை, இது முதற்காரணம். இந்தியாவின் பெண் சிசுக்கொலையை முழுமையாக ஒழிக்க முடியவில்லை. பெண் சிசுக்கொலை என்பது தனிப்பட்ட ஒரு காரணத்திற்காக நிகழ்வதில்லை. எதிர்காலப் பிரச்சினைகள் கொண்டே இது நிகழ்கிறது.

'பெண் குழந்தை என்றால் செலவு, ஆண் குழந்தை என்றால் வரவு' என்ற சமூக கட்டமைப்பு பெண் குழந்தைகளைக் குழந்தையிலேயே கல்லறைக்கு இட்டுச்செல்கிறது. அதற்கடுத்து சத்துணவுக் குறைபாடு, குடும்பத்தகராறு, பாலியல் சித்ரவதைகள், காதல், வறுமை, நோய், சுகாதாரமின்மை, சமூக பயம் போன்றவையும் பெண்கள் இறப்பதற்கு மிக முக்கிய காரணமாகின்றன.

42 கோடி பேர் நம் நாட்டில் வறுமையில் வாழ்வதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இந்த வறுமை வெகுவாக பெண் பக்கமே திருப்பிவிடப்படுகிறது. இதனால் பாதிக்கப்படும் பெண்கள் மன ரீதியாக, உடல் ரீதியாக மிகவும் சோர்வடைகிறார்கள். இதனால் பெண் சமூகத்துடன் மொத்த சமூகமும் பாதிப்படைகிறது.

மேலும், 1981 ஆம் ஆண்டு கணக்கின்படியாக நம் நாட்டில் ஆண்டுக்கு 4.5 மில்லியன் திருமணங்களில் 3 மில்லியன் திருமணங்கள் 15 முதல் 19 வயதுக்குள் நடக்கும் திருமணங்களாகும். மருத்துவரீதியாக இத்திருமணங்கள், அதே நேரம் சட்டரீதியாகவும் தடைப்படுத்தப்படும் பலன் நன்றாக இல்லை. இதனால் பெண்களின் உடல்நலம், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் உடல்நலம் சேர்ந்தே பாதிக்கப்படுகிறது.

நமது சமூகத்தைப் போல கற்பு என்பது ஒரு பொதிச்சுமையாக வேறு எங்கும் இல்லை. பாரதி கற்பை, ஒழுக்கத்தைப் பாட முனைகையில்,' எதையும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவில் வைப்போம்' என்றான். இங்கு பெண் கற்பே குடும்ப ஒழுக்கம், கவுரவம், கட்டுப்பாடு, மானம், மரியாதை, மதிப்பு என்றெல்லாம் பலவாறு கட்டமைக்கப்படுகிறது. இதற்கு மிகப் பெரிய தூண்டுதலாக இருப்பது நமது சினிமா. இயக்குனர்கள். அவர்கள் பெண் களின் கற் பைக் குத்தகை எடுத்து 'கூவிக் கூவி' விற்றுத் தள்ளுகிறார்கள்.

வேலைப் பிரிவுகளிலும் இப் படித்தான். 'இன்னன்ன' வேலை இவர்களுடையது. இதனை இவர்களால் செய்ய முடியாது என்பது, சமையலறையில் பெண்களைக் கிடத்தி, அவலைக் கலகலப் பற்ற சூழலிலேயே (அடக்க மனோ பாவம்) வைத் துள்ளது .

எனவே மனோரீதியான பலத்தைப் பெண்கள் இழக்கிறார்கள். இதனால் தற்கொலைகள் பெண்களிடத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. சில வருடங்களுக்கு முன்பாக ஆக்ராவில் 14 வயதுக்குட்பட்ட 4 உடன்பிறந்த சகோதரிகள் கூட்டாகத் தற்கொலை செய்து கொண்டதற்குக் காரணம் சமூகத்தில் இழைக்கப்படும் பெண்கொடுமைகளே காரணமாக இருந்தது.

இதற்கெல்லாம் ஒரு தீர்வு கல்வி. அதுவாவது இந்தியப் பெண்களுக்குச் சரியாகக் கிடைக்கிறதா? 1991 வரையில் நம் மக்கள் தொகையில் பாதிக்குப் பாதிதான் படிக்கத் தெரிந்தவர்கள் இருந்தார்கள். அதில் ஆண்களோடு ஒப்பிட்டால் ஆண்களில் பாதிக்குப் பாதிகூட பெண்கள் படித்திருக்கவில்லை.

1998 செப்டம்பரில் பீஜிங்கில் நடைபெற்ற பெண்களின் 4வது உலக மாநாட்டில் இந்தியா சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில்,'பெண்கல்வி ஆர்வத் தடைகளை நீக்குதல், பலவந்தமாக திணிக்கும் கல்வி முறையில் மாற்றம், பெண்கல்வி தரம், மற்றும் பெண்கல்வி உயர்த்துதல்' பற்றி சவால்களாக முன்வைத்தது. ஆனால் அது நடைமுறையில் இன்றுவரை லேசாக இல்லை. கல்வி ஏற்றத்தாழ்வு, சமூக ஏற்றத்தாழ்வு, நகர, கிராம ஏற்றத்தாழ்வு என்று சமுகப் பிரிவுகள் பெண்களைத் துண்டாடுகின்றன.


'ஒரு பெண் படித்தால் அந்தக் குடும்பமே படித்ததற்குச் சமம்' என்றார் பண்டிதர் ஜவகர்லால் நேரு. ஆனாலும்,

''பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடுமீசன் மண்ணுக்குள்ள சில மூடர் நல்ல மாதரறிவைக் கெடுத்தார்'' என்றே நிகழ்காலம் தொடர்கிறது...

---

# பெண் பிள்ளைகள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமா?

■சந்தியா



எமது விட்டுப்பெண்கள் நன்றாகப் படிக்க வேண்டும், நல்ல ஆடைகள் அணிய வேண்டும், நல்ல வேலைக்குப் போக வேண்டும் என்று பல விடயங்களைப் பற்றி யோசிக்கிறோம். புத்தி மதிகள் கூறுகிறோம். ஆனால் எப்படி நடந்து கொண்டால் சமூகத்தில் அவர்கள் பாதுகாப்பாக வலம் வர முடியும் என்பதைப் பற்றி பெற்றோர்கள் மனம் திறந்து பேசுவதில்லை.

அதனால்தான் பல பெண் பிள்ளைகள் தமது வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு நிற்கிறார்கள். முன்பு பெற்றோருக்குத் தெரியாமல் ஒரு பெண் சுலபத்தில் யாருடனும் பேசிவிட முடியாது. ஆனால் இப்போது செல்போன் காலம். அதனால் தெரிந் தவர்கள் தெரியாதவர்கள் என்று யாரு டனும் எப்போது வேண்டுமானாலும் இலகுவாகப் பேசிவிட முடியும். அதனால் முன் பின் தெரியாத நபர்களின் தொடர்பு போனில் வந்தால் எப்படி நடந்து கொள்வது என்று அறிவுறுத்துங்கள்.செல்போனில் ஆபாசப் படங்களைக் காட்டி பெண்களின் பஞ்சு மனதில் நஞ்சை விதைப்பது என பலப் பல வழிகளிலும் பெண்கள் இன்று சீரழிக்கப்ப டுகின்றனர். எனவே இவற்றைப் பற்றியெல்லாம் நீங்கள் கட்டாயம் உங்கள் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண் டும். சின்னப் பெண்தானே அவளுக்கு எதற்காக இதைப் பற்றிக் கதைக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். தொலைக் காட்சி ,சினிமா என உங்கள் பெண் அரைகுறையாகப் பல விடயங்களைத் தெரிந்தி ருக்கிறாள் என்பதைப் பற்றி கவனத் தில் கொள்ளுங்கள். சக நண்பர்களுடன் பழக விடுங்கள்.குறுகிய வட்டத்தை வரைந்து அதற்குள் உங்கள் குழந்தை வளர வேண்டும் என்று எண்ணாதீர்கள். எல்லையே இல்லாமல் இதன் விருப்பத்துக்குப் பிள் ளையை விடுவது எப்படித் தவறாகுமோ அதுபோன்றதுதான் குறுகிய வட்டத்தை வரைந்து உங்கள் குழந்தையை வலம் வரச் செய்தும். அதனால் உங்கள் குழந்தையை சக நண்பர்களுடன் பழக விடுங்கள்.அடுத்தவர்களுடன் பேசும் போதும் நேராக நின்று நிமிர்ந்து பேசப் பழக்குங்கள். குறிப்பாக ஆண்களிடம். வெட்கப்பட்டு பேசும் போதோ அல்லது நாணிக் கோணிப் பேசும் போதோ ஏதோ ஒருவிதத்தில் எதிர் இருப்பவர் மன தில் பலவீனமாகப் புரிந்து கொள்ளும் மனநிலை ஏற்படும். அது மட்டு மன்றி நாட்டு நடப்புகளையும் அவர்களுடன் விவாதியுங் கள். செய்திப் பத்திரிகளை வாங்கிக் கொடுங்கள். அவர்கள் எப்படி இருந் தால் சமூகத்தில் பாதுகாப்பாக வலம் வர முடியம் என்பதை விளக்குங் கள். இந்த விடயங் களில் பெற்றோர் கள் அக்கறை காட்டினால் உங்கள் வீட்டுப் பெண் பிள்ளைகள் வாழ்க்கைப் பாதையில் நிச்சயம் கவனமாக இருப்பார்கள்.

*திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்*
*''திலகம்'',*
*உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .*

---

# இது கதையல்ல 6

■யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

*(நேற்றைய தொடர்ச்சி)*

பெண்கள் இவரிகளிட்டைச் சிக்காமல் கவனமாயிருக்கவேணும் .

காதல் காதலெண்டு திரிவினம். கலியாணம் செய்ய எண்டு கேட்டால் சீதனம், நன்கொடை எல்லாம் எக்கச்சக்கமாய்க் கேப்பினம். பெண் கலியாணம் வேண்டாம் எண்டு விட இயலாதளவுக்கு இசகு பிசகாய் ஏதாவது செய்திருப்பினம். தாய் தகப்பன் என்னசெய்யிரதென்டு காசு பணங்குடுத்து கட்டிவைச்சாலும் காசுப் பிசாசைக் கலியாணம் செய்த மாதிரித் தான்.

**ஆம்பிளையள் அவ்வளவு பொல்லாதவையா? என்று குறுக்கிட்டுக் கேட்டாள் விஜிதா.**

**நான் அப்படிச் சொல்லேல்லை. எல்லாரும் அப்படியில்லை. அப்படிப்பட்ட** சிலரிருந்தாடுலும் கவனமாயிருக்க வேணும். எண்டுதான் சொல்லுறன். ஆண்கள் மட்டுமில்லை பெண்களுக்கும் காசாசை இருக்கு. பணக்காரனை ஏமாற்றும் பெண்களுமிருக்கினம்தானே. ஆனால், ஆண்களைப் பொறுத்தவரை பணத்தை மட்டுந்தான் இழப்பார்கள். தம் எதிர்கால வாழ்க்கையைச் சீராக அமைச்சுக் கொண்டிடுவினம். எங்களுடைய சமுதாயத்திலை பெண்கள் அப்படிச் செய்யமுடியாது.

பிரபுவைப் பொறுத்தவரை திட்டம் போட்டுச் செய்தவன் மாதிரித் தெரியேல்லை. அப்படியெண்டால் முதலே சீதனத்தோடை கலியாணம் செய்யப் பார்த்திருப்பான். கலியாணம் செய்யிற உத்தேசமில்லையெண்டால் ... நகையளோடை வரச்சொல்லி கூட்டிக் கொண்டு போக முன்னமே சொல்லியிருப்பான். இவை இரண்டு பேருமே இந்தச் சினிமாப் படங்களைப் பார்த்திட்டு தங்களின்ரை மனதில் ஏற்பட்ட ஈர்ப்பு உணர்வைக் காதலெண்டு நினைச்சிட்டினம். படத்திலை ஓடிப்போக... வாழ்க்கை நடத்தலாம்.

உண்மை வாழ்க் கையிலை நிறையப் பிரச்சினைகள் வரும். அதிலை முக்கியமான பிரச்சினை காசு. வாழ்க்கை நடத்த அது முக்கியம். அந்தப் பிரச்சினையே அவையின்ரை காதல் போலியெண்டு காட்டிப் போட்டுது.

**நீங்கள் என்னம்மா சொல்லுறியள்?**

**குழப்பத்துடன் விஜிதா கேட்ட கேள்வியை எதிர்பார்த்துக் காத்திருந்த நான் ... நினைத்தவற்றைக் கூறத் தொடங்கினேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வியளம் கேட்டீர்களா?

## ← பனங்கொட்டையும் பலாக்கொட்டையும் →

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் றெயின் ஓடப்போகுதாம். அதற்கான பாதையை அமைக்கும் வேலைக்கான ஒரு ஆரம்ப வைபவம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் நடக்க இருக்குதாம். இந்த வருச இறுதிக்குள் கிளிநொச்சி வரைக்கும் ரயில் ஓடும். அது சாத்தியமில்லாவிடில் மாங்குளம் வரையாவது ஓடும் என்று சொல்லப்பட்டிருக்குது.

ரயில்ப் பயணம் அலைக்கழிவற்றது. சாவகாசமாய் அமர்ந்திருந்து செல்லலாம். துள்ளிக் குதித்துக் குலுக்காது. பஸ்ஸில் பயணம் செய்து நாரிப்பூட்டுக் கழன்று போனவர்களுக்கு ரயில் வரப்போகிறது என்பது உற்சாகம் தரும் செய்திதான்! அலுப்போ களைப்போ இல்லாத பயணம் என்பதால் பலரும் விரும்பிப் பயணிப்பது வழக்கமாகும்.

அதிலும் அரச ஊழியராயின் ரயில் பயணத்துக்கான ஆணைச் சீட்டுக்கள் அவர்களுக்கு குடும்பத்துடன் மூன்று சோடி இலவசமாக வழங்கப்படுவது உண்டு. அத்துடன் பருவகாலச் சீட்டு நடைமுறைகளும் உள்ளன. எனவே அரச ஊழியர்களின் பிரதான போக்குவரத்துச் சாதனமாக ரயிலே இருந்து வருகின்றது.



இன்று அரச சேவையில் இணைபவர்கள் வீட்டிற்கு அருகில் கடமையாற்றவே விரும்புகின்றனர். ஆனால், 1990இற்கு முன்னர் அரச சேவை அதிகம் வெளிமாவட்டங்களிலேயே இருந்தது. அதிலும் கிளறிக்கல் சேவையில் இருந்தோர் வடபகுதிக்கு வெளியில் கடமையாற்ற வேண்டியிருந்தது. அந்தக் காலத்தில் மணியோடர் கலாசாரம் நிலவியது. அரச ஊழியர்கள் அடிக்கடி பயணம்செய்ய முடியாது என்பதால் தமது சம்பளத்தைக் குடும்பத்தினருக்கு மணியோடர் மூலம் அனுப்பி வைப்பார்கள். ஊரில் திருவிழா, பண்டிகைகள், உறவினர் திருமணம் போன்றவற்றை ஒட்டியே அவர்களது வீடு நோக்கிய பயணம் அமையும். அது புகையிரதப் பயணமாகவே இருக்கும்.

புகையிரதப் பயணம் பல நண்பர்களைச் சம்பாதிக்கும். பல சுவையான அனுபவங்களைச் சந்திக்க வைக்கும். கலாசார இடைவினைகள் இப்பயணத்தில் அதிகமுண்டு. இன ஒருமைப்பாடு என்று பேசுபவர்கள் புகையிரதப் பயணத்தின் மூலம் அதனை இயல்பாக எட்டச் செய்யலாம் என்பதை அறிவார்களா? புகையிரதப் பயணத்தால் திருமண பந்தத்தில் இணைந்தவர்கள் பலர்.

அந்தக் காலத்தில் நிலக்கரியை எரித்து இயங்கும் புகையிரதமே இருந்தது. இது செல்லும் வழியில் தண்டவாளத்திலேயே கரியையும் கொட்டிச் செல்லும். இதனால் இதற்கு கரிக்கோச்சி என்று பெயர். புகையிரதக் கடவைக்கு அருகில் கோச்சி வரும் கவனம் என எழுதப்பட்ட இரும்பாலான அறிவித்தல் சட்டகம் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

பிற்காலத்தில் யாழ்தேவி பயணம் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்தேவியில் கொழும்புக்குப் பயணம் செய்யும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இடம்பிடிப்பதற்காக காங்கேசன்துறைக்கு வந்து அங்கிருந்து பயணத்தை ஆரம்பித்த நிலைமையும் இருந்தது. யாழ்தேவி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும்போது பனங்கொட்டை பனங்கொட்டை எனச் சத்தமிட்டு வரும் என்று பகிடியாகக் கூறுவார்கள். அதுபோல கொழும்பை நோக்கிப் பயணிக்கும் போது பலாக்கொட்டை பலாக்கொட்டை எனக் கூவிச் செல்லுமாம். பனங்கொட்டை என்பது தமிழர்களையும், பலாக்கொட்டை என்பது சிங்களவர்களையும் குறிக்கும் அடைகளாகும்.

ரக்சிக்காரர்கள், கச்சான் வியாபாரிகள், பெட்டிக்கடைக்காரர்கள் எனப் பலரதும் வாழ்க்கை புகையிரதத்தை நம்பியிருந்தது. அது திடீரென இல்லாமல்போய் அந்தத் தலைமுறையில் பெருமளவானோர் மண்ணுக்குள் புதைந்தும் விட்டனர். இனிப் புதிய தலைமுறையின் வாழ்க்கையில் வளந் தர புகையிரதத்தின் வரவு ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபுறம் லீசிங்கில் பல இலட்ச ரூபா செலவில் சொகுசு பஸ்களை இறக்கி, பதினொரு இலட்ச ரூபாவுக்கு வழித்தட அனுமதி பெற்று ஓடுபவர்களுக்கு இச்செய்தி இடியென இறங்கும் என்பதும் உண்மையே. காலமும் கோலமும் மாறும்போது ஏனைய பலவும் மாறுவது வழக்கம்தானே...!

விழிச்சான் குஞ்சு.

# வசதிகள் அற்ற நிலையிலும் சாதனை படைத்துள்ளோம்

**-வவுனியா விபுலானந்தா கல்லூரி அதிபர் இந்திரன்-**

கடந்த ஆண்டு இடம்பெற்ற உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினையும், மருத்துவத் துறைக்கு 3 மாணவர்களையும், பொறியியல் துறைக்கு ஒரு மாணவனையும் எமது பாடசாலையால் பெறமுடிந்துள்ளது. அது எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் பெறப்பட்ட பெறுபேற்று சாதனையாகவே கருதுகின்றேன் என வவுனியா விபுலானந்தா கல்லூரியின் அதிபர் வேலுப்பிள்ளை இந்திரன் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் கலைத்துறையில் முதலாம் இடத்தினைப் பெற்றமை தொடர்பாகவும், முதல் தடவையாக மருத்துவத்துறைக்கு 3 மாணவர்கள் ஒரே தடவையில் சித்திபெற்றமை தொடர்பாகவும் கேட்டபோதே அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2001 ஆம் ஆண்டில் இருந்து 6 தடவைகள் கலைத் துறையில் மாவட்டத்தில் முதல் நிலை பெறுபேற்றைப் பெற்றுவருகின்றோம். இம்முறை கிடைக்கப்பெற்ற முதல் நிலை பெறுபேற்றில் சிறப்பம்சமாக குறிப்பிடவேண்டியது அகில இலங்கை ரீதியில் 8 ஆவது இடத்தினையும் பெற்றுள்ளமையாகும். அதேபோல் மாவட்ட மட்டத்தில் இரண்டாவது இடத்தினையும் எமது கல்லூரியே பெற்றுள்ளது.

அத்துடன் விஞ்ஞானத்துறை 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து ஒவ்வொருவர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இம்முறை விசேடமாக 3 பேர் மருத்துவத்துறைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் 8 பேர் மருத்துவத்துறைக்கு தெரிவுசெய்யப்படும் நிலையில் 3 பேர் எமது கல்லூரியில் இருந்து தெரிவுசெய்யப்படுவதென்பது சிறப்பான அம்சமாகும்.

ஏனெனில் ஆய்வுகூட வசதிகளோ, ஆசிரியர்களோ குறிப்பாக இரசாயனவியலுக்கு ஆசிரியரே அற்ற நிலையில், வளங்கள் இன்றி இவ்வாறான அடைவு மட்டமானது வவுனியா மாவட்டத்தில் எமது பாடசாலை அடைந்த சாதனையாகக் கருதுகின்றேன்.

இம்முறை விஞ்ஞானப் பிரிவில் 90 வீதமானவர்களும் கலைத் துறையில் 95 வீதமானவர்களும் வர்த்தகத் துறையில் 75 வீதமானவர்களும் பல்கலைக்கழக தகுதியுடன் சித்தியடைந்துள்ளனர். அந்த வகையில் 4 பிரிவுகளையும் பொறுத்த வரையில் 45 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புகள் பெற்றுள்ளனர்.

அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இவ்வாறான பெறுபேறுகளை மாணவர்கள் பெற்றது மாத்திரமன்றி சித்தியடைந்த அனைத்து மாணவர்களும் வறுமையான நிலையில் உள்ளவர்கள் .

இதேபோல் புலமைப்பரிசில் பரீட்சையில் பல தடவைகள் எமது பாடசாலை மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டிருந்தது. இவ்வாறான வளர்ச்சி என்பது ஆசிரியர்களது முழுமையான ஒத்துழைப்பும் நிர்வாகத்தினரது மற்றும் வலயக் கல்வி அலுவலகத்தின் தன்னாலான உதவிகளுமே காரணமாக அமைகின்றது. எனவே, தொடர்ச்சியாக நாம் அதிகளவான மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவது மாத்திரமன்றி நற்பிரஜைகளையும் சிறந்த கல்வியாளர்களையும் இப்பிரதேசத்திற்கு உருவாக்குவோம். - என்றார். (எ-435)

## புதிய கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு புதிய கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக இ.செந்தில்மாறன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பிரிவில் கடமையாற்றிய கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சுந்தரலிங்கம் கடந்தமாதம் ஓய்வுபெற்றதை அடுத்து அவ் வெற்றிடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டார். (எ-25)

## புதிய அறிவிப்பாளர் பெயர் விவரம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நேர்முகத் தேர்வில் தெரிவுசெய்யப்பட்ட அறிவிப்பாளர்களின் பெயர் விவரம் வருமாறு:

ஏ.யோகநாயகம், சின்னராஜா ரமணராஜா, ரி.சோதிநாதன், கே.திலக்ஷி, ஜெயமலர் நல்லதம்பி, நாகேந்திரம் கஜேந்திரன், பி.கஜந்தன், ஜோசப் பேர்டினன்ட்ஸ், பீற்றர் சேவியர் கலிஸ், விஜயகுமார் ஜெயச்சந்திரன், ஸ்ரீபவன், சாய்பானு ராஜேந்திரன், மாலினி அஜந்தம், லதாங்கி மஜராம், துவர்க்கை நாகேஸ்வரன், மகேந்திரம் சுதர்சினி, வி.எஸ்.அசோகரட்ணம், குமாரசிங்கம் தினேஸ், ரி.தனதேனுகா, மரியநாயகம் லிந்தன், தனசோ்பி நவரத்தினம், ஜே.ஜெயகலா, ஆர்.நிஷாந்தினி, பி.ராஜிதா, எஸ்.காண்டீபன், எஸ்.தர்ஷினி, கே.அர்ச்சனா. (எ)

## சமூக உத்தியோகத்தர் இடமாற்றம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சமூக சேவை உத்தியோகத்தராக பணியாற்றிய வி.அருந்தவராசா தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் பெற்று சென்றுள்ளார். (எ-100)

## நிர்வாக உத்தியோகத்தர் நியமனம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தராக திருமதி ரி.சாந்தகுமார் இம்மாதம் தொடக்கம் நியமனம் பெற்றுள்ளார்.

இங்கு பணியாற்றிய எஸ்.முரளி கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ளார். (எ-100)

## ஓய்வூதிய சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது

2011ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட யோசனைகளின் அடிப்படையில் ஓய்வூதிய மீளாய்வுகளை மேற்கொள்ளுதல் தொடர்பான ஓய்வூதிய சுற்றுநிருபம் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் கே.ர.திலகரத்னவினால் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.



நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய திரு [illegible] காரைநகர் சிவன் கோயிலுக்கு வீதி பஜனையாகச் சென்றபோது....

## நிர்வாக உறுப்பினர் தெரிவு

கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

புதிய கரப்பந்தாட்ட சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர் - செ.சதீஸ்குமார், உப தலைவர் - வே.சுந்தரலிங்கம், செயலாளர் - ச.சசிக்குமார், உப செயலாளர் - செ.செல்வரஜீபன், பொருளாளர் - சி.சந்திரகாந்தன்.

செயற்குழு உறுப்பினர்கள் க.கலையமுதன், த.யேசுநாயகம், இ.பஞ்சதீபன். (எ-86)

* * *

சுழிபுரம் காந்திஜி சனசமூக நிலையத்தின் 2012ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் - கதிரன் தங்கவேல், செயலாளர் - சிதம்பரம் அன்னலிங்கம், உபதலைவர் - பாலன் சுகிர்தம், உப செயலாளர் - ஜெயமுகுந்தன் ஜெகதாஸ், பொருளாளர் - நவரத்தினம் மகேந்திரன், ஆலோசகர் - கணபதி மாணிக்கம்.

நிர்வாகசபை உறுப்பினர்கள் செ.தெய்வேந்திரம், பா.சுரேஸ், ச.றசிந்தன், செ.விஜயரத்தினம், வை.தவராசா, மா.கருணாகரன், ஜெ.ஜெனனி. (எ-86)

* * *

தென்மராட்சி, ஜன.9

சாவகச்சேரி மகளிர் கல்லூரி இளைஞர் கழகம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

கல்லூரி மண்டபத்தில் ஆசிரியை வளர்மதி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தென்மராட்சி பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ரி.விமல் கல்லூரி இளைஞர் கழகத்தினை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

நடப்பு வருட நிர்வாகத் தெரிவில் தலைவர் செல்வி.க.கஜானா, செயலாளர் செல்வி.சி.லக்ஸனா, பொருளாளர் செல்வி.பி.தமயந்தி, அமைப்பாளர் செல்வி.தே.தாரணி, விளையாட்டு செல்வி.செ.துவாரகா, கலாசாரம் செல்வி.நா.பிரதீபா, தொழில்முயற்சி செல்வி.ச.சாகித்தியா, ஊடகம் செல்வி.க.கேமா, தேசியசேவை செல்வி.சி.கானமிர்தா, கல்வி செல்வி.செ.கீர்த்தனா. (எ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல் -
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-5679731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 567 3377,
021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## நாங்கள் கேட்பதில் என்னையா தவறு?

வன்னியில் மக்களுக்குச் சொந்தமாக வேண்டிய ஆயிரக்கணக்கான அரச காணிகளைக் கையகப்படுத்த முயன்றுவரும் பாதுகாப்பு அமைச்சு, யாழ்ப்பாணத்தில் மக்களுக்குச் சொந்தமான உறுதிக் காணிகளையும் அபகரிக்கப் பார்க்கிறது. வலிகாமம் வடக்குப் பகுதியில் உள்ள ஒட்டகப்புலம் கிராமம் முழுவதையும் கபளீகரம் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சுத் தீர்மானித்துள்ள விடயம் அம்பலத்துக்கு வந்துவிட்டது.

இதற்காகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கும் காரணம்தான் விநோதமானது. கடந்த 20 ஆண்டுகளாகப் படையினர் வசம் அந்தப் பகுதி இருப்பதால் அது அரசுக்குச் சொந்தமானது என்று அமைச்சு உரிமை கோரி இருக்கிறது.

இலங்கைச் சட்டங்களின்படி வீடு அல்லது காணி ஒன்றை நீண்டகாலமாக ஒருவர் பராமரித்து அதில் வாழ்ந்தால் அவருக்கும் அந்தச் சொத்தில் கணிசமான உரித்து இருக்கிறது. வீடுகளில் அல்லது காணிகளில் மிக நீண்ட காலத்துக்கு - எழுத்து மூல ஒப்பந்தங்கள் எதுவும் இன்றி- ஒருவர் வாழ்ந்தால் அது அவருக்கே சொந்தமாகப் போய்விடும் என்ற பயம் இதனாலேயே மக்களிடம் ஏற்பட்டது. ஊர்களில் இப்போதும் எவருக்கும் வீடுகளை நீண்ட காலத்துக்கு ஒருவருக்கு வாடகைக்கு விடமாட்டார்கள். ஏனெனில் பின்னாளில் அவர்கள் அதற்கு உரிமை கோரிவிடுவார்கள் என்கிற பயம்.

இப்போது இலங்கை அரசும் அதேபோன்றே ஒட்டகப்புலம் மற்றும் இடைக்காடு கிராமத்தின் ஒரு பகுதி ஆகியவற்றிலுள்ள காணிகள் கடந்த 20 வருடங்களாகத் தமது கட்டுப்பாட்டில் இருந்தமையால் அவை தமக்கே சொந்தம் என்று உரிமை கொண்டாடுகின்றன. ஆனால், இலங்கைச் சட்டத்தின்படி அபகரிக்கப்பட்ட காணி நிலம் அல்லது வீட்டுக்கு எத்தனை ஆண்டுகள் ஆனாலும் ஒருவர் உரிமை கொண்டாட முடியாது.

ஒட்டகப்புலம், இடைக்காடு பகுதிகளில் இருந்து 1990ஆம் ஆண்டு மக்கள் இராணுவத்தினரால் விரட்டியடிக்கப்பட்டார்கள். அதன் பின்னரே அவர்களது காணிகள், வீடுகள் படையினரால் அபகரிக்கப்பட்டிருந்தன. பாதுகாப்பு உயர் வலயம் என்ற பெயரில் அவை இத்தனை காலமாக முற்றுகையிடப்பட்டிருந்தன.

20 வருடங்களுக்கும் மேலாகத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப அனுமதிக்குமாறு கேட்ட மக்களை அந்தப் பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்காமல் படையினர் தடுத்து வந்தனர். இத்தனைக்கும் அந்தக் காணிகளையோ வீடுகளையோ படையினர் பராமரிக்கவும் இல்லை; பாதுகாக்கவும் இல்லை. ஆனால் இப்போது அவற்றுக்கு உரிமை கோருகின்றனர். நோகாமல் நொங்கு தின்பது என்று இதனைத்தான் குறிப்பிடுவர்.

பேய் அரசாளும் ஊரில் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்பதால், 20 வருடங்களாகத் தமது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த நிலப்பகுதியைத் தமக்கே சொந்தமாக்கிக் கொள்ளப் பார்க்கிறது அரசு.

சரி அதுதான் போகட்டும், வெறும் 20 வருடம் அந்தப் பகுதியை வேலி போட்டுக் காவல் காத்ததற்காகவே அது உங்களுக்குச் சொந்தமானது என்று வாதாடுகிறீர்களே, தமிழன், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்டுகளாக வடக்கு - கிழக்கு மண்ணில் வாழ்கிறானே அவன் இந்த மண் தனக்குரியது என்று உரிமை கொண்டாட முடியாதா? அதற்கு மட்டும் **ஏன் தடை விதிக்கிறீர்கள்? இந்த நாட்டில் எந்தவொரு பகுதியும் தனியொரு இனத்தவருக்குச் சொந்தமானது என்று சொல்ல முடியாது என்று கூவித் திரிகிறீர்கள்?**

# நாங்கள் விழிப்பாக இருக்கிறோமா?

■ தே.தேவானந்த்
பணிப்பாளர்,
ஊடகவளங்கள், பயிற்சி நிலையம்
யாழ். பல்கலைக்கழகம்.

> “ நிறையத் தகவல்கள் வெவ்வேறு ஊடகங்கள் ஊடாக எமக்கு கிடைக்கின்றன. அவற்றுக்கிடையில் நிறைய முரண்பாடுகளும் வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் கல்வியறிவுடையவர் அல்லது படித்தவர் என்பது என்பது ஒருவர் எழுத வாசிக்கத் தெரிந்திருத்தல் என்பதைக் குறித்தது. ஆனால் இன்று படித்தவர் என்பதன் அர்த்தம் சற்று வித்தியாசமானது. படித்தவர் என்பவருக்கு எழுத வாசிக்கத் தெரிந்திருப்பதோடு வெவ்வேறு வகையான ஊடகங்களை வெற்றிகரமாக கையாள்வதற்கும், புரிந்து கொள்வதற்கும் திறன் இருப்பதுடன் அதனை வியாக்கியானிப்பதற்கும் தெரிந்திருக்க வேண்டும்.

நிறையத் தகவல்கள் வெவ்வேறு ஊடகங்கள் ஊடாக எமக்குக் கிடைக்கின்றன. அவற்றுக்கிடையில் நிறைய முரண்பாடுகளும் வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

இன்று எமது வாழ்வு என்று எதைக் கருதுகின்றோம்? எமது நாளாந்த பழக்கங்களும் வழக்கங்களும் யாரால் சொல்லித் தரப்படுகின்றன? எதை நாம் மெய் என்றும் யதார்த்தம் என்றும் கருதுகின்றோம்? என்று சிந்தித்தோமானால் எமக்கு கிடைக்கின்ற பதில் 'மீடியா' அதாவது ஊடகம். முன்பெல்லாம் நாம் பத்திரிகையை மட்டுமே ஊடகமாக கருதி வந்திருக்கிறோம். இதனாலேயே இதழியல்துறை முழுவதையும் பத்திரிகைத்துறை என்று அழைக்கின்ற வழக்கமும் ஊடகவியலாளர்கள் அனைவரையும் பொதுவில் பத்திரிகையாளர்கள் என்று கூறும் பழக்கத்தையும் கொண்டிருந்தோம். இன்று அதிகளவில் ஊடகம் அல்லது பல்லூடகம் என்ற சொற்களின் பயன்படுத்துகின்றோம்.

செய்தி என்பதன் பொருள் இன்றைய இயங்கியல் அர்த்தத்தில் மாற்றம் பெற்றுவிட்டது. புதினங்கள் செய்திகளாகிய காலம் மாறி, ஊடகங்கள் இன்று எவற்றை வெளியிடுகின்றனவோ அவையே செய்தி என்று நிலை ஏற்பட்டுவிட்டது. ஊடகங்கள் எதை யதார்த்தமென்று அடையாளப்படுத்துகின்றனவோ அல்லது உணர்த்துகின்றனவோ அதுவே மக்களின் யதார்த்தமாகவும் கருதப்படுகின்றது.

ஊடகத்தில் வருவதில் எந்தத் தவறும் இருக்காது. அது கேள்விகளுக்கு அப்பாற்பட்டது அதை அப்படியே நம்பி எமது வாழ்வை மாற்றிக்கொள்ள வேண்டும் அல்லது அதற்கேற்ப செயற்படவேண்டும் என்ற எண்ணம் எம் அறிவு சார்ந்த தளத்தையும் தாண்டி மேலோங்கி இருக்கிறது என்பதை மறுக்கமுடியவில்லை.

குறிப்பாக இளவயதினரும் சிறுவர்களும் ஊடகத்தால் ஆட்படுவது அதிகமாக உள்ளது. அவர்கள் ஊடகங்கள் மூலம் தகவல்களைப்பெற்றுக் கொள்கிறார்கள். அதேவேளை ஊடகங்களின் போக்குக்கு ஏற்பவே தங்களை மாற்றிக்கொள்ளவும் நினைக்கிறார்கள். தான் ஊடகத்தில் பார்த்ததையும் கேட்டதையும் தன் உண்மையான வாழ்விலும் செய்து பார்க்க விரும்புகிறார்கள்.

எல்லா ஊடகத் தகவல்களும் நன்கு திட்டமிடப்பட்டவை; தமக்கான சொந்த நிகழ்ச்சி நிரலை கொண்டவை என்பதை இங்கு பலர் புரிந்துகொள்வதில்லை. உலகு பற்றிய எமது புரிதலை ஊடகங்கள் உண்மையில் தமக்கேற்பவே வழிப்படுத்துகின்றன. ஒரு விடயம் தொடர்பான ஆலோசனையையும் அபிப்பிராயங்களையும் உருவாக்குவதில் அவை வலு [illegible] ஒவ்வொரு ஊடகத் தகவலையும் தனித்துவமாகவே புரிந்து கொள்கிறான் என்றபோதும் ஊடகங்களால் இலகுவில் பொது அபிப்பிராயங்களை ஏற்படுத்திவிட முடிகின்றது.

இந்தச் சூழ்நிலையில் ஊடகங்கள் பற்றிய விழிப்புநிலை பெற்றோர் ஆசிரியர்கள் மற்றும் இளையோர் மத்தியில் அவசியமாகின்றது. ஊடகத்தை மக்கள் கையாள்வது அல்லது தெரிவு செய்வது சார்ந்த அறிவை, ஆற்றலை இளையோருக்கும் பிள்ளைகளுக்கும் வழங்குகின்ற பொறுப்பு பெற்றோரிடமும் பாடசாலைகளிடமும் சமய நிறுவனங்களிடமுமே உள்ளன.

இதில் பெற்றோரின் பங்கு என்பது மிக மிக முக்கியமானது. இதற்கு பெற்றோர்களுக்கு ஊடகம் தொடர்பான அறிவு அவசியமாகின்றது.

பெற்றோரின் கண்காணிப்பு என்றவுடன், பிள்ளைகள் தொலைக்காட்சி பார்ப்பதைத் தடைசெய்தல், கைபேசியை தவிர்த்தல், கணினியைத் தவிர்த்தல், வீடியோ கேம்ஸ் விளையாடத் தடை விதித்தல் என்ற தற்காப்பு நிலைகளைக் கருத்தில் கொள்ளக்கூடாது. அப்படிச் செய்வது புதிய யுகத்தில் இருந்து பிள்ளைகளைப் பிரித்து வைப்பதாக அமைந்து விடும். அதனால் அந்த முடிவை பெற்றோர்கள் எடுக்க முடியாது.

''நாங்கள் முந்தி ரி.வி, கைபேசி, கணினி இல்லாமல் இருந்தனாங்கள் தானே படிச்சனாங்கள்தானே'' என்ற வாதங்களோ, அவற்றிலிருந்து பிள்ளைகளைத் தூர விலகியிருக்கக் கோருவதோ இன்று சாத்தியமாக இருக்கப் போவதில்லை. அந்த வசதிகள் எல்லாம் அப்போதே இருந்திருந்தால் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள் என்ற எதிர்வாதத்துக்கு ஒருவராலும் பதில் சொல்ல முடியாது.

ஆகவே நிலைமையைக் கட்டுக்குள் வைத்திருக்கப் பெற்றோர்கள் ஊடகம் சார்ந்த தமது கவனயீர்ப்பை அதிகப்படுத்த வேண்டும். அதற்கு என்ன செய்யலாம் என்பதை சிந்தித்தாக வேண்டும்.

எது அழகானது, ஆரோக்கியமானது என்பதை பண்பாட்டின் உணர்வோடு பெற்றோரே பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும். தமிழர்களின் விழுமியங்களை நல்லது, கெட்டதுகளை தெளிவுபடுத்த வேண்டும். இது போதனையின் மூலம் சாத்தியமாவதல்ல. செயல் மூலம் இதனைச் சாத்தியமாக்க வேண்டும்.

ஒரு தமிழ் படத்தை பிள்ளையுடன் சேர்ந்து பார்க்கின்ற பெற்றோர் அதில் வருகின்ற கீழ்தரமான வடிவேலுவின் கதைக்கு விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள் அல்லது பலரை இரத்தம் சொட்டச்சொட்ட அடிக்கின்ற கதாநாயகனின் பழிதீர்த்தல் காட்சியைப் பார்த்து ரசித்து கை தட்டுகிறார் என்பதான செயல் பிள்ளைக்கு அங்கே நடப்பவை சரியென்றே சொல்வதாகின்றது. **ஊடகத்தில் எதைப் பாராட்டுகிறோம், எதைக் கேள்விக்கு உட்படுத்துகின்றோம், எதை ரசிக்கிறோம் என்பதில் பெற்றோருக்கே அதிக விழிப்பு நிலை அவசியமாகின்றது. பிள்ளைகளை வழிப்படுத்த அதுவே முக்கியமாகின்றது.**

ஊடகத்தைப் பார்த்து உணர்ச்சி வசப்படுதல், மிகைப்படுத்தல் என்பனவற்றினைத் தவிர்த்து ஒரு விடயத்தை ஏற்றுக் கொள்வதற்கும் கற்றுக் கொள்வதற்கும் பிள்ளைகளை ஊக்கப்படுத்த வேண்டுமானால் நாமும் அதனைச் செய்வதற்குத் தாயராக இருக்க வேண்டும்.

இன்று வளர்ந்த நாடுகளில் இளவயதினர் நித்திரை கொள்வது மற்றும் பாடசாலை செல்வது தவிர்த்து அதிகமான நேரத்தை ஏதோவொரு ஊடகத்திலேயே செலவிடுகின்றனர் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த நிலை எமது பிரதேசத்துக்கும் வெகு விரைவில் வந்து விடும்.

தொலைக்காட்சி, கைப்பேசி, வீடியோ கேம், எம்.பி.3 அல்லது எம்.பி.4 பிளேயர் போன்ற ஏதோவொரு மின்னியல் ஊடகத்துடனேயே இன்று இளவயதினர் வாழ்கிறார்கள். 'இன்ரநெற்' பயன்பாடும் அவர்களிடம் அதிகளவில் இருக்கிறது. தங்களது சுய விருப்பங்களையும், விவரங்களையும் முகப் புத்தகம் என்கிற பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களிலும் போடுகிறார்கள்.

எல்லா வயதினரிடமும் தொலைக்காட்சியும் சினிமாவும் மிகச் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒரு வயதிற்கு குறைந்த பிள்ளைகளும் இரண்டு வயதுக்குக் குறைந்த பிள்ளைகளும் தொலைக்காட்சி பார்ப்பதும்கூட அதிகரித்துள்ளது. தொலைக்காட்சி பார்ப்பது பிள்ளைகளின்கூடி விளையாடும் பண்பு, சமூக ஊடாட்டம் என்பவற்றைத் தவிர்க்கின்றன.

ஊடகத்தில் காண்பிக்கப்படும் வன்முறைச் செயற்பாடுகள் அதிகளவு மன அழுத்தத்தைத் தருவதோடு வன்முறை விரும்பிகளாகவும் பிள்ளைகளை ஆக்கி விடுகின்றன. அதிகமான சிறுவர்கள் விரும்பிப் பார்கின்ற ரொம் அன் ஜெரி கார்ட்டூன் சிறுவர்கள் மத்தியில் வன்முறை உணர்வையே வளர்ப்பதாக ஆய்வுகள் பல வெளிப்படுத்துகின்றன.

ஊடகங்கள் மூலமாகத் தரப்படுகின்ற விளம்பரங்களால் பிள்ளைகளிடம் புதியதொரு யதார்த்தம் சிருஷ்டிக்கப்படுகின்றது. உடலின் சரும நிறத்தை மாற்றுதல் சார்ந்த மிகைப்படுத்தப்பட்ட, யதார்த்தத்திற்கு மாறான சிருஷ்டிப்பு விளம்பரங்களைப் பார்த்து, அதற்காக முயற்சித்த பலர் மன அழுத்தத்திற்கும். வீண்சிரமங்களுக்கும் ஆட்படுகிறார்கள் என்பதை ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளனர்.

ஊடகங்களின் பாவனையால் இளையோரின் உணவு பழக்கத்தில் மாற்றம் ஏற்படுவதோடு உடல் பருமன் அதிகரித்தல், பாடசாலை அடைவு மட்டக் குறைவு, உணவில் ஒழுங்கீனம், நித்திரையின்மை, கருத்தூன்றல் குறைவு மற்றும் அவதானக் குறைவு போன்ற பிரச்சினைகளும் ஏற்படுகின்றன என்பதைப் பல ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆகவே ஊடகங்கள் எம்மை ஆட்கொள்ளாத வகையில் எம்மை நாமே தயார்படுத்திக் கொள்ளுதல் முக்கியமாகின்றது. ஊடக அறிவுள்ள ஒருவர் தனது ஊடகப் பாவனையை மட்டுப்படுத்த முடியும். நல்ல ஊடகங்களைத் தெரிவு செய்ய முடியும். ஊடகத் தகவல்களைப் பகுத்தாய்வு செய்து தமது ஆற்றலைப் பெருப்பித்துக் கொள்ள முடியும். இதன் காரணமாக ஊடகத்தின் பாதகமான தன்மையால் எவரொருவரும் பாதிக்கப்படுவது குறையும்.

**இதற்காகப் பெற்றோர்கள் எப்போதும் கேட்க வேண்டிய கேள்விகள் சில உண்டு.**

**✱ உங்கள் பிள்ளைகள் எவ்வளவு**

(22ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சியில் எதிர்ப்பாளர்களை ஓரங்கட்டி தன் கையைப் பலப்படுத்துகிறார் ரணில்

08/01/2012 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் கட்டுரையில் இருந்து ஒரு பகுதி.

தொகுப்பு:கோகுலன்

ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியுயோர்க்கில் புதுவருட விடுமுறையைக் கழித்துவிட்டு அண்மையில் நாடு திரும்பியதையடுத்து அக்கட்சியில் புதிய திருப்பங்கள் வெளிப்படத் தொடங்கியுள்ளன. கட்சியின் ஆலோசனை வழங்கும் குழுவின் கூட்டம் அண்மையில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றபோது இந்த வருடத்துக்கான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 2011ஆம் ஆண்டு காலியாகியுள்ள பல பதவிகளுக்கு புதியவர்களை நியமிக்கும் செயற்பாடுகளும் அதில் அடங்கும்.

ஒழுக்காற்று நடவடிக்கைகளை எதிர்நோக்கும் எந்த ஒருஉறுப்பினரும் புதிதாகப் பதவிகளுக்கு நியமிக்கப்படலாகாது என்று விக்கிரமசிங்க அறிவித்தார். அது மட்டுமல்ல கட்சியின் தலைமையகத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் அனைவரும் துரோகிகள் என்றும் அறிவித்தார். அந்த சம்பவத்துக்குப் பின்னர் அவர்களுக்கு ஆதரவு வழங்கியவர்களும் அவ்வாறானவர்கள்தான் என்று அவர் குறிப்பிட்டார். குழுவின் கலந்துரையாடல்களில் விக்கிரமசிங்கவுடன் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அவைத் தலைவர் காமினி ஜயவிக்கிரமபெரேரா, உதவித் தலைவர் ஜேசப்மைக்கல் பெரேரா, தேசிய அமைப்பாளர் தயாகமகே போன்றோரும் கலந்துகொண்டிருந்தனர். பொதுச் செயலாளராக அத்தனாயக்காவை மீண்டும் நியமித்தார் விக்கிரமசிங்க. ஏனைய பதவிகள் தொடர்பாகவே விவாதங்கள் தொடர்ந்தன.

ஜோசப் மைக்கல் பெரேரா டிசெம்பர் 18 ஆம் திகதி உதவித் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அப்பதவியின் வாயிலாக அவர் செயற்குழுவிலும் உறுப்பினராக இருக்க முடியும். அப்பதவிக்கு இதுவரை காலமும் உதவித் துணை அவைத் தலைவராக இருந்து வந்துள்ள கபிர் ஹாசிம் நியமிக்கப்பட்டார். அவர் வகித்த பதவிக்கு உதவிச்செயலாளராக இருந்து வந்துள்ள ரி.வேலாயுதம் நியமிக்கப்பட்டார். புதிய உதவிச் செயலாளராக ஆனந்த குணரட்ன நியமிக்கப்பட்டார். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அவர் ஐ.தே.கவின் பிரபல்யமான பிரமுகராவார்.

அரசாங்கத்தின் பக்கம் கட்சி தாவிச் சென்றுள்ள மோகன்லால் சிரேரோ வகித்து வந்த கொழும்பு மாவட்ட செயற்குழு உறுப்பினர் பதவிக்கு ரவி கருணாநாயக்காவை நியமிப்பதாக ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார். தேசிய அமைப்பாளர் என்ற முறையில் இந்த உறுப்பினர் பதவியை முன்பு கருணா நாயக்க வகித்து வந்துள்ளார். இந்தக் கட்டத்தில் கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்வதற்கு முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய நியமிக்கப்படவேண்டும் என்று சஜித் பிரேமதாச தெரிவித்தார். இதனை ரணில் விக்கிரமசிங்க நிராகரித்ததுடன் அவ்வாறான கோரிக்கையொன்றை ஜயசூரியா தம்மிடம் முன்வைத்தால் மட்டுமே ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் இந்தியாவுக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டுவிட்டு நாடு திரும்பியுள்ள கரு ஜயசூரிய இதுவிடயமாக தெரிவித்தபோது:

''நான்ஒருபோதும் பதவிகளை கேட்டுப்போகவில்லை ஆனால் அவைகளை சம்பாதித்துக் கொண்டேன். அவ்வாறு கேட்டுக் கொள்ளும் நிலையில் நான் இல்லை'' என்றார். விக்கிரமசிங்காவின் பதவிக்காக மட்டுமே நான் போட்டியிட்டேன். அதனை கட்சி அமைப்பு விதிகள் அனுமதித்தன. அவ்வளவுதான் என்றார். மேலும் அவர் குருநாகல் மாவட்ட உறுப்பினர் ஜயசிறி ஜயசேகரவை எதிர்க் கட்சிகளின் பிரதி கொரடா பதவியிலிருந்து தாம் நீக்குவதாகவும் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளனவென்றும் விக்கிரமசிங்க தெரிவித்தார். அவர் மீதான ஒழுக்காற்று விசாரனைகள் முடிவுறும் வரை அப்பதவியைக் காலியாக வைத்திருக்கலாம் என்று பிரேமதாச தெரிவித்தார். செயற்கமிட்டி ஜனவரி 16 ஆம் திகதி கூடி அவர்மீதான ஒழுக்காற்று நடவடிக்கை பற்றி முடிவெடுக்கவிருக்கிற பிரேமதாசாவின் கோரிக்கையை நிராகரித்த விக்கிரமசிங்க களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேராவை எதிர்த்தரப்பு பிரதி பிரதம கொறடாவாக நியமித்தார்.

தயாசிறி ஜயசேகரா அண்மையில் இது பற்றி கருத்து தெரிவிக்கையில்: எனக்கு எதிரான எந்தவித நடவடிக்கையையும் கொள்ள நான் தயாராய் இருக்கின்றேன். ஆனால் தொடர்ந்தும் ஐ.தே.கவுக்கு விசுவாசமாக இருந்து வருவேன். எனது ஜனநாயக உரிமையான வெளிப்படையாக பேசியமைக்காக இது என்மீது பழி தீர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கையாகும். ஓர் உண்மையான தலைவரானவர் நாம் வலுவான நிலையில் இருக்க வேண்டும் என்பதற்காக எதிர்க் கருத்துள்ளவர்களையும் அரவணைத்துக் கொண்டு செல்வது அவசியமாகும். அதைத்தான் அமரர். ஜே.ஆர்.ஜயவர்தன கடைப் பிடித்தார். இப்பொழுது கட்சி தினமும் அழிக்கப்பட்டு வருவது கவலைக்குரியதாகும். நான் ஒருபோதும் விலக மாட்டேன் இந்த அநீதிக்கு எதிராகப் போராடுவேன் என்று கூறியுள்ளார்.

மாத்தறை மாவட்ட உறுப்பினர் மங்களசமரவீரவுக்கு பொருத்தமானதொரு பதவி வழங்கி அதன் மூலம் செயற்குழு உறுப்பினராக்க வேண்டும் என்று பிரேமதாச முன்மொழிந்தார். எந்த ஒரு பதவியையும் வகிக்க மங்கள விரும்பவில்லை என்று விக்கிரமசிங்க தெரிவித்தார். பிரேமதாசாவின் முன்மொழிவு ஒரு வெளிப்படையான வேசம் என்று விக்கிரமசிங்காவின் ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

மாத்தளை மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் கூட்டமொன்றில் பிரேமதாச உரை நிகழ்த்துவதற்கான திட்டம் இருந்தது. ஆனால் விக்கிரமசிங்க அந்தக் கூட்டத்தை ரத்து செய்யும்படி அறிவுறுத்தல் விடுத்திருந்தார். பல உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுடன் தொலைபேசியில் அவர் பேசியிருந்தார்.

வெள்ளிக்கிழமையன்று சிறிகோதாவில் உள்ள பிரேமதாசாவின் அறை உடைத்துத் திறக்கப்பட்டு காலியாக்கப்பட்டது. பிரதித் தலைவரான அவர் அந்த அறையைப் பாவித்து வந்ததுடன் அதன் திறப்பையும் வைத்திருந்தார். அந்த அறை இப்போது ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு வழங்கப்பட்டுள்ளது. முன்னால் பிரதித் தலைவர் கரு ஜயசூரியாவைப் போல பிரேமாவும் சிறிகோதாவிலுள்ள விக்கிரமசிங்காவின் அறையைப் பாவிக்கலாம் என்று அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜயசூரியாவால் நாடாளுமன்றத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த அறை இப்பொழுது ஒரு காரியாலயமாக மாற்றப்பட்டு ஐ.தே.க உறுப்பினர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஐ.தே.கவின் சீர்திருத்தவாதிகள் என்று அழைக்கப்பட்டவர்கள் தமது பதவிகளை இழந்துவிட்டது மட்டுமல்லாமல் அனுபவித்து வந்த சலுகைகளையும் இப்பொழுது இழந்து வருகிறார்கள். மாவட்ட அளவிலான தலைமைப் பதவிகளிலும் மாற்றம் ஏற்படுத்தப்படலாம் என்று விக்கிரமசிங்கவின் ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

# வட கடலில் எமக்கு மட்டும் ஏன் இப்படித் தலைவிதி?

நெற்றிக்கண்ணன்

வந்தவர்களுக் கெல்லாம் மனுக்கள் கையளித்துக் காய்த்துவிட்டன வடபகுதி மீனவர்களது வலிய கரங்கங்கள். இனிமேல் இழப்பதற்கு உயிர் மட்டும்தான் மிச்சம் என விரக்தியின் விளிம்பில் தொழிலின்றிப் பேரவலத்தில் மீனவர்கள்.

வடக்கில் வசந்தம் கூறும் மஹிந்த அரசு சுமார் 35ஆயிரம் மீனவக் குடும்பங்களின் பட்டினிச்சாவுக்கு வடக்கில் துணையாகியுள்ளது என்ற உண்மை பட்டவர்த்தனமாக இன்னும் இரண்டாண்டுகள் மட்டும் காத்திருந்தால் போதும் என்கிறது மீனவர் சமூகம்.

ஒரு காலத்தில் நாட்டின் கடலுணவு உற்பத்தியில் மூன்றிலொரு பங்கை வடக்கு நிறைத்த சாதனையை மறந்திடமுடியாது. கண்ணீர் காயும் சில தருணங்களில் மீனவர்கள் பசுமையாக அதனை அசைபோடுவதுண்டு. 1983ஆம் ஆண்டின் யாழ். மாவட்ட கடலுணவு உற்பத்தி 48 ஆயிரத்து 677 மெற்றிக் தொன். இந்தச் சாதனை ஆண்டு வடக்கு மீனவர்கள் வாழ்வின் பொற்காலம்.

மூன்று தசாப்தகால ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து மூன்றாண்டுகள் ஆகின்றன. கடல்வலயச் சட்டங்கள் நீக்கப்பட்டு ஓரளவு சுதந்திரமாகத் தொழில் செய்யக் கூடிய இந்தவேளையில்கூட 83 ஆம் ஆண்டு சாதனையின் அரைப் பங்கை எட்டமுடியவில்லை இன்றைய மீனவர்களால். ஏன்?

சாதனைக்குத் தடையான பிரதான பிரச்சினையாக இழுவை மடித் தொழில் முறைமை தற்போது சுட்டிக்காட்டப்படுகிறது. இந்திய, தென்னிலங்கை மற்றும் உள்ளூர் மீனவர்கள் இவ்வாறான வலையைப் பயன்படுத்துகின்றனர். இதில் பிரதானமாக இந்திய மீனவர்களது அத்துமீறல் எல்லை தாண்டிவிட்டது.

கடந்த 2000ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கடலாய்வின் முடிவில் கடல் வளம் பாதுகாக்கப்பட வேண்டும் எனில் இழுவைமடிப் படகுத் தொழில் முற்றுமுழுதாக நிறுத்தப்படவேண்டும் எனத் துறை சார்ந்தவர்களால் ஆலோசனை முன்மொழியப்பட்டது. அதன் அடிப்படையில் 2003இல் அந்தத் தொழில் முறைமை நிறுத்தப்பட்டது.

கடற்தொழில் அமைச்சும் சுற்றறிக்கை மூலம் தடையை அறிவித்திருந்தது. ''கடல்படுக்கையில் ஏதேனும் கொண்டு வாருதலில் ஈடுபடும் மீன்பிடித்தொழில் இலங்கை நீர்ப் பரப்புக்குள் மேற்கொள்ளப்படலாகாது'' என்பதைத் தெளிவாகச் சுட்டி நிற்கிறது. 1996ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்தொழில், நீரியல் வளங்கள் சட்டத்தை அந்தச் சுற்றறிக்கை கூறி நின்றது. இழுவைமடி வலை, முக்கூட்டு வலை, தங்கூசி வலை, நாய் வலை, விறாண்டி வலை, லைலா வலை, ஆகியன கடல் வளத்தை அழிக்கும் என்ற அடிப்படையில் கடல் தொழில் பயன்பாட்டுக்குத் தடைசெய்யப்பட்டன.

எனினும் எந்தத் தடைகளுமின்றி இந்திய மீனவர்களின் இழுவை மடி வலைப் படகுகள், லம்பாடி படகுகள், வள்ளங்கள் அத்துமீறி வடக்கில் மீன்பிடிக்கின்றன. இந்திய இழுவைப் படகு மீனவர்களின் அத்துமீறலைத் தடுத்து நிறுத்தவென 2004ஆம் ஆண்டில் நான்கு தினங்கள் இலங்கை - இந்திய மீனவர்கள் கொழும்பில் சந்தித்துப்பேச்சு நடத்தினர்.

பின்னர் மீளவும் 2010இல் இந்தியக் கரையோர மீனவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். தொடர்ந்து பறங்கிமலையில் இடம்பெற்ற மாநாட்டில் மூன்று தினங்கள் இரு நாட்டு மீனவர்களும் பேச்சில் ஈடுபட்டு இறுதியில் இரண்டு நாட்டு அரசாங்கத்துக்கும் மனுவைக் கையளித்தனர். அது மட்டுமன்றி 2011 இல் கடற்தொழில் அமைச்சின் அலுவலகத்தில் மீளவும் மீனவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.



மஹிந்த அரசின் அரசியல் சித்து பல சுற்றுப்பேச்சுகள் மூலம் முன்னெடுத்த முடிவுகளை முடிவில் கானல் நீராகிவிட்டன. ஆயுதப் போரட்டத்தை முடிவுகட்ட முன்னெடுத்த மகிந்தாவின் பயங்கரவாத வெறியாட்ட யுத்தத்துக்கு இந்தியா வழங்கிய அனுசரனைக்கான நன்றிக் கடனாகவே இலங்கைக் கடலில் குறிப்பாக வடபகுதியில் இந்திய மீனவர்கள் அத்துமீறி எங்கும் வரலாம் என்ற இந்தச் சலுகை நடைமுறைப்படுத்தப்படுவதாக மீனவர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

வடக்கின் கடல்வளம் முழுமையாக அழிக்கப்படவேண்டும், அது நடந்தேறும் வரை தடை செய்யப்பட்டுள்ள இழுவைமடி வலையுடன் தொழிலுக்கு வரும் இந்திய மீனவர்களுக்குப் பச்சைக் கொடி காட்டவேண்டும் என்பதே மஹிந்தாவின் நிலைப்பாடு என்றும் அவர்கள் கொதிக்கிறார்கள்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் காரணம் காட்டி உள்ளூர் மீனவர்களும் தடைசெய்யப்பட்ட இழுவை மடிவலையைத் தாம் பயன்படுத்துவதை நியாயப்படுத்துகின்றனர். குருநகர் மற்றும் வல்வெட்டித்துறை மீனவர்கள் இழுவை மடித்தொழில் முறைமையை கைவிட மாட்டோம் என அடம்பிடிப்பதில் முக்கியமானவர்கள்.

''எங்கள் கடலில் தொழில் செய்யும் இந்திய மற்றும் தென்னிலங்கை மீனவர்களைக் கட்டுப்படுத்த வக்கில்லாத வடக்கு அதிகாரிகள் எம்மை மட்டும் மடக்கிப் பிடிக்கின்றனர்'' என்று பதிலுக்குக் கோபத்துடன் குமுறுகிறார்கள் குருநகர், வல்வை மீனவர்கள். இழுவை மடிவலை பயன்படுத்தும் உள்ளூர் மீனவர்களது இந்தக் குற்றச்சாட்டில் நியாயம் இருக்கிறது. இந்திய மற்றும் தெற்கு மீனவர்கள் வடக்குக் கடலில், தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்கிறார்கள்தான். அதனைக் கட்டுப்படுத்த கடல் தொழில் திணைக்களத்தின் வடக்கு அதிகாரிகளால் முடியவில்லை; அல்லது முயற்சிக்கவில்லை.

இந்திய மீனவர்கள் கடல் உணவுகளை அள்ளிக் கொண்டிருக்கும்போது உள்ளூர் மீனவர்களை மட்டும் இழுவை மடிவலையைத் தூக்கி எறிந்துவிடச் செய்வதன் மூலம் கடல் வளம் பாதுகாக்கப்பட்டு விடும் என்று அதிகாரிகளும் எதிர்பார்க்க முடியாதுதான்.

வடக்கின் கடலுணவு வளம் மீளவும் தேசிய உற்பத்தியின் மூன்றிலொரு பங்கை எட்டவேண்டின் இந்திய மீனவர்களின் அத்துமீறலையும் தென்னிலங்கை மீனவர்களது அத்துமீறலையும்கூட முற்றாக நிறுத்தவேண்டும். அதன் மூலம் உள்ளூர் மீனவர்களது இழுவைமடி உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட கடற்தொழில் முறைமையை இலகுவில் தடைசெய்யமுடியும்.

வடக்கில் வசந்தம் என்று கூறி வலியை ஏற்படுத்தும் மஹந்த, பாதுகாக்கிறோம் எனக் கூறி கடல்வளம் அழிக்கப்படுவதைக் கண்டுகொள்ளாமலிருக்கும் கடற்தொழில் அமைச்சர் ராஜித சேனாரட்ன, குருநகர் மீனவர்கள் இழுவை மடியைப் பயன்படுத்தப் பிள்ளையார் சுழிபோட்டுவிட்டுப் பின்னர் கழன்றுகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வாக்குப் போட்ட மக்களை மறந்து கொழும்பே கதியெனக் கிடக்கும் மக்கள் பிரதிநிதிகள், சம்பளம் ஒழுங்காகக் கிடைத்தால் சரி ஏன் எமக்கு வீண்வம்பு என ஒதுங்கிக் கொள்ளும் மாவட்ட அதிகாரிகள் என எல்லோருக்கும் கடல் வளத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும் கடல் வளம் அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தும் பொறுப்பும் இருக்கிறது.

வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ். தவரட்ணம் கூறுவதனைப்போல அரசியல்வாதிகள் அதிகாரிகள் தொடர்ந்தும் அலட்சியப்போக்கில் இருந்தால் உள்ளூர் மீனவர்கள் சட்டத்தைக் கையில் எடுப்பதைத் தவிர்க்க முடியாதுதான் போய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம் அழிவற்றது

'ஸத்யம் வத' 'தர்மம் சர' என்று ஆணையிடுகிறது வேதம். உண்மையே பேசு', ' அறமே செய்' என்பது அதன் பொருள்.

இந்தக் கலிகாலத்தில் உண்மையைப் பேசினால் ஊரெல்லாம் எதிரி. உலகெங்கும் பகை என்று பலர் பயப்படுகிறார்கள். உண்மையைப் பேசுகிறவர்கள், உண்மையைப் பேசினால் மட்டும் போதாது. அறவழியில் வாழ்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும். உங்கள் வாழ்வு அறவழியில் இல்லாமல் உண்மை பேசுகிறேன் என்று பிறரைப் பற்றி பேசினால் துன்பம்தான் மிஞ்சும்.

பழைய வைத்திய முறையில் மருந்துகள் கொடுக்கும் போது, மருந்து மட்டும் சாப்பிட்டால் போதாது, பத்தியமான உணவுகள் சாப்பிட வேண்டும். புளி, காரம் எண்ணெய் மிகுந்த மோசமான உணவுகள் சாப்பிடாமல் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் மருந்து வேலை செய்யும் என்று சொல்வார்கள். சில சமயம் பத்தியமற்ற உணவுகள் சாப்பிட்டால் மருந்து விபரீதமாகக் கூட வேலை செய்யும். அதே போலத்தான் உண்மை பேசுவது என்பதும் மருந்து போன்றது. அறவழியில் வாழ்வது பத்தியமான உணவுமாதிரி. இரண்டும் இணைந்து நிகழ வேண்டுமே ஒழிய உண்மை மட்டும் பேசி, அறவழியில் நாம் நடக்காவிட்டால் அடி உதைதான் கிடைக்கும்.

அறவழியில் நடக்கக்கூட பலர் பயப்படுகிறார்கள். அறவழியில் நடந்த ராமர் கஷ்டப்பட்டார். தருமர் கஷ்டப்பட்டார். அயோக்கியர்கள் சுகவாழ்வு வாழுகிறார்கள் என்று பலர் புலம்புகிறார்கள். இது மாயை. பெரிய பொய். இராமன் கஷ்டப்பட்டார் என்று உங்களுக்கு யார் சொன்னது? அது நீங்களாக நினைத்துக் கொண்ட பொய். இராமன் கஷ்டப்பட்டதாக உங்களிடம் வந்து சொன்னாரா? தருமர் துன்பப்பட்டதாக உங்களிடம் வந்து அழுதாரா? அவர்களுக்கு நேர்ந்த சோதனைகளைத் துன்பங்களாக நீங்கள் கருதுகிறீர்கள். அவர்கள் கருதுவதே இல்லை. நெருப்புக்குக் காகிதம் அஞ்சும். தங்கம் பயப்படுமா? நீங்கள் அறவழியில் நடந்தால் வரும் அனுபவங்களைத் துன்பம் என்று முத்திரை குத்தாதீர்கள். அறவழியில் நடப்பவருக்கு ஒரு நாளும் துன்பம் வராது. "இன்பமே எந்நாளும்.... துன்பம் இல்லை" என்கிறது நாவுக்கரசர் தேவாரம்.

ஒரு கதை சொல்லட்டுமா? சிலப்பதிகாரம் போன்று இருக்கும். சிலப்பதிகாரம் இல்லை. அதற்கு நேர்மாறான கதை.

ஒரு ராஜாவின் அரண்மனையில் சிலம்பு திருட்டுப் போய்விட்டது. அரசனுக்குக் கடுங்கோபம். சிலம்பைக் கண்டுபிடிக்க ஒற்றர்களை ஏவினான். பயன் இல்லை. "ஒரு மாதத்துக்குள் சிலம்பைக் கொண்டு வந்து தருபவர்களுக்குப் பெரும் பரிசுத் தொகை" என்று அறிவித்தான். கூடவே மக்களை மிரட்ட "அதற்குப் பிறகு அது யாரிடமாவது இருந்து கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது கொண்டு வந்து தந்தால் மரண தண்டனை" என்றும் அறிவித்தான்.

அந்த ஊருக்குத் துறவி ஒருவர் சீடர்களோடு வந்து கொண்டிருந்தார். வழியில் கீழே கிடந்த சிலம்பு அவர் கைக்கு அகப்பட்டது. விசாரித்தபோது அது ராஜாவின் சொத்து. அதை உடனே கொண்டு போய்க் கொடுத்தால் பரிசு உண்டு. குறிப்பிட்ட ஒரு நாளுக்குப்பின் கொண்டு போய்க் கொடுத்தால் மரண தண்டனை என்று துறவிக்குத் தகவல் கிடைத்தது.

துறவி அதைக் கொண்டு போய்க் கொடுக்கவில்லை. வைத்துக்கொண்டார். சீடர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. சரியாக எந்த நாளுக்குப் பிறகு கொடுத்தால் மரண தண்டனை என்று ராஜா அறிவித்தாரோ அதற்குப் பிறகு போய் அரசரிடம் சிலம்பைக் கொடுத்தார். "இப்போது உமக்கு மரண தண்டனை நான் விதிக்க வேண்டி இருக்குமே ஏன் கிடைத்ததும் தரவில்லை" என்று சீறினான் அரசன்.

"ஒன்று கிடைத்ததும் ஓடோடி வந்து தந்திருந்தால் பரிசுக்கு நான் ஆசைப்பட்டதாக அர்த்தம். நான் பரிசை விரும்பவில்லை. இரண்டு... மரண தண்டனை கிடைக்கும் என்று நான் அஞ்சிக் கொடுக்காமலேயே வைத்திருந்தால் நான் சாவுக்குப் பயந்தவன் என்று அர்த்தம். நான் மரணத்துக்குப் பயப்படுபவன் இல்லை. உமது சிலம்பை அப்படியே வைத்துக் கொண்டால் பிறர் பொருளுக்கு ஆசைப்பட்டவன் என்று ஆகிவிடும். நான் பிறர் பொருளை விரும்புவதே இல்லை. அதனால் இப்போது கொடுத்து விட்டேன்" என்றார் துறவி.

"இப்போதும் உமக்கு மரண தண்டனை கிடைக்குமே" என்றான் அரசன். துறவி கம்பீரமாக அரசனைப் பார்த்து "மூடனே ... அறவழியில் நடக்கும் ஒருவனை அழிக்க எந்த அரசுக்கும் அதிகாரம் இல்லை.

தர்மம் உன் சட்டத்தை விட மேலானது. விடு வழியை " என்று கூறியபடி வீரமாக நடந்தார். அரசர் தலைவணங்கி வழிவிட்டான். அறம் அழிவற்றது. நம்புங்கள்.



சுகி. சிவம்

# காலங்கள் கடந்தாலும் கல்லூரியுடன் ஒன்றிணைந்த சிவஞான வைரவர் ஆலயம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)



1945 ஆம் ஆண்டு இலங்கை அரசு இலவசக் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்திய போது கல்லூரி அதிகார சபை அதனை ஏற்றுக் கொண்ட தற்கு இணங்க யாழ். இந்துக் கல்லூரி வேகமான முன்னேற்றத்தைக் காணத் தொடங்கியது.

இவற்றில் விஞ்ஞான கல்வித் துறையில் பெரும் வளர்ச்சியைக் கண்டு வரத் தொடங்கியதால் கல்லூரியின் விஞ்ஞான கூடத்தை விரிவு படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

இதன் காரணமாக கல்லூரியின் விஞ்ஞான கூடத்தின் கிழக்குப் புறமாக இருந்த சிவஞான வைரவர் ஆலயம் ஒரு தடையாக இருப்பதைக் கருதி அதனை வேறு ஓர் இடத்தில் நிர்மாணிக்க அப்போதைய பாடசாலை அதிபர் எண்ணினார். இதற்கமைய கல்லூரியின் அதிபர் விஞ்ஞான ஆசிரியர்கள், சமய பாட ஆசிரியர்கள் மற் றும் சைவப் பெரியார் களையும் ஒன்றாக அழைத்து ஒரு சபை யைக் கூட்டினார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனை கூறு மாறு சிவஞான வைரவர் ஆலயத்தை நிர்மாணம் செய்த மு.ப.சிதம்பரநாதச் செட்டியாருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

> கல்லூரி வைரவர் ஆலயம் இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கல்லூரி அதிபர் மாரடைப்பால் இறந்தமை வைரவரின் புதுமை

அதிபரின் வேண்டுகோளுக்கு அமைவாக சிதம்பரநாதச் செட்டியாரை அழைக் கச் சென்றவரிடம் சிதரம்பரநாதச் செட்டியார் கோபமாக "கோயிலைக் கட்டிய புண்ணியம் எனக்கு. இடிக்கும் பாவம் அவர்களுக்கு" நான் வரமாட் டேன் எனப் போய்க் கூறுங்கள் எனத் திருப்பி அனுப்பி விட்டார்.

எனினும் பாடசாலை அதிபர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. சிதம்பரநாதச் செட்டியார் மற்றும் சமயப் பெரியார்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது கோயிலை அழித்து கல்லூரி வளாகத்தின் வடபகுதியில் ஓர் ஒதுக்குப் புறமாகப் புதிதாக ஒரு கோயிலை நிர்மாணம் செய்தார்.

ஆலயம் இருந்த இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட சிவஞான வைரவர் ஆலய வரலாற்றில் மூன்றாவது கட்ட வளர்ச்சியாகக் கொள்ளப்பட்டது.

ஆலயம் இவ்வாறு இடவசதிகளுக்கு ஏற்றால் போல் தெய்வம் உறையும் திருவடிச் சந்நிதியை மனம்போன போக்கில் இடமாற்றம் செய்வதைப் பலர் கண்டித்தனர்.

அதனைத் தொடர்ந்து சிவஞான வைரவரின் திருமேனியை புதிதாக அமைக்கப்பெற்ற சிறிய கோயிலில் எழுந்தருளச் செய்த பின்னர் அங்கு சிவகாம சுந்தரி அம்மையினதும், ஆடவல்லாளினதும் திருமேனிகளை எழுந்தருள்ச் செய்ய வேண்டுமென்று கல்லூரியின் அதிபராக இருந்த ஏ.குமாரசுவாமி நினைத்துக் கொண்டார்.

அதற்கமைய திருமேனிகளை வார்க்கும் பணி கும்பகோணத்தில் இருந்த ஒரு சிறந்த சிற்பக் கலைஞரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தியாவில் இருந்து வடிவமைக்கப்பட்ட திருமேனிகளை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரும் பணிகளை அதிபர் முன்னெடுத்தார்.

அந்தக் காலத்தில் சிதம்பரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த சி.செ.சோமசுந்தரத்தோடு தொடர்பு கொண்டு திருமேனிகளை எடுத்து வருவதற்கு அனுமதி கேட்டுக் கொண்டார்.

அதற்கமைய திருச்சிராப்பள்ளியிலிருந்து பலாலி விமானம் மூலம் அவற்றைக் கொண்டு வருவதன் மூலம் அதிபர் அதனை பலாலி விமான நிலையம் சென்று பெற்றுக் கொள்வதாகவும் முடிவு எடுக்கப்பட்டது. குறிக்கப்பட்ட நாளில் அதிபர் மற்றும் உதவி ஆசிரியர் ஆகியோர் பலாலி விமான நிலையத்துக்குச் சென்றனர்.

திருமேனிகளைக் கொண்டு வந்த சோமசுந்தரத்தைக் கண்டவுடன் மகிழ்ச்சியுடன் அவரையும் அழைத்துக் கொண்டு பலாலி வீதி வழியாக யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்தார்.

அப்போது அங்கே ஓர் எதிர்பாராத சம்பவம் நிகழப் போவதை யாரும் எதிர்பார்க்கவில்லை.

பலாலி வீதியிலிருந்து சுன்னாகம் செல்லும் வீதி பிரியும் புன்னாலைக் கட்டுவன் சந்தியில் அவர்கள் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் விலகி வீதியோரத்தில் இருந்த தூணுடன் மோதியது. எனினும் வாகனத்தில் இருந்த எவருக்கும் எந்தவித காயமும் ஏற்படவில்லை.

இருந்தும் இந்தியாவில் இருந்து வடிவமைக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்ட திருமேனிகள் சேதமடைந்து ஆகம முறைப்படி அவற்றை ஆலயத்தில் எழுந்தருளச் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த திருமேனிகள் தற்போதும் கல்லூரி நூலகத்தில் ஓர் காட்சிப் பொருளாகவே வைக்கப்பட்டுள்ளன.

கல்லூரி வைரவர் ஆலயம் இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து சில காலம் கழித்து கல்லூரி அதிபர் மாரடைப்பால் இறந்தது வைரவப் பெருமானின் ஒரு வித சக்தியாகவே கொள்ளப்பட்டது.

22 ஆண்டுகள் கழித்து இந்தக் கல்லூரியின் அதிபராக நியமனம் பெற்ற பி.எஸ்.குமாரசுவாமி பல ஆண்டுகளாக சிவஞான வைரவர் ஆலயத்துக்கு ஏற்பட்ட தவறுகளை நிவர்த்தி செய்யப் பெரிதும் விரும்பினார்.

அதற்கமைய சமயப் பெரியார்கள் சமூக ஆர்வலர்கள், சமயச் சான்றோர்கள் போன்ற பெரியவர்களை அழைத்து ஓர் கூட்டம் கூட்டினார்.

சிவஞான வைரவர் ஆலயத்தின் வளர்ச்சிக்கு தேவையானவற்றையும் தற்போதைய நிலைப்பாட்டையும் அதிபர் அந்தக் கூட்டத்தில் எடுத்துக் கூறினார்.

அதன் போது வேதாகம விற்பன்னராக இருந்த பிரம்மஸ்ரீ கைலாசநாதக்குருக்கள் கருத்தைக் கேட்குமாறு கருத்து முன்வைக்கப்பட்டது.

அதன்படி குருக்கள் அழைத்து வரப்பட்டு ஆலோசனை கேட்கப்பட்டபோது கோயிலையும் அது இருக்கும் இடத்தையும் அது முன் இருந்த இடத்தையும் பார்வையிட்டு "ஒரு கோயிலை அது இருக்கும் இடத்திலிருந்து வேறு இடத்துக்கு மாற்றுவது குற்றம். ஆனால் மாற்றப்பட்ட கோயிலைப் பழைய இடத்துக்குக் கொண்டு செல்லுதல் முறையானதும் புண்ணியமானதுமாகும்" என்று குருக்கள் ஒரு கருத்தை முன்வைத்தார்.

இதற்கமைய கூட்டத்தில் கூடியிருந்தோரின் சம்மதமும் பெற்றுக் கொண்டு ஆலயத்தைப் பழைய இடத்துக்குக் கொண்டு வந்து புதிதாக அமைக்க முடிவெடுக்கப்பட்டது.

அதிபரின் அயராத சேவையின் முயற்சியால் ஆலயம் நிர்மாணம் பெற்றது.

சிவஞான வைரவர் ஆலயப் பொம்மைகள் தூபியை அலங்கரிக்க கலைகள் அழகு பொருந்த சோழர் காலத்துப் பாணியில் விமானம் கொண்ட கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் முதலியன கொண்டு 1989 ஆம் ஆண்டு ஆலயம் கல்லூரியின் வரலாற்றுடன் மிகவும் ஒரு புனிதத் தலமாகத் திகழ்வதற்கு அதே ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி குடமுழுக்கு விழா கொண்டாடப்பட்டது. காலங்கள் கடந்தாலும் இன்றும் கல்லூரியு டன் மிகவும் ஒன்றிணைந்து பல பல அற்புதங் களைச் செய்யும் சிவஞான வைரவர் மாணவர்கள் மனதில் ஒரு துணை நிற்கும் சக்தியாகத் திகழ்கின்றார்.

கல்லூரியின் ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும் வைரவப் பெருமான் துணை நிற்பதாகவே கொள்ளப்படுகிறது.

சமயப் பண்பாடுகள், கலாசாரங்கள், வழிபாட்டு முறைகள் மறைந்து கொண்டிருந்தாலும் யாழ். இந்துக் கல்லூரி வரலாற்றில் சிவஞான வைரவர் துணை நிற்கும்போது யாவும் பாதுகாக்கப்படுவதுடன் வழிகாட்டுபவராகவும் இருக்கின்றார் என்பதே திடமான ஒன்றாகக் கருதப்படுகிறது.

■ சோபனா

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் முகவர் நிறுனத்துக்கு நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

கொழும்பு,ஜன.9

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டுள்ளதாக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

மூன்று தசாப்தங்களாக நாட்டில் நீடித்த போரில் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் மேற்கொள்ளத் தவறியுள்ளது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சட்டத்துறை சார் நிபுணர்களுடன் ஆலோசனை செய்யப்பட்டு வருவதாக அமைச்சர் ரிசாட் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் இடம்பெயர்ந்து மீள் குடியமர்ந்தவர்களுக்கு தலா 25000 ரூபாவை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் வழங்கிய போதிலும், முஸ்லிம் மக்களுக்கு இந்த உதவி வழங்கப்படவில்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

போர் காரணமாக வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை மீள்குடியமர்த்துவது குறித்து ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்துடன் கடந்த இரண்டு ஆண்டுகளாக பேச்சு நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய இடம்பெயர் மக்களுக்கு வழங்கப்படும் நலன்கள் முஸ்லிம் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# கோத்தபாய-பசிலுக்கு இடையில் முரண்பாடு

## 'விக்கிலீக்ஸ்' தகவல்

கொழும்பு,ஜன.9

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர்களான கோதபாய ராஜபக்ஷவுக்கும் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் முரண்பாடு காணப்படுவதாக 'விக்கிலீக்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது. அதிக சந்தர்ப்பங்களில் இருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான பசில் ராஜபக்ஷவும், பாதுகாப்புச் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷவும் அதிக சந்தர்ப்பங்களில் பொது நிகழ்வுகளில் ஒன்றாகக் கலந்துகொள்வதில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் இருவரும் ஜனாதிபதிக்கு முரண்பட்ட ஆலோசணை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் துணை ராஜாங்கச் செயலாளரும், முன்னாள் இலங்கைக்கான அமெரிக்க தூதருமான ரொபர்ட் ஓ பிளக்கினால் இந்தத் தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணிகளுக்காக பசிலும், கோத்தபாயவும் இரு வேறு நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்களை வழங்க விரும்பியதாகக் கோரியுள்ளனர்.

இறுதியாக ஜனாதிபதி மஹிந்த ராஜக்ஷ, பசில் மற்றும் கோத்தபாய ஆகிய இருவரும் பரிந்துரை செய்த நிறுவனங்களுக்கு நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை ஆளும் கட்சியில் இணைத்துக் கொள்வதைக் கோத்தபாய விரும்பாத அதேவேளை, பசில் ராஜபக்ஷ விரும்பியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜே.வி.பியுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேண வேண்டுமென்பதே கோத்தபாயவின் விருப்பமாக அமைந்திருந்தது.

தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை பசில் ராஜக்ஷ கொண்டிருந்ததாகவும், இராணுவ ரீதியில் தீர்வு காணப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டை கோத்தபாய ராஜபக்ஷ கொண்டிருந்ததாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ச)

# அபராதம்

மஸ்கெலியா, ஜன.9

பாவனைக்குதவாத 32 கிலோ கோழி இறைச்சியைக் கொண்டுசென்ற குற்றச்சாட்டுக்காக ஹற்றன் நீதிமன்ற நீதிவான் சந்துன் வித்தான முன்னிலையில் குற்றத்தை ஒப்புக்கொண்ட நபருக்கு நீதிவான் 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக செலுத்துமாறு பணித்துள்ளார்.

மஸ்கெலிய பொது சுகாதார வைத்திய அதிகாரிக்கு உட்பட்ட பொது சுகாதார அதிகாரிகளான ஜீ.கே.எல். வசந்த, பி.ஏ.பாஸ்கரன், டி. வரத ராஜா,கோதாபதிரன, எஸ்.பி. வன்னியநாயக ஆகியோர் கடந்த வியாழக்கிழமை மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போதே இவர் கைதுசெய்யப்பட்டார். (ச)



திருகோணமலை சீனக்குடா விமானப் படைத்தளத்தில் அமைக்கப்பட்ட கோல்வ் மைதானத்தை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் சனிக்கிழமை திறந்துவைத்துள்ளார்.

# ஆலயத்தில் யானையின் அட்டகாசம்

அம்பாறை,ஜன.9

அம்பாறை மாவட்டத்திலுள்ள சங்கமன்கண்டி காட்டுப் பிள்ளையார் ஆலயத்துக்குள் நுழைந்த யானை ஒன்று ஆலயத்தையும் அங்கிருந்த பொருள்களையும் சேதப்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

ஆலய வளாகத்துக்குள் நுழைந்த யானை அங்குள்ள பூசைப் பொருள்கள், தளபாடங்கள் ஆகியவற்றைச் சேதப்படுத்தியுள்ளது.

இந்த ஆலயத்தில் கடந்த காலங்களிலும் யானைகள் நுழைந்து கட்டடங்களைச் சேதப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தமிழ் அகதிகளுக்க இலவச கடவுச்சீட்டு

கொழும்பு,ஜன.9

தமிழ் நாட்டிலிருந்து நாடு திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இலவசமாக கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்த ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தமிழ் நாட்டில் அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் சுமார் 90 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர். இவர்கள் நாடு திரும்புவதற்காக கடவுச் சீட்டை பெறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். தமிழ் நாட்டி லுள்ள இலங்கையின் துணைத் தூதரகத்தில் இலங்கை கடவுச்சீட்டைப் பெறுவதற்கு இந்திய நாணயப்படி 4 ஆயிரத்து 400 ரூபாவைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும்.

இந்தக் கட்டணம் குடிவரவு- குடியகல்வு சட்டத்தின் பிரகாரம் கட்டாயமாக செலுத்த வேண்டும்.

எனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய அவர்களுக்கு இந்த இலவச கடவுச்சீட்டுகள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

# மாணவர்கள் மீது தாக்குதல்; விசாரணை நடத்தக் குழு

கொழும்பு,ஜன.9

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப் பிரிவின் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் இருவர் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பல்கலைக்கழக வளாகப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மாணவர்கள் களுபோவில மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தை தவிர்ந்த ஏனைய அனைத்து பீடங்களும் கால வரையரையின்றி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்தப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் சத்தியாக்கிரக போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

பல்கலைக்கழக துணை வேந்தர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்தே இந்த சத்தியாக்கிரக பேராட்டம் ஆரம்பக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அமெரிக்காவின் அட்டகாசத்துக்கு ஒருபோதும் ஈரான் அடிபணியாது

மட்டக்களப்பு,ஜன.9

அமெரிக்காவின் அட்டகாசங்களுக்கு ஒருபோதும் ஈரான் அடிபணியாது என்று இலங்கைக்கான ஈரான் பதில் தூதர் முஅய்யித்தி தெரிவித்தார்.

காத்தான்குடிக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை சென்ற அவர், காத்தான்குடி அஸ் ஸஹ்றா கல்வி அபிவிருத்தி அமைப்பின் பிரதிநிதிகள் மத்தியில் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈரானை அமெரிக்கா அதன் காலடியில் மண்டியிட வைக்க முயற்சித்துப் பார்த்தது. ஆனால் அது அமெரிக்காவினால் முடியவில்லை. அமெரிக்கா செய்யும் அக்கிரமங்களை ஈரான் கேட்கும் போது ஈரானை அழிக்க முற்படுகின்றது.

ஈரானை உளவு பார்க்க வந்த அமெரிக்காவின் உளவு விமானத்தை ஈரான் தரையிறக்கி வைத்துள்ளதன் மூலம் ஈரானின் ஆத் மீகப் பலத்தை அனைவரும் தெளிவாக அறிந்து கொள்வர்.

ஈரானைப் பொறுத்தவரைக்கும் எந்தவொரு முஸ்லிம் நாட்டிலும் ஆதிக்கம் செலுத்த விரும்பவில்லை. அமரிக்காவுக்கு எதிரான ஈரானின் நடவடிக்கையை கண்டு முஸ்லிம் நாடுகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்ற நிலைமையை அண்மைக்காலமாக நாங்கள் பார்க்கின்றோம் என்றார். (ச)

# தீவிரமாகப் பரவும் டெங்குக் காய்ச்சல்

கொழும்பு,ஜன.9

நீர்கொழும்பு நகரில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

நீர்கொழும்பு நகரின் தெஹிமல்வத்தை, உடையார் தோப்பு, லாஸரஸ்வீதி, கடோல்கலே ஆகிய பிரதேசங்களில் அதிக எண்ணிக்கையானோர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

நீர்கொழும்பு வைத்திய சாலையில் ஆண்கள் விடுதியில் 28 பேரும் பெண்கள் விடுதியில் 22 பேரும் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட 3 பேர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்தவாரம் நீர்கொழும்பில் ஆறு வயதுடைய சிறுவன் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சுகாதார அமைச்சுடன் விசேட சந்திப்பு

கொழும்பு,ஜன.9

பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு சுகாதார அமைச்சின் செயலாளருடன் விசேட சந்திப்பு ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. இந்தச் சந்திப்பு இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இந்தச் சந்திப்பில் அரசவைத்தியர் சங்கத்துக்கு புதிய தலைவர் ஒருவரை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள குளறுப்படிகள் தொடர்பில் கலந்துரையாடப்படும். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக முகாம்களிலுள்ள இலங்கையருக்கு விடுதி

நெல்லை, ஜன.9

தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாம் களில் வசிக்கும் இலங்கை தமிழர்களின் குழந்தைகள், ஆதி திராவிடர், பிற்படுத்த பட்டோர், பழங் குடியினர் நலத்துறை களால் நிர்வகிக்கப்பட்டு வரும் மாணவ, மாணவிகள் விடுதிகளில் தங்கி, கல்வி கற்க தமிழர் அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் செயற்படுத்தப்படும் அனைத்து நலத்திட்டங்களும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கை தமிழர்களுக்கும் நீட்டிக்கப்படும்.

இலங்கைத் தமிழர்களின் குழந்தைகள் கல்வி பயிலத் தேவையான உதவிகள் வழங்கப்படும் என்று ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டது.

அதற்கிணங்க தமிழ கத்தில் உள்ள அகதிகள் முகாம்களில் வாழும் இலங் கைத் தமிழர்களின் குழந்தைகள் நலன் கருதி அவர்கள், ஆதி திராவிடர், பிற்படுத்த பட்டோர், பழங்குடியினர் நலத்துறை களால் நிர்வகிக்கப்பட்டு வரும் மாணவ, மாணவிகள் விடுதிகளில் தங்கிக் கல்வி கற்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இதற்காக தமிழகத்தில் உள்ள அனைத்து ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற் படுத்தப்பட்டோர் நலத்துறை விடுதி களில் கூடுதலாக 5 இடங்கள் ஒதுக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து நெல்லை ஆளுநர் செல்வ ராஜ் தெரிவித்ததாவது:

நெல்லை மாவட்டத்தில் உள்ள முகாம் வாழ் தமிழர்களின் பாடசாலை, கல்லூரி களில் பயின்று வரும் குழந்தைகள், பிற் படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் செயல் பட்டு வரும் விடுதிகளில்,விடுதி விதி களுக்கு உட்பட்டு தங்கி, பயில அனுமதிக் கப்படுவர்.

எனவே, முகாம் வாழ் தமிழர்களின் குழந்தைகள், இதற்காக விண்ணப்பித்து விடுதிகளில் தங்கி கல்வி பயிலலாம் - என் றார். (வ)

## சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதிச் சீட்டு

கலாசார முக்கோண வலயத் திலுள்ள தொல்பொருள் பெறுமதி மிக்க இடங்களை பார்வையிட வருகின்ற சுற்றுலாப் பயணி களுக்கு, புதிதாக அனுமதிச்சீட்டு விநியோ கிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய அனுமதிச் சீட்டுடன் இறுவட்டு ஒன்றையும் சுற்றுலாப் பயணிகளுக்கு விநியோகிக்கவுள்ளதாக மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் நிமல்.டி.சில்வா குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம் சீகிரியாவை பார்வை யிட வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு 30 டொலர்கள் பெறுமதியான அனுமதிச் சீட் டும், அநுராதபுரம் மற்றும் பொலனறுவைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு 25 டொலர்கள் பெறுமதியான அனுமதிச்சீட் டும் விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை கடந்த முதலாம் திகதி முதல் புதிய அனுமதிச் சீட்டுக்கள் விநி யோகிக்கப்பட்டு வருவதாக மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.


## தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

பதிவு: J/1591 06.03.1972

### பதவி வெற்றிடம்

1.பதவி: காசாளர்
1. சம்பள குறியீட்டு இல: 306/13
2. சம்பள அளவுத் திட்டம்: 9950 - 85 x 10 - 90 x 10 - 11700/= (66/2006 இன்படி) (சங்கம் வழங்கும் இதரபடிகளும்)
3. தகைமைகள்:
அ. கூட்டுறவுப் பணியாளர் 14ஆவது சம்பளத்திட்ட தொடர்பு பட்ட பதவியொன்றில் இரண்டு வருடங்களிற்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ.கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத் திட்ட பதவி யொன்றில் நான்கு (04) வருடங்களிற்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் சாதாரணதரம் சான்றிதழ் அல்லது க.பொ.த. சாதாரண தரம் எண்கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம்

அல்லது

கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04பாடங் களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றில் காசாளர் அல்லது வியாபார நடவடிக்கைகள் பற்றி இரண்டு வருடங்களிற்கு குறையாத அனுபவம்.
கணினி அறிவும், திறனும் இருத்தல் வேண்டும்.

4. வயது: 18-45

2.பதவி: எழுதுநர்
1. சம்பள குறியீட்டு இல : 302/14
2. சம்பள அளவுத் திட்டம்: 9700 - 80 x 10 - 85 x 10 - 11350/= (66/2006 இன்படி) (சங்கம் வழங்கும் இதரபடிகளும்)
3. தகைமைகள் (166/88 திருத்தம்)

அ. கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத்திட்ட தொடர்பு பட்ட பதவியொன்றில் இரண்டு வருடங்களிற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத் திட்ட எழுது நர் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களிற்கு குறையாத அனு பவம்.

அல்லது

ஆ.க.பொ.த. (சாதரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட் பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்திய டைந் திருத்தல் வேண்டும்.
கணினி அறிவும், திறனும் இருத்தல் வேண்டும்.

4. வயது: 18-45

* சங்கம் கோரும் பிணையை ரொக்கமாகவும் ஆதனமாகவும் செலுத்த வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.
* கூட்டுறவுச் சங்கத்திலிருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்கள் சங்கத் தின் ஊடாக விண்ணபிக்க வேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
* சங்க எல்லைப்பகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.
* விண்ணப்பப்படிவத்துடன் கல்வி தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் என்பவற்றின் போட்டோப்பிரதி இணைத்தல் வேண்டும்.
* விண்ணப்பப்படிவங்கள் யாவும் பொதுமுகாமையாளர், தெல்லிப் பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், புகை யிரதநிலைய வீதி, மல்லாகம் என்ற முகவரிக்கு 19.01.2012 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல்வேண்டும்.
* கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிகள் எழுதப்படல் வேண்டும்.
* பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் தகுதியில்லாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும்.

புகையிரத நிலைய வீதி, பொது முகாமையாளர்
மல்லாகம்.

(சி/7572) (45 - 6-7)


## இலங்கையர் தற்கொலை

அகதி அந்தஸ்த்து நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழர் ஒருவர் நெதர்லாந் தில் தற்கொலை செய்துள்ளார்.

இலங்கையில் இடம் பெற்ற யுத்தத்தில் இருந்து தம்மைப் பாதுகாக்க மக்கள் புலம்பெயர்ந்து சென்றாலும், அந்தநாட்டினால் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அகதி தஞ்சம் கோரி விண்ணப்பித்த நிலையில் கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக நெதர்லாந்தில் வசித்து வந்த இராஜரட்ணம் குஞ்சுப்பிள்ளை என்பவருக்கு வதி விட அனுமதி நிராகரிக்கப்பட்டது.

அவரை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்காக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, கடந்த டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி தற்கொலை செய்துள்ளார். இவர் பருத்தித்துறையைச் சொந்த இடமாகக் கொண்டதுடன் குறிப் பிட்ட காலமாக இந்தியாவில் அகதியாக வசித்து வந்தவர். இவரது மனைவி புற்று நோயால் பாதிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத் தக்கது. (வ)

## ஜேர்மனியில் இலங்கையர்கள் மூவர் கைது

இலங்கை அகதிகள் என்று சந்தேகிக் கப்படும் மூன்று ஆண்கள் ஜேர்மன் டோர் பின் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

போலிக் கடவுச் சீட்டைக் காண்பித்து பயணிக்க முயற்சித்த காரணத்தால் இவர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதே வேளை கைது செய்யும்போது ஒருவர் தப்பி ஓடி யுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட மூவரின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ள போதும், அதன் உண்மைத் தன்மையை அதி காரிகள் உறு திப்படுத்த வில்லை. இவர் கள் இலங்கையர்கள் என்று கூறப்பட்டபோதும், இந்திய கடவுச் சீட்டே வைத் திருந்ததாகக் கூறப்படுகிறது. (வ)


### தேவை

சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு ஆள் தேவை. (35 வயதுக்கு உட்பட்டவர்கள்) (பழக விரும்புவோரும் தொடர்பு கொள்ள வும்.)

சாவகச்சேரி. தொடர்பு: 0775494251

### வீடு உடன் விற்பனைக்கு

அமைதியான சூழலில், 6 பரப்பு 6 குளியில் பண்டாரக்குளம், நல்லூர் மேற்கு வீதியில் சகல வசதிகளுடைய இல. 25 இல் அமைந்துள்ள காணியும் வீடும் தரமான பெறுமதி எதிர்பார்க் கப்படும். தரகர் சேவை தேவையில்லை.

தொடர்பு: 0774146298

### அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

மீசாலை காட்டுவளவு, நெல்லியடி கந்தசுவாமி ஆலய பரிபாலன சபை அங்கத்தவர்



*சின்னத்துரை அருமைநாயகம்*

அவர்கள் கடந்த 05.01.2012 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உயர்திரு. ஏ.ஏ.துரைராஜா முன்னிலையில் ''அகில இலங்கை சமாதான நீதிவானாக'' பதவிப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

பரிபாலன சபை,
மீசாலை காட்டுவளவு,
நெல்லியடி கந்தசுவாமி ஆலயம்.

(12821)(5,6,7)

### பாராட்டும் வாழ்த்தும் உரித்தாகுக



கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவியாகிய

செல்வி **கீர்த்திகா கணேசமூர்த்தி**

2011 ஆம் ஆண்டு அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே நடை பெற்ற ஆங்கிலதினப் போட்டியில் பங்குகொண்டு தரம்-9 வகுப்புக்குரிய ஆங்கில உறுப்பெழுத்துப் போட்டியில் முதலாம் இடம் பெற்றுத் தேசிய மட்டத்தில் சாதனை படைத்துள்ளார்.

இவர் கல்வி உலகில் மேலும் மிளிர இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

கல்விச் சமூகம்,
கிளி/இந்துக்கல்லூரி.

(C/7506)(5,6,7)

### கல்லூரி வரலாற்று நாயகனை வாழ்த்துகிறோம்



புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் அண்மைக்கால வரலாற்றில் 2011 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் 3A தர சித்தி பெற்று (மாவ.நிலை 18) சாதனை செய்த குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கைச் சேர்ந்த தனீஸ்வரன்-காஞ்சனா தம்பதியரின் செல்வப் புதல்வன்

*தனீஸ்வரன் நிரோஜன்*

அவர்களை இறைவன் திருவருளுடன் மேலும் பல உயர்வுகள் பெற்று நல முடன் பல்லாண்டு வாழ வாழ்த்து கின்றோம்.

உற்றாரும், உறவினர்களும்.

(12767)(5,6,7)

### வெளிநாட்டு பொதிகளிற்கான மாபெரும் விலைச் சலுகை 01.01.2012 - 15.01.2012

10 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் UK 625 /- Germany 710/= France 765/=

மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.

குறிப்பு :- 25Kg - 100 Kg வரையான ... 450/= மட்டுமே

**Arrul Global Express**
International Courier & Cargo Service
T.P : 021 222 6113


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அசாதாரண காலநிலை. மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## உயர்தரப் பெறுபேறுகள்

**மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.**

**வர்த்தகப் பிரிவு**

சேனாதிராசா கோபிகா - ஏபிசி, தங்கவேல் டக்ஷி - ஏ 2சி, துரைராஜசிங்கம் மிதுலா - 2 பி சி,

**கலைப்பிரிவு**

சந்திரபாலன் சசிகலா - 2ஏசி, அழகேஸ்வரன் செந்தீபன் - ஏ2பி, சிவலிங்கம் விஜிதா - ஏ 2பி, விக்ரர் கஜன் - ஏ 2 சி, அனுலா பாலசிங்கம்- ஏ, 2சி, மரியதாஸ் டொறிற்ரா ஜஸ்மின் -ஏ, 2சி துரைசிங்கம் சுவர்ணியா ஏ, 2சி, சிறிசிவாதரன் லயன்ஸ் றீக்கா - ஏசிஎஸ், ஜெயக்குமார் நிலாஜினி - 2ஏ எஸ், அருமைத்துரை அனுசியா - 2 பி சி, வசந்தகுமார் நிஷாயினி - 2 பி சி, மாணிக்கராஜா தீபிகா - 2 பி சி, செல்வநாயகம் நிதர்சன் 2 பி சி, கந்தசாமி உஷாயினி - பி 2 சி, தனனாதன் பிரபோதரன் - பி 2 சி.

**மல்லாகம் மகா வித்தியாலயம்**

**கலைப்பிரிவு**

காந்தரூபன் யசோதினி - 3 ஏ, தனபாலசிங்கம் இந்துகா - 2 ஏ பி, சத்தியநாதன் மயுரதன் - ஏ 2 சி, யோகானந்தம் விமலதாஸ் - ஏ 2 பி, கிருஷ்ணமூர்த்தி சுகன்யா- 3 பி, சிவஞான கீதம் அமிர்தவாகிணி - 2 பி சி, விக்டர் இம்மானுவேல் சிந்துஜா ஏ பி சி, பரமநாதர் குபேரன் 2 பி சி, கணேஸ்வரன் நிரேசன் - ஏ2 சி, சிவனேசன் சாளினி - 2 பி சி, கணேந்திரன் அனுசியா - 3பி, நாகரத்தினம் டிலக்சன் - ஏ 2சி, கருணேஸ்வரன் வினோபா - ஏ 2பி, கணபதிப் பிள்ளை தர்சிகா - 2பி சி, செல்வராசா தனுசியா - பி 2சி.

**கிளி / பிரமந்தனாறு மகா வித்தியாலயம்**

தர்மலிங்கம் ஷயந்தினி- ஏ2பி, ரவிச்சந்திரன் இலங்கேஸ்- ஏ பி சி, குணரத்தினம் சிந்துஜா- ஏ பி எஸ், தம்பு கௌசன் 2பி எஸ், செல்லையா சுகிர்தா- பி சி எஸ், முருகையா கிறிஸ்பாபு- ஏ 2எஸ், தவராசா பிரசாந்தினி- பி 2 எஸ், காசிலிங்கம் நிதர்சனா- பி 2எஸ், ஜெயராசா ஜெசினா- பி 2எஸ், (ந-86)

# கிராம அலுவலலரின் கடமை குறித்து சுற்று நிருபம்

யாழ்ப்பாணம், ஜன.9

கிராம அலுவலர்களின் கடமை சம்பந்தமாக அண்மையில் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் வெளியிடப் பட்ட சுற்று நிருபத்தில் கிராம அலுவலர்கள் தமது கடமைகளை நாளாந்தம் காலை 8.30மணியிலிருந்து முற்பகல் 11.30 மணிவரை ஆற்றவேண்டும் அதுமட்டு மன்றி கிராம சேவகர்களுடைய ஓய்வு நாள் மற்றும் புதன் கிழமை களில் பகுதி நாள் கூட்டங்களுக் குச் செல்வது தவிர்ந்த ஏனைய 5 நாள்களும் கடமையில் ஈடுபடவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் சுற்று நிருபத்தில், வெளிக்கள வேலைகள் இல்லாதுவிட்டால் மீண்டும் தமது கடமைகளை மேற்கொள்வதற்கு வசதியாகப் பிற்பகல்வரை தமது அலுவலகத்தில் இருத்தல் வேண்டும் என மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சுற்று நிருபம் தற்போது அனைத்துப் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர்களின் அலுவலகங்கள், மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ந-86)

# இலக்கிய விழாவில் வெற்றி பெற்றோருக்குக் கௌரவிப்பு

கடந்தவருடம் நடத்தப்பட்ட அரச இலக்கிய விழாப் போட்டிகளில் வெற்றி பெற்ற வர்களுக்கான விருது வழங்கும் விழா எதிர்வரும் 24 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொழும்பிலுள்ள தேசிய நூதனசாலை கலந்துரையாடல் மண்டபத்தில் கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சி.பி ஏக்க நாயக்க தலைமையில் இடம் பெறவுள்ளது.

கட்டுரை, சிறுகதை, பாடல் ஆக்கம், விவரணம், கவிதை ஆகிய துறைகளில் தேசிய ரீதியில் வெற்றி பெற்றவர்களுக்கு கலை கலாசார அமைச்சரால் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு என இடம்பெற்ற போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

கனிஷ்ட பிரிவில் தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தைச் சேர்ந்த செல்வி க.கலையரசிக்கு விருது வழங்கி கௌரவிக் கப்படவுள்ளது. அத்துடன் சிரேஷ்ட பிரிவில் கட்டுரை ஆக்கத்தில் மூன்றாம் இடத்தை பளை மத்திய கல்லூரி மாணவி செல்வி விமலச்செல்வி திருச்செல்வம் பெற்றுள்ளார். அதே பிரிவில் கவிதை ஆக்கத்தில் இரண்டாம் இடத்தைப் பளை மத்திய கல்லூரி மாணவி செல்வி வனிதா தவராஜா பெற்றுள்ளார், கவிதையில் மூன்றாம் இடத்தை வட இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி ரேணுகா ரவிந்திரன் பெற்றுள்ளார்.

கவிதை பாடலில் சிரேஷ்ட பிரிவில் யாழ்.புனித அந்தோனியார் கல்லூரி மாணவன் பொய்லீன் சுரேஸ்குமார் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

திறந்த பிரிவில் நாட்டார் கலையில் முதலாம் இடத்தை கரவெட்டியைச் சேர்ந்த தங்கலீலா கந்தசாமி பெற்றுள்ளார்.

விவரணத்தில் இரண்டாம் இடத்தை புங்குடுதீவைச் சேர்ந்த சிவகுமார் பிரசாந் பெற்றுள்ளார்.

சிறுகதையில் முதலாம் இடத்தை செல்வி ரகசனா நவரத்தினம் பெற்றுள்ளார். பாடல் ஆக்கத்தில் இரண்டாம் இடத்தை மேரிகா அருளானந்தம் பெற்றுள்ளார்.

(வ-319)

## திருவாசக முற்றோதல்

வடமராட்சி, ஜன.9

அல்வாய் கிழக்கு, மாலிசந்திப் பிள்ளையார் கோயிலில் இன்று திங்கட்கிழமை காலையில் நடைபெறும் விசேட பூசையைத் தொடர்ந்து திருவாசகம் முற்றோதப்படும். (வ-236)

* * *

வடமராட்சி, ஜன.9

கற்கோவளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலில் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெறும் விசேட பூசையைத் தொடர்ந்து திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. முற்றோதலைத் (வ-236)

* * *

அளவெட்டி முதலியவேள் ஆலயத்தின் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்ப உறுப்பினர்களின் குணம் அறிந்து செயற்படுவீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். வெறுத்தவர்கள், விரும்பி வந்து சேருவர். சாமர்த்தியாகப் பேசி, சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பாராத பண வரவுகளைப் பெறலாம். உங்களைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

**இடபம்:** என்னதான் கவனமாக இருந்தாலும், சில விடயங்களில் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆள்படலாம். சிலரிடம், உங்களின் மனக் குமுறல்களைக் கொட்டித் தீர்ப்பீர்கள். வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். நினைத்தது நடக்க வேண்டும் என்று இறை வழிபாட்டை மேற்கொள்வீர்கள். செலவு அதிகரிக்கும்.

**மிதுனம்:** நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர், உங்களைத் தேடி வரலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளால், அவதிப்படலாம். மற்றவர்கள் மத்தியில், உங்களைப் பெரிய ஆளாகக் காட்டிக் கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். சில வேலைகளை தாமதமாக ஆரம்பித்தாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள்.

**கடகம்:** பேராசைகளைத் தவிர்க்க வேண்டும். நீங்கள் பெருமையாக நினைத்த ஒருவர், அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். வியாபாரிகள் அகலக்கால் வைக்காமல், முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். சிறிய வேலை ஒன்றுக்காக, கணிசமான பணத்தைச் செலவிடலாம். குடும்ப உறுப்பினர்கள் இடையே, வாக்குவாதங்கள் ஏற்படும்.

**சிங்கம்:** ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில், பணவரவுகளைப் பெறலாம். உறவினர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். முக்கிய விடயம் ஒன்றைப் பற்றி, சிலருடன் ஆலோசனைகளில் ஈடுபடலாம். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள்.

**கன்னி:** வெறுப்பு, விரக்தி விலகி எதிலும் உற்சாகம், தெம்புடன் செயற்படுவீர்கள். அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்து முடிப்பீர்கள். பல நாள்களாக கற்பனை வடிவில் இருந்த ஒரு காரியம், இன்று செயல் வடிவம் பெறலாம்.

**துலாம்:** திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டு, அவதிப்படலாம். பிள்ளைகள் கல்வி விடயத்தில், அதிக அக்கறை காட்டுவீர்கள். நினைத்துப் பார்க்காத சம்பவம் ஒன்று நடக்கலாம். அரசியல்வாதிகள் மேலிடத்தின் ஆதரவைப் பெறுவர். நண்பர் ஒருவர், தக்க நேரத்தில் உதவி செய்து, உங்களின் மனதில் இடம் பிடிப்பார்.

**விருச்சிகம்:** வாக்குவாதங்களை, பரிகாசப் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டிய நாள். சில விடயங்களில் வேகமாக இறங்கிவிட்டு, பின்னர் ஏண்டா இதைச் செய்தோம் என்று கவலையடைவீர்கள். வாய்ப்புகள் கைநழுவிச் செல்லலாம். திட்டமிட்ட வேலை ஒன்றை, குறிப்பிட்ட நேரத்துக்கு முடிக்க முடியாமல் அவதிப்படலாம். எதிர்ப்புகள் உருவாகும்.

**தனுசு:** வருமானத்தை அதிகரிக்கும் வழிகளில் நாட்டம் செல்லும். நண்பர்களுடன் கூட்டாகச் சேர்ந்து மேற்கொண்ட முயற்சிகளில், வெற்றி கிடைக்கும். சொந்த பந்தங்கள் விடயத்தில், பரிவுடன் நடந்து கொள்வீர்கள். பால்ய நண்பர்களைச் சந்தித்து பழங்கதைகள்பேசி மகிழ்வீர்கள். சிலரிடம் நல்லவர் போல நடித்து, காரியம் சாதிப்பீர்கள்.

**மகரம்:** விருந்தினர்களை உபசரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். நண்பர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். சூழ்நிலைக்கு ஏற்ற வகையில், சில விடயங்களில் நடந்து கொள்வீர்கள். உறவினர் ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்பீர்கள்.

**கும்பம்:** எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். சிக்கலாகி விடுமோ என்று பயந்த காரியம் ஒன்று, எளிதாக முடிவுக்கு வரும். பெண்கள், வீண் செலவுகளைச் செய்யலாம். ஒருவரிடம் கடனாகக் கொடுத்த பணம், திடீரென திரும்பி வரும். பணிபுரிவோர், மேலதிகாரிகள் சொல்லும் வேலைகளை மறந்து, அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம்.

**மீனம்:** உங்கள் மூலம் உறவினர்கள் சிலர், காரியம் சாதித்துக் கொள்ள முற்படுவர். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த வேலை ஒன்றில், சிறிய அளவில் பலன் கிடைக்கலாம். திட்டமிட்ட பயணங்களை மாற்றி அமைக்கலாம். கடன் மிகுதிகளைக் கேட்டு வாங்குவீர்கள். நண்பர்களுக்குத் தெரிந்த ஒருவர், உங்களுக்கும் அறிமுகமாகலாம். அலைச்சல் கூடும்

**நாளை**

மார்கழி 25 செவ்வாய்க்கிழமை 10.01.2012
திதி: பிரதமை பி.ப. 01.34 வரை
நட்சத்திரம்: பூசம் பி.இ. 06.23 வரை
சுபநேரம்: 11.03 - 12.33வரை,
ராகு காலம்: 03.33 -05.03 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | | | | 5 | |
| 3 | 6 | 4 | | | 5 | | 2 | |
| | 8 | | 3 | 7 | | 4 | | |
| | 5 | | 1 | 8 | | | | |
| 7 | | 3 | 5 | | 2 | 9 | | 8 |
| | | | | 9 | 3 | | 1 | |
| | | 8 | | 6 | 1 | | 7 | |
| | 3 | | 8 | | | 6 | 4 | 2 |
| | 2 | | | | | | | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும்கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## SLAS (OPEN) வகுப்புகள்

இடம்:
''சாந்தியம்'' 8/1, கற்பகவிநாயகர் வீதி, யாழ்ப்பாணம்.
(கச்சேரியடியிலிருந்து 200 m தொலைவில் கச்சேரி நல்லூர் வீதியில்)
காலம்:
**13.01.2012 & 14.01.2012**
(காலை 8.00 மணி - பி.ப. 5.00 மணி)

| Date | 8:00 a.m.- 10:00 a.m. | 8:00 a.m.- 10:00 a.m. | 1:00 p.m.- 3:00 p.m. | 3:10 p.m.- 5:00 p.m. |
|---|---|---|---|---|
| 13.01.2012 | Gen. Intelligence | Essay & Precise | Gen. Knowledge | Mgt. Aptitude |
| 14.01.2012 | Mgt. Aptitude | Gen. Intelligence | Essay & Precise | Gen. Knowledge |

அதி திறமை வாய்ந்த சிரேஷ்ட இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் விவேகமான பொறியியலாளர்கள் ஆகியோர்களால் இப்பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படும். (கட்டணம் அறவிடப்படும்.)
தொடர்பு: **0773078881, 0778392261, 0718474195**


**TITUS** துருப்பிடிக்காத ஸ்ரீல் தண்ணீர் போத்தல்கள்
தண்ணீர் குடிப்பதற்கு உகந்ததல்லாத அலுமினியம் போத்தல்களுக்கு ஏமாறாதீர்கள்.
www.titusstores.com
டயிட்டர்ஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை 2439422 லிபேட்டி பிளாஷா

## இலவச வகுப்பு

2011 க.பொ.த சாதாரண சங்கீத பாட செயல்முறை பரீட்சைக்கான வகுப்பு இலவசமாக கிழமை நாள்களில் பி.ப.4 மணிக்கு நடைபெறுகிறது.
இடம்: தெல்லிப்பழை காசிநாதர் கோயில்
சு.வரதராஜசர்மா,
பாலர் ஞானோதய சபைத் தலைவர்.

## DIPLOMA IN NURSING (3 years)

HOLY CROSS SCHOOL OF HEALTH SCIENCE
விண்ணப்ப முடிவு திகதி : 31.01.2012
கற்றை நெறிக் கட்டணம் : 750 /=
க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தி யடைந்தவர்கள் விண்ணப்பங்களைத் திருச்சிலுவை சுக நல நிலையம் 767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குச் சுய விலாசமிடப் பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும். பணிப்பாளர் 021 3001102


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 23.06.1934 மறைவு: 22.12.2010



**திருமதி அருளம்பலம் இராசம்மா**

திதி: பிரதமை

வருடங்கள் ஒன்றானபோதும் - உம்
நினைவுகள் மட்டும் எம்மைவிட்டு அகலவில்லை
அன்பாலும் கனிவான பேச்சாலும்
எம்மை அரவணைத்தீரே அம்மா
பிரகாசமான வாழ்க்கைக்கு வித்திட்டீரே
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்கள் அன்புக்கு ஈடாகுமா?
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அருளானந்த வாசா,
இணுவில் தெற்கு,
சுன்னாகம். (12796)(5,6,7,10)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள்.

## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் கிழக்கு - கோப்பாய்
பிரதேச செயலர் ம. பிரதீபன்
அவர்களின் அன்பு மாமன்
**சுப்பிரமணியம் தம்பிராசா**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக குடும்பம்
பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு - கோப்பாய். (12818)(6,8,9)

## கண்ணீர் அஞ்சலி



எங்கள் கல்லூரியின் ஆசிரியை
திருமதி சுபாஜினி சிறிகாந்தன்
அவர்களின் அன்பு மிக்க தந்தை
**சுப்பிரமணியம் தம்பிராசா**
அவர்களின் அமரத்துவச் செய்தி கேட்டு சிந்துகின்றோம் கண்ணீர் செலுத்துகின்றோம் அஞ்சலி.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.
கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி,
கிளிநொச்சி. (12814)(6,8,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை ஆசிரியர் சங்கத்தினர் அடையாள வேலை நிறுத்தம்

## நாடு முழுவதும் எதிர்வரும் 17 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜன.9

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் சம்பள உயர்வு கோரி எதிர்வரும் 17ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கமும் பூரண ஆதரவை வழங்கவுள்ளது.

இந்தத்தீர்மானம்வெள்ளிக்கிழமை கொழும்பு நாவல திறந்த பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இதில் நாட்டிலுள்ள அனைத்து சங்கங்களும் கலந்து கொண்டன.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் கலாநிதி எஸ்.ஐங்கரன் கருத்துத் தெரிவிக்கையில்:

வரவு - செலவுத் திட்டத்தில் பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்படவேண்டும் என்று எமது சங்கம் பலமுறை வலியுறுத்தி இருந்தபோதிலும் அந்தக் கோரிக்கை அரசினால் நிறைவேற்றப்படவில்லை. இதனை கண்டிக்கும் முகமாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இந்த அடையாள வேலை நிறுத்தம் பற்றிய முடிவை நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் எடுத்திருந்தது. இதற்கு எமது யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கமும் பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றது - என்றார். (ஒ-319)

# கச்சாய் வீடொன்றில் திருடிய 5 பேருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜன.9

சாவகச்சேரி கச்சாயில் வீடொன்றில் வருடப் பிறப்பு அன்று இரவு நகை, பணம் திருடிய மற்றும் திருட உதவி வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களை சாவகச்சேரி நீதிமன்றம் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

கச்சாய் வீதி மூன்றாவது ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் 9 லட்சத்து 45 ஆயிரம் ரூபா நகை, பணம் திருடிய மற்றும் உதவி வழங்கிய இரு பெண்கள் உட்பட ஐந்து பேருக்கே நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கினை நேற்று விசாரித்த நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா சந்தேகநபர்கள் ஐந்துபேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எ-207)

# இளைஞர் சேவைகள் அலுவலர்கள் நியமனம்

வலி.வடக்கு, ஜன.9

வடமாகாண இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகங்களுக்கு 13 புதிய அலுவலர்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அமைச்சால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் மகரகமவில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் அமைச்சால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நியமனங்களை தேசிய இளைஞர்கள் சேவை மன்ற அமைச்சர் டலஸ் அழகப்பெருமாள் வழங்கினார்.

யாழ்.மாவட்டத்தில் 5 பேர், கிளிநொச்சி மாவட்டத்தில் 3 பேர், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவர், வவுனியா மாவட்டத்தில் 2 பேர், மன்னார் மாவட்டத்தில் 2 பேருமாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக இந்த மாவட்டங்களில் இளைஞர்கள் சேவை மன்ற அலுவலர்கள் இன்மையால் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது புதிய தேசிய இளைஞர்கள் சேவை மன்ற அலுவலர்கள் நியமனம் பெற்றுள்ளதன் மூலம் இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகள் அபிவிருத்தி அடையக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம- 86)

# பல்கலை கல்விசாரா ஊழியரும் தொழிற்சங்க நடவடிக்கையில்

தமது சம்பளப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்கப்படாத பட்சத்தில் எதிர்வரும் 17ஆம் திகதியின் பின்னர் பெரும் தொழிற்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ளனர் என பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்கத்துடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது என பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் விஜயதிலக ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அதேபோன்று கல்விசாரா ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும்போது தொழிற்சங்கத்தின் கருத்துக்களை உள்வாங்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவிக்கையில், கடந்த வெள்ளிக்கிழமை கல்விசாரா ஊழியர்களின் சம்பளம் தொடர்பிலான சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டது. இந்தச் சுற்றறிக்கை உரிய தரத்தை கொண்டிருக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதால் அது தொடர்பான சில திருத்தங்களை மேற்கொள்ளப்படவுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

# ஓய்ந்தது மழை பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன, 9

மழையால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பருத்தித்துறை வீதியின் அகலிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் மழை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட இந்தப் புனர் நிர்மாணப் பணிகள் மீண்டும் இந்த வாரத்தில் ஆரம்பிக்கப்பட்டு துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

கோப்பாய் பூதர்மடத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த வீதி அகலிப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் துரித கதியில் கோப்பாய் பிரதேச செயலகம் வரைக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

இந்தப் புனர்நிர்மாணப் பணிகள் இம்மாதத்திற்குள் கோப்பாய் சந்திக்கு நெருங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கோப்பாய் சந்தியில் இருந்து இருபாலைச் சந்தி வரைக்குமான வீதியின் இருபக்கமும் அகலித்து புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணியில் நூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ம - 17)

## மரண அறிவித்தல்

### வேலாயுதம் சுப்ரமணியம்

(நாதஸ்வர வித்துவான்)



சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கு, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் - சுப்ரமணியம் நேற்று (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெகதாம்பாளின் பாசமிகு கணவரும், இராஜேஸ்வரி நாகேஸ்வரி, முருகதாஸ் (தவில் வித்துவான், ஆஸ்திரேலியா), ராதா (லண்டன்), பானுமதி, கமலதாஸ் (மிருதங்க வித்துவான்) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் காலஞ்சென்ற முருகானந்தம் (நாதஸ்வர வித்துவான்), ஸ்ரீஸ்கந்தராஜா (நாதஸ்வர வித்துவான்), சிவகௌரி, மகேசன், விக்னேஸ்வரன், கீர்த்தனா ஆகியோரின் அன்பு மாமனும் ஜீவாகரன் (லண்டன்), பிரபாகரன் (ஆஸ்திரேலியா), கஸ்தூரி, நந்தகோபன் (பிரான்ஸ்), மதுராங்கி, விஷ்ணுவர்த்தன் (ஜேர்மனி), ராகவர்த்தனி, மதுரஞ்சனி, கிரிதரன், அபிராமி (லண்டன்), கரிக்சிசன் (லண்டன்), கரிகரன், சரண்யா, ஆதிரன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான நடராஜா, பூரணம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நாதஸ்வரமேதை N.R. கோவிந்தசாமி, தவில் மேதை N.R.சின்னராஜா மற்றும் நாதஸ்வரவித்துவான் N.R.சந்தான கிருஷ்ணன் காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, செல்லம்மா மற்றும் சத்தியபாமா, சாரதாம்பாள், வேதநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2012) திங்கட்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனத்திற்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
4ஆம் மைல், இணுவில் மேற்கு, இணுவில். மனைவி, மக்கள்.

## செய்தித்துளிகள்

### கடலில் மூழ்கிப்பலி

மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற இளைஞன் கடலில் மூழ்கிப் பலியானார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் பேருவல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கடலில் மூழ்கிப் பலியான இளைஞன் 29 வயதுடையவர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### இவ்வாரம் புதிய சுற்றுநிருபம்

மரக்கறி போக்குவரத்தின்போது பிளாஸ்ரிக் கூடைகளை பயன்படுத்துவது தொடர்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட புதிய சுற்றுநிருபம் இவ்வாரம் வெளியிடப்படவுள்ளது என நுகர்வோர் சேவைகள் அதிகார சபை அறிவித்துள்ளது.

இம்மாதம் 15 ஆம் திகதிக்கு பின்னர் அந்த மரக்கறி மற்றும் பழ வகைகளை பிளாஸ்டிக் கூடைகள் இன்றி ஏற்றிச்செல்லும் நபர்களைச் சுற்றிவளைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் கூறியுள்ளார்.

### ரயில் பெட்டிகள் குத்தகைக்கு

பொருள்களை ஏற்றிச்செல்லும் ரயில் பெட்டிகளை குத்தகை அடிப்படையில் தனியார் துறையினருக்கு வழங்குவதற்கான திட்டமொன்று செயற்படுத்தப்படவுள்ளது என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக ஏற்கனவே விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க கூறியுள்ளார்.

### சட்டவிரோத கருங்கல் உடைப்பு

காடுகளுக்குள் சட்டவிரோதமாக கருங்கல் உடைப்பவர்களை கைது செய்வதற்கான சுற்றிவளைப்புக்கள் இடம்பெறுகின்றன என மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சிலருக்கு எதிராக ஏற்கனவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என அதிகார சபையின் தலைவர் சரித ஹேரத் தெரிவித்தார்.

### வீடு விற்பனைக்கு

[illegible]
[illegible] விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0714624084

## மரண அறிவித்தல்கள்

### வன்னித்தம்பி வைரவநாதன் (டேவிட்)

கீரிமலை, கருகம்பனையைப் பிறப்பிடமாகவும், நிரந்தர வதிவிடமாகவும், ஜீவ ஒளி மிஷன் மாகியம்பதி, சண்டிலிப்பாயைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வன்னித்தம்பி வைரவநாதன் நேற்று (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கப்பூர் ஓய்வூதியக்காரரான வன்னித்தம்பி- பொன்னுப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற புஷ்பமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கஜானனன் மற்றும் புகழினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜ்குமாரின் அருமை மாமனாரும் லோகன், விக்ரோறியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (09.01.2012) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கந்தரோடை ஜீவ ஒளி மிஷனுக்கு அருகில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜீவ ஒளி மிஷன்,
கந்தரோடை,
சுன்னாகம்.

தகவல்:
போதகர் - யோசுவா
சிவகுமார் குடும்பத்தினர்.

### யோசப் டயஸ் றெஜினோல்ட் (டீன் மாஸ்டர்)



கொய்யாத்தோட்டம், புது வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் டயஸ் றெஜினோல்ட் நேற்று (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சாமிநாதன் யோசப் (வித்துவான்) மற்றும் அருள்மணி தம்பதியரின் அன்பு மகனும் எமிலியானஸ், அன்ரன், றாயன், செல்வா, காலஞ்சென்றவர்களான வசந்தக்குமார், ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சோபனா, பபித்தா ஆகியோரின் மைத்துனரும் சிந்தி, ஜொசி, றெக்ஸ், தம்பி ஆகியோரின் சிறிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (10.01.2012) செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பரி.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
1/14, 1ஆம் ஒழுங்கை, புது வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
அருள்மணி (தாய்),
அன்ரன் (சகோதரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

சோடா போத்தல்களை வாகனங்களில் ஏற்றி இறக்குவதற்கு வேலையாள்கள் தேவை.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,**

ஓட்டுமடம் சந்தி,
யாழ்ப்பாணம்.

தொ.இல.: **021-2225595**


## கண்ணீர் அஞ்சலி

*திருமதி சிவசுப்பிரமணியம் சிவயோகம்*



எமது சனசமூக நிலைய வளர்ச்சிக்குதவும் பத்மநேசன், டென்மார்க்கில் வசிக்கும் கனகராஜா, குபேந்திரன், பேரின்ப நாதன், கங்கா ஆகியோரின் அன்புத் தாயும், பிரசாந்தின் பேர்த்தியுமான

**திருமதி சிவசுப்பிரமணியம் சிவயோகம்**

அவர்களின் மறைவு (04.01.2012) எமக்கு ஆழ்ந்த கவலையை உண்டாக்கியுள்ளது.

அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகம்,
தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலையம்.

(12822)(5,6)

## மரண அறிவித்தல்



**திருமதி பொன்னுத்துரை பகவதி**

சிறுவிளான், இளவாலையைப் பிறப்பிடமாகவும், தாவடி, பாடசாலை வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை பகவதி 07.01.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், லலிதாதேவி, நிர்மலாதேவி, மல்லிகாதேவி, கமலபோதினி, காலஞ்சென்ற பாக்கியலட்சுமி மற்றும் மாலினி (இந்தியா), வளர்மதி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தாயும், பிலிப்பானந்தம், அல்பிறட், காலஞ்சென்ற சச்சிதானந்தம், தேவராசா, சிவசுப்பிர மணியம், சிறிவரதராஜா (பிரான்ஸ்) நிஷாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2012) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தாவடி,
பாடசாலைவீதி, கொக்குவில்.

(12816) (45-8-7)

## மரண அறிவித்தல்



## சிவலிங்கம் சிவபாலன்

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சி.சிவபாலன் 07.01.2012 சனிக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தம்பையா சிவலிங்கம்-காலஞ்சென்ற கேதீஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வரும், சிவரூபன், வசந்தி, சிவகாந்தன், வசீகரன், சிறீதரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆனந்தகுமார், விமலாஞ்சிலி, வசந்தி (விஜி), பத்மகுமாரி (வசந்தி), கலாநாயகி (மீனா) ஆகியோரின் மைத்துனரும், நிலோஜா, டக்சிகா ஆகியோரின் அன்பு மாமனும், நிரோஷன், பிரணவன், சிவகேஷ், அனுஷியா, நிலானுஜா, அபினாஷ், அபிநயா, அன்ஷியா, அஜேய், அதீஷன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.01.2012 செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை காடாகடம்பை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

### ஆணைக்குழுவை நியமிக்குக

வர்த்தகர்களிடம் அமைச்சர் மேர்வின் சில்வா கப்பம் பெறுவதாக களனி பிரதேசசபை அங்கத்தவர்கள் குற்றம் சுமத்தியுள்ளதுடன், இதுதொடர்பாக ஆராய்வதற்கு விசாரணைக் குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளனர்.

அமைச்சர் மேர்வின் சில்வா சம்பந்தப்பட்ட ஊழல்களை நிரூபிப்பதற்கு அனைத்து ஆவணங்களும் என்னிடம் உண்டு. அதை எந்த ஆணைக்குழுவிடமும் சமர்ப்பிப்பதற்கு நான் தயாராகவுள்ளேன் என களனி பிரதேசசபைத் தலைவர் பிரசன்ன ரணவீர தெரிவித்தார்.

### நாங்கள் விழிப்பாக...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தை ஊடகங்களோடு செலவிடுகிறார்கள்?

* வீட்டில் பெரியவர்களுக்குத் தெரியாமல் சிறுவர்கள் தொலைக்காட்சி மற்றும் இணையம் பாவிக்கும் வாய்ப்பு உள்ளதா?
* பிள்ளைகளை ஊடகங்களின் செல்வாக்கில் இருந்து பாதுகாத்துக் கொள்ள என்ன செய்யலாம்?
* சிறுவர்கள் கவனமாக நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்வதற்கு ஊக்கப்படுத்த என்ன செய்யலாம்?
* பெரியவர்களும் சிறுவர்களும் சேர்ந்து ஒரு ஊடகத்தை பார்ப்பதற்கும் அதைப் பற்றிக் கதைப்பதற்கும் விமர்சிப்பதற்கும் எப்படி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்?
* சிறுவர்கள் ஊடகங்களோடு செலவிடும் நேரத்தை எப்படி மட்டுப்படுத்தலாம்?

பிள்ளைகள் ஊடகங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க முயற்சித்தல் எதிர் மறையான விளைவுகளைக் கொடுக்கும். எனவே அவர்களுக்கு முடிந்த வரையில் எதனைப் பார்க்கலாம், எது பயனுள்ளது என்பதற்கான நகல்களை அதாவது மொடல்களைக் காட்டவேண்டும். அதைவிட முக்கியமானது பெற்றோரும் அதைப் பார்க்க வேண்டும்.

எப்போதும் மனிதர்களுடன் இணைந்து செயற்படுகின்ற செயற்பாடுகளை ஊக்கப்படுத்த வேண்டும். சிறுவர்களின் வாழ்விடங்களில் இலத்திரனியல் ஊடகங்கள் இல்லாத இடங்களை அதிகளவு உருவாக்க வேண்டும்.

தொலைக்காட்சி அல்லது ஏதாவதொரு மின்னியல் ஊடகத்தைப் பிள்ளை பராமரிப்புக் கருவியாகப் பெற்றோர் பயன்படுத்துவதை முதலில் தவிர்க்க வேண்டும். குறிப்பாக இரண்டு வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள் அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். அவ்வாறு பார்க்கின்ற பிள்ளைகளின் மொழி வளர்ச்சியும் மூளை வளர்ச்சியும் குறைவாக உள்ளதாக ஆய்வுகள் சுட்டுகின்றன. எப்போதும் சிறுபிள்ளைகள் பெற்றோர் மற்றும் உறவுகளுடன் ஊடாடுவதே வளர்ச்சிக்கு உதவும்.

ஊடகங்களில் இருந்து எம்மைப் பாதுகாத்தல் என்பது மிகப்பெரிய பணி. அதனை தினம் தினம் விழிப்போடும் அறிவோடும் இருந்தே சாதிக்க முடியும். பாடசாலைகளில் ஊடக விழிப்புக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் சிறந்த ஆக்கபூர்வமான விளைவைப் பெறுவதற்கான வாய்ப்பாக அமையும். கல்வியாளர்களும் கல்வித் திணைக்களமும் இதற்கான ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுக்க வேண்டும்.


## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து வழங்கப்பட்ட No. 1 பிறிமா புறொயிலர் பேட்டுக் குஞ்சுகள் (12.01.2012) வியாழக்கிழமை விநியோகிக்கப்படும் முன் பதிவு செய்யவும். தொடர்பு:

01. நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் - 021 222 6944
02. நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் றோட், அம்பாள்குளம், கிளிநொச்சி - 077 6225944

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் எழுத, [illegible] By:
ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, சண்டிலிப்பாய்
[illegible] சண்டிலிப்பாய்.
T.P.:0776751649


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை**
(ஓய்வு பெற்ற தபால் உத்தியோகத்தர், பளை)
(திதி: மார்கழி பௌர்ணமி (09.01.2012)

மலர்வு: 22.02.1924

உதிர்வு: 20.12.2010

*ஆண்டு ஒன்று மீண்டபோதும்*
*உங்கள் எண்ணங்களோ எம் உள்ளங்களில்*
*ஊர் ஊராய் இடம்பெயர்ந்த வேளையில்*
*உற்றதுணையாய் வழிப்படுத்தி எம்மை*
*காத்திட்ட அன்பு ஐயாவே*
*எம் உயர்வுக்காய் உழைத்து இளைத்தீர்களே!*
*நீங்கள் காட்டிய வழியில் எங்கள்*
*பயணம் தொடர விண்ணிலிருந்து*
*ஆசி தாருங்கள் ஐயா!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கச்சார்வெளி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.


*நிரந்தர முகவரி:*
*இத்தாவில் - பளை*

*தற்காலிக முகவரி:*
*டச்றோட் (வாகையடிச் சந்தி)*
*மீசாலை மேற்கு, மீசாலை.*

**குடும்பத்தினர்**

(சி/2305) (45-7-6)

## கண்ணீர் அஞ்சலி



சூரி போட்டோ உரிமையாளர்

**ஜோண் யேசுதாசன்**

அவர்கள் காலமான செய்தி கேட்டு மிகுந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

**நெல்சன் டிஜிட்டல் வீடியோ - போட்டோ**
108, பழைய பூங்கா வீதி. சுண்டுக்குளி
**ரஜீவன் வீடியோ அன்ட் போட்டோ**
25/2, மத்திய கிழக்கு வீதி, குருநகர்.
**ஜெனி டிஜிட்டல் வீடியோ**
42/1, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
**பொபி ஸ்ருடியோ**, குருசோ வீதி, சுண்டுக்குளி.

## மரண அறிவித்தல்

**சின்னத்துரை கண்ணகைப்பிள்ளை**



நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கண்ணகைப்பிள்ளை கடந்த (06.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம், வசைராணி, சுசீலா, காலஞ்சென்ற சாந்தகுமார் மற்றும் சுகுணா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் சரோஜினிதேவி, குழுந்தைவேலு, ராசா, வேல்அழகன் (கனடா) ஆகியோரின் மாமியும் பாலசரோஜா கிருபாகரன், பாலசுரேஸ், பிரபாகரன், சுதாகரன், கிருபாகரன் (தினக்குரல்), வசீகரன், சுபாஜினி (பிரான்ஸ்), பரமேஸ்வரன் (பிரான்ஸ்), இராசகுமார், தர்சினி, பாதுசன் (கனடா), அஸ்வினி (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் பொபின்தன் (பிரான்ஸ்), நிருஜா (பிரான்ஸ்), சுபிட்ஸா, றிசிகேசி, யசிகேசி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மடத்தடி, நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.*


*தகவல்:*
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தங்கக் கிண்ணம் வென்றது பற்றிமா வி.க.

யாழ்ப்பாணம், ஜன.9

திருகோணமலை மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்கான ஆண், பெண் இருபாலாருக்கும் இடையிலான மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் இரு பிரிவுகளிலும் திருகோணமலை பற்றிமா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.




முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் திருகோணமலை பற்றிமா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மூதூர் அபிராமி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

மூன்றுசெற்களைக்கொண்ட ஆட்டத்தில் திருகோணமலை பற்றிமா விளையாட்டுக்கழக அணி நேர் இரு செற்களை 25:18, 25:17 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டியது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் திருகோணமலை பற்றிமா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கந்தளாய் ரன.சம. நல விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் திருகோணமலை பற்றிமா விளையாட்டுக்கழக அணி 25:19, 25:17, 23:25, 15:08 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டிச் சம்பியனானது.

இறுதியாட்ட நிகழ்வுக்கு திருகோணமலை நகர சபைத் தலைவர் கே.செல்வராஜா பிரதம விருந்தினராகவும் திரு கோணமலை கரப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் உமா சுதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (ம-23)



ஜப்பானிய கராத்தே நிபுணரின் பயிற்சி செயலமர்வு பங்களாதேஷ் மற்றும் தாய்லாந்தின் முன்னாள் தேசிய கராத்தே பயிற்றுநரும் ஜப்பானிய கராத்தே நிபுணருமான சிகான்.கிரோஸி ஒட்டாவால் அண்மையில்கொழும்பில் நடத்தப்பட்ட சோட்டோக்கான் செயலமர்வில் கலந்துகொண்ட யாழ். பிரதம ஆசிரியர் சென்செய் அன்ரோ டினேஸ், பயிற்சி ஏற்பாட்டாளர் சென்செய். டி.எம்.டி.நிமல் ஆகியோருடன் நினைவுச் சின்னத்துடன் சிகான் கிரோஸி யையும் படத்தில் காணலாம்.

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி



யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்.உதைப்பந்தாட்ட லீக் அங்கத்துவ கழங்களுக்கு இடையேயான 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டிக்கான போட்டி நிரல் ஒழுங்கு தயாரிக்கும் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அரங்கில் இடம் பெறவுள்ளது.

கழகங்களின் பிரதிநிதிகளை சமுகம் தருமாறு போட்டிக் குழுத் தலைவர் எஸ். சுரேந்திரன் அறிவித்துள்ளார். (ம-23)

* * *

திருகோணமலை, ஜன.9

திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது. மேற்படி போட்டியானது எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்று போட்டி ஏற்பட்டாளர் தெரிவித்துள்ளார். (ம-23)

## உடற்கல்வி ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல்

வடமராட்சி, ஜன.9

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையில் இடம் பெற்ற 2012 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவ லகத்தில் இடம்பெறவுள்ளது.

வடமரட்சி வலயத்துக்கு உட்பட்ட உடற்கல்வி ஆசிரியர்கள், மற்றும் விளையாட்டுத்துறை பெறுப்பாசிரியர்களைத் தவறாது சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள் ளது. (ம-23)

## உதைபந்தாட்ட லீக்குக்கு புதிய நிர்வாகம்

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குக்கான 2012 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த வாரம் இடம்பெற்றது. பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள் ளனர்.

தலைவர் - ந. நவரத்தினராஜா, உபதலைவர் - ப.பத்மநாதன், செயலாளர் - ப.பிரதீபன், பொரு ளாளர் ந.யோகலிங்கம், உபசெயலாளர்- எஸ்.குமணன். (ம-23)

## போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே 2012 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளது. அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்கள் தங்களது விவரங்களைப் பூரணப்படுத்தி எதிர்வரும் 18 ஆம் திகதி முன்னர் கோப்பாய் விளையாட்டு உத்தியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை போட்டி தொடர்பான கலந்துரையாடல் மற்றும் போட்டிக்கான ஒழுங்கு நிரல் தயாரிக்கும் நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை செயலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (ம-23)

# வெற்றிக்கிண்ணம் வென்றது புதிய பாரதி வி.க.



கிளிநொச்சி, ஜன.9

ஜனாதிபதி வெற்றிக் கிண்ணத்துக்காக கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் கிளிநொச்சி பாரதிபுரம் புதிய பாரதி விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கிளிநொச்சி அம்பாள்குளம் இளம் தென்றல் விளையாட்டுக் கழகமும் பாரதிபுரம் புதிய பாரதி விளையாட் டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் 3:1 என்ற அடிப்படையில் புதிய பாரதி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

முதல் இரண்டு சுற்றுக்களை புதிய பாரதி விளையாட்டுக்கழகம் 25:16, 25:17 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்ற போதிலும் மூன்றாவது சுற்றையும் முதல் சுற்றுக்களைப்போல் வெற்றி பெறலாம் என எதிர்பார்த்து விளையாடிய புதிய பாரதி விளையாட்டுக்கழகத்துக்குப் பெரும் ஏமாற்றமான நிலையில் நம்பிக்கையுடன் விளை யாடிய இளம் தென்றல் விளையாட்டுக் கழகம 25:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

நான்காம் சுற்றைச் சந்தித்த இரு கழகங்களும் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் புதிய பாரதி விளையாட்டுக்கழகம் முதலில் விட்ட தவறை நிவர்த்தி செய்து மோதிக் கொண்ட நிலையில் 25:18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து சம்பியன் கிண்ணத்தைப் புதிய பாரதி விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது.

## 19 வயதுப் பிரிவு கிரிக்கெட் சமநிலையில் முடிந்தது

யாழ்ப்பாணம், ஜன.9

ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையில் இடம் பெற்ற 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி சம நிலையில் முடிவடைந்தது.

நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் இடம் பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி ஸ்கந்த வரோதயக் கல்லூரியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

அதற்கமைய முதலாவது இனிங்சுக்காக ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 55 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிரேஷன் ஆட்டம் இழக்காமல் 39 ஓட்டங்களையும் தேவராகன் 29 ஓட்டங்களையும் ஜனக்ஸ் 22 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்களான வதுசனன் 21 ஓவர்கள் பந்து வீசி 45 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் டர்வின் 9.5 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இனிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 57 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சௌமிதரன் 47 ஓட்டங்களையும் கபிலன் 15 ஓட்டங்களையும் கோகுலன் 26 ஓட்டங்களையும் நிரேச் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி வீரர்களான குமுதன் 15 ஓவர்கள் பந்துவீசி 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சிந்துஷன் 8 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சஞ்ஜயன் 10 ஓவர்கள் பந்து வீசி 40 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் துவேஷன் 4.3 ஓவர்கள் பந்து வீசி எதுவித ஓட்டங்களையும் வழங்காது 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். தனது இரண்டாவது இனிங்சுக்காகத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி 63 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்களான நிஷாந்த றூபன் 17 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 5 விக் கெட்டுக்களையும் கோகுலன் 18.1 ஓவர்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 4 விக் கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

77 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி யெனத்துடுப் பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 21 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்ற போது ஆட்ட நேரம் முடிவடைந்ததால் ஆட்டம் சமநிலையடைந்தது. (ம-23)

## தைப்பொங்கல் தினத்தன்று பத்து மைல் மரதன் ஓட்டம்

வடமராட்சி, ஜன.9

தைப்பொங்கல் தினத்தை ஒட்டி அல்வாய் கிழக்கு மைக்கல் விளையாட்டுக் கழகம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தைப்பொங்கல் தினத்தன்று காலை 6.30 மணிக்கு பத்து மைல் மரதன் ஓட்டப் போட்டியை நடத்தவுள் ளது.

மாலி சந்தியிலிருந்து அல்வாய் வடக்கு நாவலடி, பருத்தித்துறை ஓராங் கட்டைச் சந்தி, மந்திகை, கலிகைச் சந்தி, நெல்லியடி, வதிரிச் சந்தை ஊடாக மீண்டும் மாலி சந்தியை அடை [illegible] டுள்ளது. இந்த மரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் யாழ். மாவட்ட வீரர்கள் கழகத்துடன் தொடர்பு கொண்டு போட்டியில் பங்குபற்றலாம் என மைக்கல் விளையாட்டுக்கழக நிர்வாகக் குழு தெரிவித்துள் ளது. (ம-236)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கூடுகிறது வாய்ப் பேச்சு குறைகிறது விளையாட்டு!

தமது அணி தொடர்பான விமர்சனங்களுக்கு மத்தியில் டேர்பனில் இடம்பெற்ற டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் வெற்றி பெற்றமை அழிக்க முடியாத ஒன்றென இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் சி.எம்.டில்ஷான் கூறியுள்ளார்.

முரளி ஓய்வு பெற்ற பின்னர் இலங்கைக்கு வெளியே இலங்கை அணியால் டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற முடியாது என்று அனைவரும் எண்ணியிருந்தாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் தமது அணியால் அதனை செய்ய முடியும் என்று அனைவராலும் தற்போது புரிந்து கொள்ள முடியும் எனவும் டில்ஷான் கூறியுள்ளார்.

எனினும் மூன்று ஆட்டங்களை கொண்ட இந்த தொடரில் இரண்டுக்கு ஒன்று என்ற ஆட்டக்கணக்கில் இலங்கை அணி தொடரை இழந்திருந்தது. அணியாக இந்த தோல்விக்கான பொறுப்பினை தாம் ஏற்றுக் கொள்வதாக கேப்டவுணில் நிறைவடைந்த மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தின் பின்னர் டில்ஷான் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் ஓரணியாக இணைந்து சிறந்த முறையில் பந்துவீசியமையே ஆட்டத்தில் வெற்றிபெற காரணம் என்று தென்னாபிரிக்க அணித் தலைவர் கூறியுள்ளார். அனைத்து பந்துவீச்சாளர்களும் சிறப்பான முறையில் செயற்பட்டதன் காரணமாக இலங்கை அணிக்கு அழுத்தம் கொடுக்க முடிந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதன்மூலம் 2008 ஆம் ஆண்டிற்கு பின்னர் சொந்த மண்ணில் வைத்து டெஸ்ட் கிரிக்கெட் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (15)

தமது அணியால் எதனையும் செய்ய முடியும் என்று அனைவராலும் தற்போது புரிந்து கொள்ள முடியும் என்று வாய்ச்சவடால் பேசும் டில்ஷான் தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி தென்னாபிரிவுக்கு எதிரான ஆட்டத்தில் தொடரை இழந்திருக்கிறது.

## நாங்க பூஜை நடத்துவோம்!


இலங்கை கிரிக்கெட்டின் புதிய தலைவராக பதவியேற்றுள்ள உபாலி தர்மதாஸ, தீய ஆவிகளை விரட்டுவதற்காக விசேட பூஜையொன்றை ஏற்பாடுசெய்துள்ளார்.

இலங்கை அணி கடந்த வருடம் ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் மாத்திரம் வெற்றி பெற்றிருந்தது. வீரர்களுக்கு ஏப்ரல் முதல் டிசெம்பர் வரை சம்பளம் வழங்கப்படவும் முடியாத நெருக்கடியை இலங்கை கிரிக்கெட் சபை எதிர்நோக்கியது. இவ்வாறான பின்னணியிலேயே இந்தப் பூஜையை அவர் நடத்த ஏற்பாடு செய்தார்.

''நான் ஒரு வர்த்தகர். இத்தகைய தீய ஆவிகளின் தாக்கம் எனக்கு நன்றாகத் தெரியும்'' என்று எக்ஸ்பிரஸ் ட்ரிபியுனிடம் தர்மதாஸ தெரிவித்துள்ளார்.


அதேவேளை, இலங்கை கிரிக்கெட்டின் நிதி நெருக்கடி குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், இது வெறும் பணச்சுழற்சி பிரச்சினைதான் என்றார். இலங்கை கிரிக்கெட் நிறுவனம் 7 மில்லியன் ரூபா கடனில் இருப்பதாகச் செய்திகள் வெளியாகின. எனினும் ஜூலை மாதம் இந்திய அணியுடனான ஆட்டங்களை நடத்தும்போது 15 மில்லியன் டொலர் கிடைக்கும் என்று உபாலி தர்மதாஸ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சேவை வழங்குநர்கள் அனைவருக்கும் அவர்களுக்கான கொடுப்பனவுகள் காலக்கிரமத்தில் வழங்கப்படும் என்று ,தான் உறுதியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (15)



இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் சி.எம்.டில்ஷான்

# இந்திய வீரர்கள் வெறும் காகிதப் புலிகளே!



## ஆஸி. அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி மோசமாக விளையாடி வருகிறது. இது குறித்து ஆஸி. ஊடகங்கள்....

### 'ஆஸ்திரேலியன் அசோசியேட் பிரஸ்'

காகித அளவில் பார்த்தால், இந்திய டெஸ்ட் அணியின் துடுப்பாட்ட படை, இதுவரை பார்த்திராத அளவில் அஞ்சத்தக்க வகையில் இருந்தது. ஆனால் உண்மையில் இவர்களுக்கு வயதாகிவிட்டது. அனுபவம் பயனற்றதாகி விட்டது.

டிராவிட், சச்சின் 39 வயதை நெருங்குகின்றனர். லக்ஸ்மன் 37 வயதில் உள்ளார். இவர்களை வைத்து தான் சமீபத்தில் இங்கிலாந்து மண்ணில் இந்திய அணி மோசமாகத் தோற்றது. தற்போது ஆஸ்திரேலிய தொடரில் பின்தங்கியுள்ளது. இவையெல்லாம் ஏதோ கெட்ட செய்தியை உணர்த்துகின்றன. சம்பியன் வீரர்கள் அதிகம் நிறைந்திருப்பது எப்போதும் அணிக்கு ஆபத்தைத் தான் தரும். இந்த மும்மூர்த்திகள் தவிர, சேவாக், அணித்தலைவர் டோனியும் சமீபத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை.

இந்திய அணி முதலிடத்தை இங்கிலாந்திடம் இழக்கும் முன், இந்த மூத்த வீரர்கள் பெரிய இணைப்பாட்டம் அமைத்து அணியின் வெற்றிக்கு கை கொடுத்தனர். இப்போது அதுபோல நிகழவில்லை. இவர்களது வயது குறித்து கேள்விகள் எழுகின்றன.

### 'சிட்னி மோர்னிங் ஹெரால்ட்'

சிட்னி மைதானம் இந்திய அணிக்குக் கைகொடுக்கும் என்று மிகைப்படுத்தப்பட்ட வதந்தி இருந்தது. நான்காம் நாள் ஆட்டத்தின் உணவு இடைவேளைக்குப் பின்னும் சச்சின், லக்ஸ்மன் களத்தில் இருந்த போது, இந்திய அணி மீண்டு விடும் என்ற நம்பிக்கை இருந்தது. சச்சின், லக்ஸ்மன் வெளியேறிய பின், மற்ற வீரர்கள் வழக்கம் போல போவதும் வருவதுமாக இருக்க, கிளார்க்கின் மடியில் வெற்றி விழுந்தது.

### 'த ஆஸ்திரேலியன்'

கிளார்க், சச்சினின் ஒரு இலக்கை மட்டும் தான் வீழ்த்தினார். இது ஐந்து இலக்குகள் எடுத்ததற்கு சமம். எப்போது சச்சின் ஆட்டமிழந்தாரோ, அது மற்ற வீரர்களின் வெளியேற்றத்துக்கான வாசல் கதவைத் திறந்து விட்டது.

### 'ஹெரால்ட் சன்'

பெரிய துடுப்பாட்ட படை கொண்ட இந்திய வீரர்களை, நான்கு நாள்களில் வீழ்த்தி, இரு வாரத்தில் இருமுறை ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது பாராட்டுக்குரியது. அணித்தலைவர், முதல் நாளில் 300 ஓட்டங்கள் எடுக்கிறார். மறுநாள் சச்சினின் இலக்கை வீழ்த்தி, 100 ஆவது சத சாதனையை தடுக்கிறார். இவர் அணித்தலைவராக இனி செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை.

## "சும்மா ஊரச் சுத்திராங்கப்பா...."

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் 2 டெஸ்ட் ஆட்டத்திலும் இந்திய அணி படுதோல்வியை சந்தித்துள்ளது. இந்த நிலையில் கவாஸ்கர் கூறுகையில், ஆஸ்திரேலியாவில் இந்திய வீரர்கள் போதுமான அளவு பயிற்சிகள் மேற்கொள்ளவில்லை.

முதல் டெஸ்ட் ஆட்டம் 4 நாட்களில் முடிந்தது. அதன்பிறகு கூட இந்திய வீரர்கள் பயிற்சியில் கவனம் செலுத்தவில்லை. மாறாக வெளியில் ஊர் சுற்றுவதிலேயே கவனம் செலுத்தியுள்ளனர். என்ன நினைப்பில்தான் வீரர்கள் உள்ளனர் என்பது தெரியவில்லை.

வலுவான அணியை எதிர்கொள்ளும்போது அடுத்தடுத்து தொடர்ச்சியாக பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் மெத்தனமாக இருக்கிறார்கள். இந்திய கிரிக்கெட் சபையும் போதுமான பயிற்சி ஆட்டங்களுக்கு ஏற்பாடு செய்யவில்லை.

அதிகளவிலான ஒரு நாள் ஆட்டங்களில் இந்திய அணி பங்கேற்கிறது. அதுவும் பந்துகள் எழும்பாத மைதானத்தில் தான் நடக்கிறது. அப்படி ஆடிவிட்டு ஆஸ்திரேலிய ஆடுகளத்திற்கு தகுந்தவாறு உடனே துடுப்பாட்டத்தில் மாற்றம் செய்வது வீரர்களுக்கு சிரமம்தான்.- என்றார். (15)

## நாடு திரும்புகிறார் திலான்!



தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடரில் இலங்கையின் சார்பில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரரான திலான் சமரவீர நாடு திரும்பவுள்ளார். இந்தத் தொடரில் அவர் 2 சதங்கள் உட்பட 339 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் தென்னாபிரிக்காவுடனான ஒரு நாள் ஆட்டங்களுக்கான அணியில் அவர் சேர்க்கப்படவில்லை. இதனால் அவர் தாயகம் திரும்பவுள்ளார்.

இலங்கை- தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்காவின் ஏபி டி வில்லியர்ஸ் மாத்திரமே திலான் சமரவீரவை விட அதிக ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. டி வில்லியர்ஸ் ஒரு சதம் உட்பட 353 ஓட்டங்களைப் பெற்றார்

71 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ள திலான் சமரவீர 5022 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். எனினும் 53 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடியுள்ள அவர் 42 இன்னிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடி ,2 சதங்கள் உட்பட 862 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுள்ளார்.

இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடர் எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (15)

## நீங்கள் இனி வேண்டாம்...

இந்திய பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) ஐந்தாவது தொடர் எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி முதல் மே 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. ஒவ்வொரு அணியும் ஏனைய அணிகளை தலா இரு தடவைகள் எதிர்த்தாடவுள்ளன. 12 அல்லது 13 மைதானங்களில் இந்த ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.முதலாவது ஆட்டமும் இறுதி ஆட்டமும் சென்னையில் நடைபெறவுள்ளது. இதேவேளை இலங்கையில் இந்த ஆட்டங்கள் எதுவும் நடைபெற மாட்டாது. இந்தத் தொடரின் சில ஆட்டங்களை இலங்கையில் நடத்துமாறு இலங்கை கிரிக்கெட் சபை விடுத்த கோரிக்கை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இலங்கை அணி வீரர்கள் ஐ.பி.எல் ஆட்டத்தில் பங்குபற்றுவார்கள் என்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது. [illegible] நிறைவடைந்து 12 நாட்களில் ஐ.பி.எல். சுற்றுத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இந்த [illegible] காலத்தில் 3 சர்வதேச சுற்றுத் தொடர்களும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திரைகளில் புலிகளில் சின்னங்கள்; ஆராயுமாறு கோருகிறது இலங்கை

கொழும்பு,ஜன.9
பிரான்ஸ், கனடாவை அடுத்து பிரிட்டனிலும் விடுதலைப் புலிகளின் சின்னங்களுடனான அஞ்சல் தலைகள் வெளியாகியிருப் பதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரிட்டனில் விடுதலைப் புலிகளின் தலைவரின் உருவப்படத்துடன் அஞ்சல் தலைகள் வெளியாகியுள்ள போதிலும், இவை பிரிட்டனின் அஞ்சல் துறையான றோயல் மெயிலின் அங்கீகாரம் பெற்றவையா என்பது தெளிவாகவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இதையடுத்து பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்திடம் இதுபற்றிய விவரங்களைக் கோரியுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் இந்த அஞ்சல் தலைகளை வெளியிடுவதில் தமிழீழ விடுதலை மாணவர் அமைப்பே பின்னணியில் இருந்துள்ளது. எனினும் பிரிட்டனில் புலிகளின் அஞ்சல் தலைகள் வெளியானது தொடர்பான தகவலை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகம் மறுத்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நூல் வெளியீடு



சுகவாழ்வுக்கான நிலையத்தினால் திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலை யகத்தில் இடம்பெற்ற 5ஆவது 'தேடும் சிட்டுகள் சிறுவர்' சஞ்சிகை வெளியீடு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. தேடும் சிட்டுக்கள் சஞ்சிகையின் முதற்பிரதியை நந்தவனம் சிறுவர் கழக அங்கத்தவர் எஸ்.நிதர்சனிடம் இருந்து பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமலமரித்தியாகிகள் சபையின் வடமாகாண முதல்வர் அருட்தந்தை ம.போல் நட்சத்திரம் அடிகளார் பெற்றுக் கொள்கின்றார். (23)

## விசாரணைகள் ஸ்தம்பிதம்

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் அமரர் லசந்தவிக்ரமதுங்க படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஸ்தம்பித நிலையில் காணப்படுகின்றது என்று அவரது பாரியார் சொனாலி விக்ரமதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 17 பேர் கைது செய்யப்பட்ட போதிலும் பின்னர் அவர்கள் விடுதலைசெய்யப்பட்டனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். லசந்த படுகொலைச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் எந்தவித மான கருத்துக்களையும் இதுவரையில்வெளியிடவில்லை என்று அவர் மேலும் தெரிவித் தார். (ச)

## இராஜதந்திரிகளை அழைக்கிறது இலங்கை

கொழும்பு,ஜன.9
சர்வதேச அரங்கில் நாட்டுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட போது அமைதி பேணிய இலங்கை இராஜதந்திரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

நாட்டுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டபோது அவற்றுக்கு எதிராக குரல் கொடுக்காத தூதர்கள் இலங்கைக்கு மீள அழைக்கப்படவுள்ளனர்.

தமிழ் புலம்பெயர் மக்களின் பிரசார நடவடிக் கைகளை முறியடிப்பது தொடர்பில் இலங்கை இரா ஜதந்திரிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டு உரிய முறையில் நடவடிக்கை எடுக்காது விடுதலைப்புலி ஆதரவாளர்களின் பிரசாரங்களுக்கு இடமளித்த இராஜதந்திரிகளே இவ்வாறு மீள அழைக்கப்படவுள்ளனர்.

சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் சந்தர்ப்பங்களில் இலங்கைத் தூதுவர்கள் அதற்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டுமென அரசின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உரிய முறையில் எதிர்ப்பை வெளியிடாது மௌனம் காத்த சில இராஜதந்திரிகள் மீள அழைக் கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (ச-சி)

## விசாரணைக் குழு நியமிக்கப்பட வேண்டும்

வர்த்தகர்களிடம் அமைச்சர் மேர்வின் சில்வா கப்பம் பெறுவதாக களனிப் பிரதேச சபை அங்கத்தவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இதுதொடர்பாக ஆராய்வதற்கு விசாரணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு களனி பிரதேச சபைத் தலைவர் பிரசன்ன ரணவீர ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார். களனி பிரதேச சபையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேர்வின் சில்வா சுந்தப்பட்ட ஊழல்களை நிரூபிப்பதற்கு அனைத்து ஆவணங்களும் என்னிடம் உண்டு. அதை எந்த ஆணைக் குழுவிடமும் சமர்ப்பிப்பதற்கு தயாராகவுள்ளேன் என்று அவர் தெரிவித்தார். (ச)

## வில்பத்து சரணாலயம் பார்வையாளர்களுக்கு

கொழும்பு,ஜன.9
வில்பத்து தேசிய சரணாலயத்தில் மிருகங்களைப் பார்வையிடுவதற்காக இதுவரையில் அனுமதியளிக்கப்படாதிருந்த 150,000 ஹெக்ரேயர் நிலப் பகுதி சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்காக திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் சுற்றுலா பயணிகள் இதுவரையில் பயணிக்காத வடபகுதியில் சுற்றுலா பயணிகளுக்கான வசதிகளைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தந்திரிமலை பிரதேசத்தின் ஊடாக வில்பத்து தேசிய சரணாலயத்திற்குள் நுழைவதற்கான புதிய 100 கிலோ மீற்றர் வீதி, பார்வையாளர் மத்திய நிலையங்கள், வாகனத் தரிப்பிடங்கள் மற்றும் சேதமுற்றுக் காணப்படும் 20 குளங்களும் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளன.

வில்பத்து வடக்கு பிரதேச நுழைவாயில் அடுத்த மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்துவிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் நடராஜா (பூத்திரை)



யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நடராஜா (03.01.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராசம்மாவின் அன்புக் கணவரும் மற்றும் சின்னராஜா, சின்னக்கிளி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகம்மா, தனபாலசிங்கம், குணபாலசிங்கம்(லண் டன்),காலஞ்சென்ற மல்லிகா சுவேந்திரா (ஜேர்மனி), தங்கேஸ்வரி (வவா-லண்டன்),சுவந்தி (ஜேர்மனி), தயா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சறோஜினி தேவி, ஜெனிற்றா (லண்டன்), துரைசிங்கம் (ஜேர்மனி), சிவரஞ்சிதம் (லண்டன்), தனபாலசிங்கம் (பிரான்ஸ்), ஜெயபாலன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும் கஜித் (லண்டன்), கஜன், கறீஸ், காமீன்ஸ், கொட்வின் (லண்டன்), மெர்லீன் (லண்டன்), துயின் (ஜேர்மனி), றஜீத் (ஜேர்மனி), துஜிதா (ஜேர்மனி), றஜிதா (ஜேர்மனி), பொஸ் (ஜேர்மனி), அகஸ்னா (லண்டன்), நிறோஜித் (லண்டன்), மிசேல் (லண்டன்), பர்னபா (ஜேர்மனி), தேபோரா (ஜேர்மனி), யோனா (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும் செமேயாவின் (லண்டன்) பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (09.01.2012) திங்கட் கிழமை ஜேர்மனியில் நடைபெறும். அன்று பகல் ஒரு மணிக்கு அன்னாரின் நல்லடக்க ஆராதனை 41/16, செம்மணி வீதி, நாயன்மார்கட்டில் அமைந்துள்ள மகனின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41/16, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

தகவல்:
(12596)(2-6-7) தனபால்சிங்கம் (மகன்)

## மரண அறிவித்தல்

### செல்வி யோகேஸ்வரி விநாசித்தம்பி



(ஓய்வுபெற்ற பட்டதாரி ஆசிரியை, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

தெகிவளையைப் பிறப்பிடமாகவும் இலக் கம் 44, சப்பல் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி விநாசித்தம்பி யோகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை) 07.01.2012 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் செல்வி விநாசித்தம்பி யோகபூசணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), விநாசித்தம்பி யோகேஸ்வரன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்களுக்காக இன்று (09.01.2012) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.44, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்-
செல்வி விநாசித்தம்பி- யோகபூசணி
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

**விசேட இலவச கருத்தரங்கு**

08.01.2012
உதயனின் 13
ஆம் பக்கத்தில்
பிரசுரமான
மேற்படி
விளம்பரத்தில்
கருத்தரங்கு
இன்றும்
நாளையும்
(9, 10- திங்கள்,
செவ்வாய்)
நடைபெறும்.

**தொடர்பு:**
0212220555,
0771022984,
0777887181

## மரண அறிவித்தல்

### ஜோண் யேசுதாசன் (சூரி)



(உரிமையாளர், சூரி போட்டோ)

குருநகரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் அச்சுக்கூட வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோண் யேசுதாசன் (சூரி) 04.01.2012 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோண் செலினம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இம்மனுவல் மற்றும் ஞானப்பு தம்பதியரின் அன்பு மருமகனும் பிலோமினா வின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அஜிதா மற்றும் ஜெகன் (அன்ரோ எலக்ரிக்கல்), சுரேஸ் (படப்பிடிப்பாளர்), கலிஸ்ரா, தீபன், டினோ ஆகியோரின் பாசமிகு தந்தையும் அனுஷா, சுரேந்தினி, தீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுஷா, ஜெகதா, சரோண், ஜனுசன், கரிஸ், ஆஷா, கஜன் சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (09.01.2012) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்பை அரசு ஏமாற்ற நினைத்தால் பேச்சைத் தொடர்வது குறித்துப் பரிசீலிப்போம்

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 9

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசு ஏமாற்றும் நிலையில் இருந்தால், தொடர்ந்தும் பேச்சை முன்னெடுத்துச் செல்வதா இல்லையா என்பது குறித்து சிந்திக்கவேண்டிவரும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பேச்சுக் குறித்து அரச தரப்புக்குள்ளேயே முரண்பட்ட - மாறுபட்ட கருத்துகள் வெளியிடப்பட்டு வருகின்றன என்றும் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

மேலும், தமிழர்கள் தமது உரிமையை வென்றெடுக்கும்வரை உரிமைப் போராட்டத்தைத் தொடர்வார்கள் என்றும் தமிழர் உரிமையின் சின்னமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளங்குகிறது என்றும் அக்கட்சியின் மட்டு.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலய பிரதம குருவும் மூத்த எழுத்தாளருமான கவிக்குயிலன் சிவஸ்ரீ அ.அரசரெத்தினம் எழுதிய 'எதிர்நீச்சலடிப்போம் ஏமாறாமல் இருப்போம்' கவிதை நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் திருகோணமலை நகராட்சி மன்ற பொதுநூலக கேட்போர் கூடத்தில் கவிஞர் எஸ்.ஆர். தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறியதாவது:-

உண்மையில் 'எதிர்நீச்சலடிப்போம் ஏமாறாமலிருப்போம்' என்ற இந்தக் கவிதை நூலின் தலைப்பு 2012 ஆம் ஆண்டிற்கு மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது. தமிழர்கள் ஏமாறாமல் இருப்பதா? புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் ஏமாறாமல் இருப்பதா? ஜனாதிபதி ஏமாறாமலிருப்பதா? சிங்களவர்கள் ஏமாறாமலிருப்பதா? அமைச்சர்கள் ஏமாறாமல் இருப்பதா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏமாறாமல் இருப்பதா?

நமது இனத்துக்கும், எமது மக்களுக்கும் கிடைக்கவேண்டிய உரிமைகள் கிடைக்கும்வரை எமது உரிமைப் போராட்டம் தொடரும். புலம்பெயர் சமூகம் கூறுகின்ற வார்த்தைகளை இங்கு நாங்கள் கூறமுடியுமா? சிவில் சமூகம் என்ற அமைப்பில் 75 பேர் கையொப்பமிட்டு அறிக்கை ஒன்றை அனுப்பியிருந்தார்கள். அவர்கள் யார், யார் என்பது முக்கியமல்ல. ஆனால், அவர்களின் கருத்தை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

கூட்டமைப்பை உடைப்பதற்கு மைல்கல்லாக சிவில் சமூகத்தின் அறிக்கையைப் பல கட்சிகள் பார்க்கின்றன. 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலுடன் தமிழரின் உரிமைப் போராட்டம் முடிந்துவிட்டது என அரசு நினைத்தது. அதன் பின்னர் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் இருந்து 14 உறுப்பினர்களை எங்கள் தமிழ் மக்கள் நாடாளுமன்றம் அனுப்பினார்கள். அதன் பின்னர் அரசு விழித்துக்கொண்டது.

பொடியப்புக்குப் பிறந்தவர் கட்சி மாறிச் சென்றார் என்பதற்காக அவரைப் போல் மற்றவர்களையும் அரசு நினைத்தால் அது அவர்களின் இயலாமையைத் தான் எடுத்துக்காட்டும். கூட்டமைப்பை எவராலும் உடைக்க முடியாது. தமிழர்களின் உரிமையின் சின்னம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புஎன்பது இன்று அனைவருக்கும் தெரியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசிடம் வித்தியாசமாக எதையும் கேட்கவில்லை. தமிழ் மக்களுக்காக கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட தீர்வையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசிடம் கேட்கின்றது. தந்தை செல்வா காலத்திலும், ஆயுதப் போராட்ட காலத்திலும் எமது உரிமைக்கான போராட்டம் பல வடிவங்களைப் பெற்று வந்துள்ளது.

இன்று நடைபெறும் பேச்சுக் குறித்து அரச தரப்புக்குள்ளே மாறுபட்ட கருத்துகளைக் கூறி வருகின்றார்கள். விடுதலைப் புலிகள் கேட்டதை விட கூடுதலாக கூட்டமைப்பு கேட்கிறது என அரசு கூறுகின்றது. நாங்கள் 60 வருட காலமாகக் கேட்பதைத்தான் இன்றும் கேட்கின்றோம்.

ஜனவரியில் அரசுடன் மூன்றுகட்ட பேச்சுகள் நடைபெற இருக்கின்றன. அதில் அரசு எங்களை ஏமாற்றும் நிலையில் இருந்தால் நாங்கள் பேச்சுகளைத் தொடர்வதைப்பற்றிச் சிந்திக்க வேண்டிவரும். - என்றார். (ஒ-சி)


## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து




சசிகுமார் சுதர்சினி தம்பதியரின்

செல்வப் புதல்வி

**அஸ்விகா**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (09.01.2012) திங்கட்கிழமை கனடாவில் உள்ள அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். அஸ்விகாவை கனடாவில் வசிக்கும் அப்பா, அம்மா, இலங்கையில் வசிக்கும் தாத்தா, பாட்டி, அம்மப்பா, அம்மம்மா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் வாழ்த்துகிறார்கள்.

**வே.தில்லைநாதன்**
*புலோலி தெற்கு, புலோலி.*



## கண்ணீர் அஞ்சலி



நேற்று முன்தினம் (07.01.2012) சனிக்கிழமை யாழ். மாவட்ட செயலக புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் கடமையாற்றும் த.திருக்குமரனின் பாசமிகு தந்தையும் மருதலிங்கம் பிரதீபன் (திட்டப்பணிப்பாளர்) அவர்களின் பாசமிகு மாமனாரும் ஆகிய தாழையடி லேன், திருநெல்வேலியைச் சேர்ந்த

**சுப்பிரமணியம் தம்பிராசா**

அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.
உத்தியோகத்தர்கள்.



## FASHION FANCY & BEAUTY CORNER

*(CENTER OF MODERN WOMAN)*

**பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் (16.01.2012)**

★ பியூட்டிகல்ச்சர்:- பேஷியல் வகைகள், ஒயில் மசாஜ் (தலைமுடிக்கு), பொடுகு சிகிச்சை, பேர்மிங், ஸ்ரெயிற்னிங், மெனிகியூர், பொடிகியூர், ஹெயார் கலரிங், இமை சீர் செய்தல், வக்சிங்.

★ மணப்பெண் அலங்காரம் & முக ஒப்பனை அனைத்து வகையான ஹெயர்ஸ் டைல் வகைகள்

இவ் இரண்டு வகையான பயிற்சியினையும் மேற்கொள்ளும் மாணவியருக்கு நகை அலங்காரமும், பொக்கே, ஹெயர் ஸ்பிரே செய்யும் முறை இலவசமாகக் கற்பிக்கப்படும்.

*இப் பயிற்சி வகுப்புக்கு மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே தெரிவு செய்யப்படுவர். ஆகவே முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.*

★ பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

*NOTE:- FACIAL PACKAGE KIT*இல் இணைந்தால் வருட முடிவில் ரூபா 2000 பெறுமதியான *FACIAL* இலவசமாக செய்யமுடியும்.

297 A, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

0773530691

நிர்வாகி
திருமதி செந்தூரன் ஜெயவாணி


# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கொள்ளை முயற்சி

கொழும்பு, ஜன. 9

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வாயிலில் இலங்கை இராஜதந்திரியான பெண்மணி ஒருவரிடம் கொள்ளையடிக்க முயற்சித்த சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

பத்தேகம நகருக்குச் செல்லும் வாயிலை நோக்கிச் சென்ற போதே இந்த கொள்ளை முயற்சி இடம்பெற்றுள்ளது.

இந்தக் கொள்ளை முயற்சியில் சுமார் மூன்று அல்லது நான்கு பேர் ஈடுபட்டதாக அந்த இராஜதந்திரி தெரிவித்துள்ளார்.

சிறிய கார் என்பதால் தப்பிச் செல்ல முடிந்தது. திரும்பிப் பார்த்த போது, இந்த குழுவில் மேலும் இரண்டு பேர் கோடாரி மற்றும் கத்தி போன்ற ஆயுதங்களுடன் காணப்பட்டனர் என இலங்கை இராஜதந்திரி மேலும் தெரிவித்தார்.

கொள்ளைச் கோஷ்டியினர் வீதியின் நடுவில் மரகுற்றியொன்னை வைத்திருந்தனர். இதனையடுத்து வாகன வேகத்தை குறைத்த போது இருவர் வந்து வாகனத்தின் கண்ணாடியை தட்டினர் என அவர் குறிப்பிட்டார். (ஒ-10)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா நாகராசா

ஆறுமுகம் வீதி, சுன்னாகம் மேற்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னையா நாகராசா நேற்று (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும் மயூரகாந் (கிளை முகாமையாளர், அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்), மயூரதனி (ஆசிரியர், புளியங்குளம் மகா வித்தியாலயம்), கவாகாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2012) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆறுமுகம் வீதி,*
*சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்லர் சின்னத்துரை



காளிகோயிலடி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் சின்னத்துரை நேற்று (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் இந்திராணியின் (பாமா) அன்புக் கணவரும் விஜயகுமார் (பவுன்ராசா), விசி, விஜிதா, வினோத், சந்திரன் (குவைற்), விசயன் (குவைற்), விஜயகாந்தன், விஜயகர்னன், விஜயரூபன் (டோகா), வினோஜா (லண்டன்), விஜிதரன் (டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2012) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளி கோயிலடி,*
*உடுவில், சுன்னாகம்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### திருமதி தேவதாஸ் செந்தமிழ்ச்செல்வி



புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவதாஸ் செந்தமிழ்ச்செல்வி நேற்று (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தேவதாசின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் கெங்காலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சிந்துஜன், கபிலன், தர்சிகா ஆகியோரின் பாசமிகு தாயும் கேதீஸ்வரன், செந்தில்நாதன், காலஞ்சென்ற ஜெயராமன் மற்றும் ஜெயலலிதா, ஜெயசீலன், ஜெயவதனா, ஜெயதாசன் ஆகியோரின் சகோதரியும் தேவி, ராணி, பாபு (ஜேர்மன்), சிவா (கனடா), ஆத்தை (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2012) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக புளியங்கூடல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புளியங்கூடல் தெற்கு,*
*ஊர்காவற்றுறை*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகள் 8 பேரையும் விடுவிக்காவிடின் போராட்டம்

சென்னை, ஜன.9

தமிழகம், ஜகதாபட்டினம் கடற்கரையில் அகதிகளாக வந்தடைந்த ஈழத் தமிழர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி சிறையில் அடைத்திருப்பது மனிதாபிமானமற்ற, கொடூரமான நடவடிக்கை என்று நாம் தமிழர் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நாம் தமிழர் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சிறு பிள்ளைகளுடன் உயிர் பிழைக்க தமிழ்நாட்டிற்கு வந்தவர்களை நீதிமன்றத்தில் நிறுத்திய தமிழக காவல்துறையின் நடவடிக்கை நாகரிகமற்றது, இரக்கமற்றது என்பது மட்டுமின்றி, பன்னாட்டு மனித உரிமைப் பிரகடனங்களுக்கும் எதிரானதாகும்.

ஒரு வயது குழந்தை உட்பட மூன்று சிறுமிகளுடன் வந்திறங்கிய இரண்டு குடும்பத்தைச் சேர்ந்த 8 பேரும், அறந்தாங்கி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு, வெவ்வேறு சிறைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு அடைக்கப்பட்டுள்ளனர் என்று செய்தியைக் கேட்டபோது நெஞ்சம் பதறுகிறது.


இலங்கையில் இன்றுவரை தொடரும் சிங்கள பௌத்த அரசின் கொடுமைகளுக்கு எதிராகப் போராடக் கூடத் தெம்பின்றி, சர்வதேசம் தலையிடாத காரணத்தினால் மௌன வலியுடன் எல்லா அடக்குமுறைகளையும் சகித்துக்கொண்டு நம் சொந்தங்கள் ஒவ்வொரு நாளும் செத்துக்கொண்டிருக்கின்றன.

சாப்பாட்டிற்கே வழியற்ற நிலையில், பாதுகாப்பிற்காகவும், பிழைக்க வழிதேடியும் தங்களின் இன்னொரு தாய் மண்ணான தமிழ் நாட்டிற்கு அகதிகளாக வருவது கூட குற்றமாகுமா ?

அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு, உண்மையை அறிந்த பிறகும், அவர்களை ஏதாவது ஒரு அகதிகள் முகாமிற்குக் கொண்டு சென்று மனிதாபிமான உதவிகளைச் செய்யாமல், நீதிமன்றத்தில் நிறுத்தி, குடும்பத்தினரைப் பிரித்து சிறையில் அடைக்கிறது தமிழகக் காவல்துறை என்றால், அது அகதிகளை கையாளும் பன்னாட்டுப் பிரகடனங்களை அவமதிக்கிறது என்றல்லவா பொருள்.

தமிழக காவல் துறையின் இந்த கொடூரமான, நாகரிகமற்ற நடவடிக்கையை தமிழக அரசு தடுத்தி நிறுத்தி, சிறையில் அடைக்கப்பட்ட நம் சொந்தங்கள் 8 பேரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி வேண்டுகோள் விடுக்கிறது.

அவர்கள் விடுதலை செய்யப்படவில்லையென்றால், நாம் தமிழர் கட்சி தமிழகம் முழுவதும் போராட்டம் நடத்தும் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக விளக்கம் அளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று களனிப் பிரதேச சபையில் நடைபெற்றது. இதன் போது அமைச்சர் மேர்வின் சில்வாவின் நடவடிக்கை தொடர்பில் விசாரிப்பதற்கு ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

# தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை தோற்கடிக்கும் முயற்சியில் ஜே.வி.பி.

கொழும்பு, ஜன.9

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள ஜே.வி.பி., அதனை தோற்கடிப்பதற்கு அனைத்து நடவடிக் கைகளும் முன்னெடுக்கப்படும் என்றும் சூளுரைத்துள்ளது.

சர்வதேச ரீதியில் கிளம்பும் எதிர்ப்புகளைச் சமாளிப்பதற்காகவே அரசு நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தது எனக் குற்றஞ்சாட்டியுள்ள அக்கட்சி, வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கையை இயல்புநிலைக்குக் கொண்டு வந்தாலேயே அடிப்படைப் பிரச்சினைகள் தீரும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு பத்தரமுல்லையிலுள்ள அதன் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்ட முறைமையை மாற்றியமைப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது என அறியமுடிகின்றது.

மக்களுக்குள்ள ஜனநாயக உரிமைகளை சட்டமூலமொன்றை சமர்ப்பித்து, சட்டரீதியாகப் பறித்துக் கொள்வதற்கு அரசு முயற்சிக் கின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஒரு சதவீதமான வேட்புமனுக்களை 33 வயதுக்குட்பட்ட இளைஞர்களே தாக்கல் செய்ய வேண்டும். தேர்தல் திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக அதுமாற்றியமைக்கப்படவுள்ளது.

குடும்ப அரசியல் ஆதிக்கம் மூலம் ஸ்ரீல.சு.க., ஐ.தே.க. ஆகிய கட்சிகளின் முக்கியஸ்தர்களைத் தவிர, சாதாரண இளைஞர்களுக்கு அரசியல் செய்யமுடியாத நிலைமை ஏற்படப்போகின்றது.

களனி அரசியல் சாக்கடையாக மாறியுள்ளது. அமைச்சருக்கும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கும் இடையிலான தர்க்கத்தால் கப்பம் பெறும் விடயம் அம்பலமாகியுள்ளது.

மீன் சந்தையில் கப்பம் பெற்றனர்; மதுபானசாலையில் கப்பம் பெற்றனர் என முன்னுக்கு முரணான கருத்துகளை அமைச்சரும், உறுப்பினர்களும் வெளியிடுகின்றனர். அப்படியானால், விருப்பு வாக்கு முறை இதற்கு எவ்வாறு தாக்கம் செலுத்தும்?

அரசால் சமர்ப்பிக்கப்படவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தின் பிரகாரம் 51 சதவீதமான வாக்குகளைப் பெறும் கட்சிக்கோ அல்லது கூட்டமைப்புக்கோ 70 சதவீதமான பிரதிநிதித்துவம் வழங்கப்படவுள்ளன. அதேவேளை, 49 சதவீத வாக்கு களைப் பெறும் கட்சிக்கோ அல்லது கூட்டமைப்புக்கோ 30 சத வீதமான பிரதிநிதித்துவமே கிடைக்கும். இது எந்த வகையில் நியாயம்? - என்றார். (ஒ-சி)

# கால அவகாசம் குறித்து கவனம் செலுத்தாத பொலிஸார்

## வாகன சாரதிகள் அவலம்

யாழ்ப்பாணம், ஜன.9

இந்த வருடத்துக்கான வாகன வருமான வரிச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள எதிர்வரும் மார்ச் 3 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் வாகனங்களை மறித்து சோதனையிட்டு ''ஏன் வரிச் சான்றிதழ் எடுக்கவில்லை?'' எனக் கேட்டு அச்சுறுத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பல இடங்களிலும் பொலிஸார் வாகனங் களை நிறுத்தி கேட்கின்றனர் என்பதை எமது செய்தியாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

இதேவேளை -

வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி, ஏற்கனவே மார்ச் 31 ஆம் திகதி வரையான கால அவகாசம் குறித்து வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களினதும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் அறிவித்திருந் தார்.

எனவே,போக்குவரத்துப் பொலிஸார் வீதிகளில் வாகன வரிச் சான்றிதழைப் பரீட்சிக்கும் போது, இந்தக் கால அவகாசம் குறித்து கவனத்தில் கொள்ள வேண்டும் என்று வடமாகாண பிரதம செயலாளர் அறி வுறுத்தியுள்ளார்.

(ஒ-14-115)

# போதைப் பொருள்: 40 ஆயிரம் பேர் கைது

நாட்டின் கடந்த வருடம் பல பாகங்களிலும் போதைப் பொருள் கடத்தல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டின் பேரில் 39ஆயிரத்து 812 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பெருந்தொகையான பலவகை போதைப்பொருள்களும் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊட கப்பேச்சாளர் அஜித்ரோகன தெரிவித்தார்.

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 39 ஆயிரத்து 600 சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அவர்களிட மிருந்து ஒரு லட்சத்து 38 ஆயிரத்து 964 கிலோ கஞ்சாவும், 39 கிலோ ஹெரோயினும், 11 கிலோ கொக்கைனும் 19 கிலோ, வேறுவகையான போதைப் பொருள் 2 கிலோ போதை பொருள்களுமே கைப்பற்றப்பட்டுள்ளன.

# சர்வதேச பிடிக்குள் இலங்கையை சிக்கவைக்க கூட்டமைப்பு சூழ்ச்சி

1 »

கும் தீய சக்தியாகக் கூட்டமைப்பு உருவெடுத்து வருகின்றது. எனவே, அரசு அதை உடனடியாகத் தடைசெய்யவேண்டும். இது காலத்தின் கட்டாயமாக மாறிவிட்டது.

அரசு, கூட்டமைப்பை தடை செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்காது தொடர்ந்தும் மௌனம் காத்தால், அது நாட்டுக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது உறுதி எனக் கூறினார் கலாநிதி குணதாச அமரசேகர. (ஒ-சி)

# தமிழரின் விடுதலை இயக்கமாக அங்கீகரித்து எம்மை அழைத்தது தென்னாபிரிக்க அரசு

1 »

பேரவையின் பிரதிநிதிகளும் விழாவில் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக உழைக்கும் இயக்கமாக அங்கீகரித்து தமக்கு தென்னாபிரிக்கா இந்த அழைப்பை விடுத்திருந்தது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தமிழோசையிடம் தெரிவித்தார்.

தென்னாபிரிக்க விடுதலைத் தலைவர் நெல்சன் மண்டேலாவின் உடல்நிலை காரணமாக அவரால் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை. நிறவெறியின் முடிவில் கட்சியை ஆட்சி அதிகாரத்தை நோக்கி கொண்டு வழிநடத்திய, 93 வயதான நெல்சன் மண்டேலா அண்மைக் காலமாக பொது நிகழ்வுகள் எதிலும் கலந்துகொள்ளவில்லை.

ப்ளூம்பொன்டீன் நகர திருச்சபைக்கு முன்பாக தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா ஏற்றி வைத்த நூற்றாண்டு விடுதலைத் தீபம் அருகே உள்ள சுதந்திர அரங்கத்திற்கு கொண்டு செல்லப் பட்டது.

# ஜெனிவா ஐ.நா. சபைக்கூட்டத் தொடரில் இலங்கையை ஆபிரிக்கா எதிர்க்கும்

1 »

கலந்துரையாடினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**அழைப்பை நிராகரித்தது இலங்கை**

இதேவேளை, தென்னாபிரிக்காவை ஆளும் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் நூற்றாண்டு விழாவுக்கு விடுக்கப்பட்ட அழைப்பை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

இலங்கை அரசுக்கு சமமாக உலகத் தமிழர் பேரவைக்கும் அதிகாரபூர்வ இடம் ஒதுக்கப்பட்டதாலேயே, இந்த நிகழ்வைப் புறக்கணித்ததாக இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன.

இல்லையேல், வெளிவிவகார அமைச்சர் ஜி.எஸ் பீரிஸ் இந்த நிகழ்வில் பங்கேற்றிருப்பார் என்றும் கூறப்படுகிறது.

(உ-சி)

# ஒட்டகப்புலம் காணி அபகரிப்பு; மக்கள் தரப்பில் கடும் எதிர்ப்பு

1 »

பார்த்ததும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் இருந்தது. உரிய அதிகாரிகள்தான் இது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுத்து [illegible] அவர் கோரிக்கை விடுத்தார். (உ)

# கொழும்பிலிருந்து வைத்தியக்குழ வருகை

1 »

கொண்டுள்ளனர்.

நேற்று மாலை யாழ். போதனா வைத்தியாசாலைக்கு வந்து மேற்படி குழுவினர் இனந்தெரியாத காய்ச்சலுக்குரிய நோய் காரணியை கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். இருப்பினும் நேற்றிரவு எந்த முடிவுகளும் எடுக்கப்படவில்லை என்று யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-15-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. விடைத்தாள் மீள் திருத்தம் ஒரு லட்சம் மாணவர் விண்ணப்பம்

ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சை விடைத்தாள் மீள் திருத்தத்திற்காக சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு சுமார் மூன்று இலட்சம் பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இவர்களில் ஒரு இலட்சத்து 42 ஆயிரம் பேர் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்துள்ளனர்.

பெறுபேறுகளின்படி மாவட்ட தரநிலைகளில் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் குறித்து பல்வேறு தரப்பினரிடமிருந்தும் பல முரண்பாடான கருத்துகள் வெளியாகியுள்ளன.

அதனடிப்படையில் பரீட்சார்த்திகள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 29ஆம் திகதியில் இருந்து எதிர்வரும் 17 ஆம் திகதி வரைக்கும் விடைத்தாள்களை மீள்திருத்தம் செய்வதற்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்காக மூன்று பாடங்களுக்கும் சேர்த்து 750 ரூபாவை அறவிட வேண்டும் எனவும் பரீட்சைகள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் பலர் விடைத்தாள்களைமீள்திருத்தம்செய்வதற்கான விண்ணப்பித்துள்ளனர்.

இது தொடர்பிலும் ஜனாதிபதி விசேட குழுஆராய்ந்துவருகின்றது.

ஐடியல் அக்கடமி
சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய்.
ஆரம்பம் 14.01.2012 பி.ப. 3 மணி
A/L 2014
கலைப்பிரிவு
யாழ். நட்சத்திரங்களின் புதிய சங்கமம்
தமிழ் : பத்மநாதன்
அரசியல் : கோகுலன்
வரலாறு : சந்திரன்
புவியியல் : ஆனந்தராஜா
இ.நாகரிகம் : ஸ்ரீஸ்
அளவையியல் : பவான்
நாட.அரங்கியல் : ரமேஸ்
பொருளியல் : பிரபல ஆசிரியர்
A/L Day Class பி.ப. 4 மணி
A/L 2014
நிர்வாக இயக்குநர்,
V.N. பத்மநாதன் (கணித ஆசிரியர்)

# இன்ரபோலிடம் கே.பி. குறித்து தகவல் கொடுக்கப் போகிறேன் - ஜயலத் எம்.பி.

விடுதலைப் புலிகளின் முன்னாள் ஆயுதக் கொள்வனவாளரான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் இலங்கையில் தங்கியிருப்பதாக சர்வதேச பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப் போகிறேன் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

சர்வதேச பொலிஸாரால் தேடப்படுவோரின் பட்டியலில் கே.பியின் பெயர் உள்ளது. அவர் இலங்கையில் தங்குவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. ராஜீவ் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கே.பி. இந்தியாவால் தேடப்படுகிறார்.

சென்னை பொலிஸ் ஆணையாளரைச் சந்தித்து கே.பி இலங்கையில் தங்கியிருக்கின்ற விடயத்தைக் கூறியுள்ளேன். இது பற்றிய ஆவணம் ஒன்றையும் அவரிடம் கையளித்துள்ளேன். ஆனால்சென்னை பொலிஸார் எந்தப் பதிலையும் வழங்கவில்லை என்றும் ஜயலத் ஜயவர்த்தன மேலும் கூறியுள்ளார்.

### சென்னையில் விபத்து கிளிநொச்சிப் பெண் படுகாயம்

சென்னையில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவம் ஒன்றில் கிளிநொச்சியைச் சேர்ந்த பெண் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த 35 வயதுடைய முந்தன் நந்தினி என்ற பெண் சென்னை கிழக்குக் கடற்கரை வீதியில் உள்ள கல்லூரி ஒன்றிற்கு தனது பிள்ளைகளை விட்டுவிட்டு வீதியைக் கடக்க முற்பட்டபோது மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்துக்குள்ளானார்.

சம்பவத்தில் படுகாயம் அடைந்த அவர் தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனவும் அவரது கால் முறிவடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ACADEMY OF LOGIG
புவியியல்
P.S.V. திலேஸ்
A/L DAY CLASS வகுப்புகள்
திங்- வெள்ளி வரை 10.30 - 11.30
NOTE: மேற்படி நிறுவனத்தில் மட்டுமே எனது வகுப்பு நடைபெறும்.
தொ.பே.: 0777906331

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Technology & Research
MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643
தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
Special Classes
* Internet & e-mail (Workshop)
* Dip.in PC Application & Office Management
* Dip.in Desktop Publishing
விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம - 18-01-12
வார இறுதி நாள் வகுப்புகள் ஆரம்பம் ∴ 21.01.2012
Centre for Information Technology
-Executive Officer-

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
2011 December G.C.E O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு விசேட கட்டணக்கழிவு வழங்கப்படும்
Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புகள் உண்டு.
O/L பரீட்சை எழுதிய மாணவாகளுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months
Diploma In English (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
IELTS (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
We guarantee minimum band 5.0 Upwards
A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◊ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◊ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◊ 2012 April இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தராதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்கு முன் உங்களை பதிவு செய்யுங்கள்.
◊ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◊ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
அனைத்துப்பிரிவுகளும் ஆரம்பமாகின்றன
Batch I 04.01.2012 9.00 a.m
Batch II 04.01.2012 11.00 a.m
Batch III 07.01.2012 3.00 p.m.
Batch IV 07.01.2012 4.00 p.m.
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vaiavarpulliam Kulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

G.A.Q, B.A
(யாழ்ப்பாணம், பேராதனை)
தமிழ்
திரு. சி. சிவலிங்கராஜா
(இளைப்பாறிய தமிழ்த்துறைப் பேராசிரியர்)
BEACON
பட்டப்படிப்புக்கள் பிரிவு
யாழ்நகர் - வெலிங்டன் சந்தியடி
அனுமதிகளை உடன் பதிவு செய்யுங்கள்.

பொங்கல் திருநாளை முன்னிட்டு எமது அதிரடி விலைச்சலுகை
Intel 3.0 GHz 3 Year
Astrock Mother Board 3 Year
2GB DDR3 RAM 3 Year
80GB H.D.Drive 1 Year
19" LED Monitor 3 Year
ATX Casing 1 Year
PS2 Keyboard 1 Year
O/P Mouse 1 Year
Lite On DVD Writer 1 Year
DCP UPS 1 Year
Dongle HUAWEI
Sim Card
Head Phone A4Tech
Webcam A4Tech
42000/=
Unlimited Internet Service Ready
இச்சலுகை பொங்கல் வரை மட்டும்

ASUS CORNER
108, Luxan Plaza, Navalar Road, Jaffna.
T.P No:- 021 222 1048, 021 492 1183

THE SCIENCE POINT
KANNATHIDDY - JAFFNA
2012 A/L DAY CLASS
புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டது
BIOLOGY - பொன்.திவாகரன்
MON TO FRI - 6.30-7.45 AM
CHEMISTRY - அன்டர்
MON TO FRI - 11.30-1.00 PM
COM . MATHS - சிவகரன்
SAT, SUN - 4.30-6.00PM
PHYSICS - செல்வன்
MON, THU - 2.30-4.00PM
SAT, SUN - 3.00-4.30PM
விரைவில் அலகு ரீதியான மீட்டல்

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு...
இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட மிக உயர்தரமான, சுத்தமான கட்டி வெல்லம், தூள் சர்க்கரை போன்றவற்றை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதனை எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
V.S.B ரேடிங் கொம்பனி (தனி) நிறுவனம்
VSB Trading company (pvt) Ltd
140, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
TP:- 021 222 7195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.